Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.

30°C 28°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 213 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 13, வியாழன் 27.06.2013


**இந்தியா**



பக். 06

ஈழப் பிரச்சினையை
மறந்ததா தி.மு.க.?
அன்புமணி ராமதாஸ் காட்டம்

**உலகம்**



பக். 07

தென்கொரியா மீது
இணையத் தாக்குதல்

**விளையாட்டு**




பக். 23

மன்னிக்கவும் மரியா

# சதி செய்வோரே வெளியேறுங்கள்

## யாருடைய தயவும் தேவையில்லை எனக்கு
## ஆளும் கட்சிக் கூட்டத்தில் மஹிந்த சீற்றம்

கொழும்பு, ஜூன் 27
''அரசின் கொள்கைகளையும், தீர்மானங்களையும் ஏற்றுக்கொண்டு அரசில் இருப்பவர்கள் இருக்கலாம். அதில் முரண்பாடு இருப்பவர்கள் உள்ளிருந்து சதி வேலைகளைச் செய்யாமல் விரும்பிய நேரத்தில் வெளியேறலாம். அதற்கு எதுவித தடைகளும் கிடையாது.''
– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.நேற்றுக்காலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஆளுங்கட்சிக் கூட்டத்தின்போதே அவர் இதனை வலியுறுத்தி உள்ளார்.
மேலும், மூன்றிலிரண்டு பெரும்பான்மைப்பலம் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக நாட்டுக்குத் தேவையானவற்றைச் செய்வதற்கு எவரின் உதவியையும் நாடி, அதில் தங்கியிருக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.
'13'ஆவது திருத்தம் தொடர்பிலும், அதன் முக்கியமான அதிகாரங்களின் நீக்கம் குறித்தும் மாகாணசபைகளில் அரசுக்கு ஆதரவாகப் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில், ஆளுங்கட்சியின் பங்காளிகள் மாகாணசபைகளில் அதனை ஆதரிக்கத் தயங்குவது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தக் கூட்டத்தில் கடும் விசனத்தைத் தெரிவித்துள்ளார்.



''அரசு எடுக்கும் தீர்மானத்துக்கு ஆதரவைத் தெரிவித்துவிட்டுப் பின்னர் வெளியில் சென்று அரசுக்கு எதிராகப் பேசுவது ஏற்றுக்கொள்ள முடியாதது.
அரசுக்குள் இருந்துகொண்டே அரசுக்குக் குழிபறித்த பலவான்களை நான் வெளியேற்றியிருக்கிறேன். எனவே, உள்ளிருந்து சதி வேலைகளில் ஈடுபடும் எவரையும் நான் மன்னிக்கமாட்டேன். அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் பின்னிற்கப்போவதில்லை'' – என்ற சாரப்பட ஜனாதிபதி இங்கு தெரிவித்துள்ளார். (த-சி)

## தமிழினி விடுதலை



வவுனியா, ஜூன் 27
தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளராக இருந்த தமிழினி புனர்வாழ்வு நடவடிக்கைகளின் பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார்.
தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இறுதிக் கட்டப் போரின் பின்னர் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த வேளை தமிழினி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுப் புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டிருந்தார்.
வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வை முடித்துக் கொண்ட தமிழினி என்று அழைக்கப்படும் சிவசுப்பிரமணியம் சிவகாமி நேற்று அவரது தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.
இதேவேளை, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அரசின் சார்பில் போட்டியிடவுள்ளதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-5)

## பதவியைத் துறந்தார் ஆஸ்திரேலிய பிரதமர்



கான்பரா,ஜூன் 27
ஆஸ்திரேலியா பிரதமர் பதவியிலிருந்து ஜுலியா கில்லாட் நேற்று விலகினார்.
ஆஸ்திரேலிய தொழிலாளர் கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தல் நேற்றுப் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.
இதில் தோல்வியடைந்ததை அடுத்தே பிரதமர் பதவியிலிருந்து ஜுலியா கில்லாட் விலகியுள்ளார். இந்தத் தேர்தலில் கெவின் ரூட் 57 வாக்குகளையும் ஜுலியா கில்லார்ட் 45 வாக்குகளையும் பெற்றனர். (த)

## போர்க்குற்ற விசாரணைக்கு இலங்கை எப்போதும் தயார்

### ஆஸியில் கூறினார் ஜி.எல். பீரிஸ்

சிட்னி, ஜூன் 27
போர்க்குற்றச் சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை எதிர்கொள்வதற்கு இலங்கை அரசு தயாராகவே இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஆஸ்திரேலியாவில் வைத்து தெரிவித்துள்ளார்.
''இறுதிப்போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் நம்பகமான, நடுநிலையான விசாரணை நடத்த ஐ.நா.



மனித உரிமைகள் சபை அழைப்புவிடுத்தது இலங்கை அரசுக்கும் மகிழ்ச்சி'' என்று ஜி.எல்.பீரிஸ் அங்கு குறிப்பிட்டுள்ளார்.
அவர் இது குறித்து மேலும் கூறியதாவது:-
இறுதிக்கட்டப் போர்க் குற்றச்சாட்டு தொடர்பில், சாட்சியங்கள் உள்ள பல சம்பவங்கள் குறித்து ஏற்கனவே விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. வதந்திகள், பொறுப்பற்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் விசாரணை செய்ய முடியாது.
ஆதாரங்கள் உள்ள குற்றச்சாட்டுகள் குறித்து நீதிமன்றச் சட்டங்களின் படி விசாரணைகள் நடத்தப்படும். நாம் விசாரணைகளுக்கு தயாராகவே உள்ளோம் – என்றார். (த-5)

## சித்திரவதைக்கு பழகிப்போயினர் இலங்கை மக்கள்

கொழும்பு, ஜூன் 27
இலங்கை மக்கள், சித்திரவதைகள் குறித்த விடயங்களுக்கு முழுமையாகப் பழகிப் போய்விட்ட நிலைமை காணப்படுவதாகச் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஐ.நாவின் சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு நேற்று புதன்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களில் பலர் தமக்கு என்ன நடந்தது என்பதை இன்னமும் நம்ப முடியாத நிலையில் உள்ளனர்.
விசாரணைகளின் போது இலங்கைப் பொலிஸார் பிறப்பு உறுப்பில் மிளகாய்த் தூளை வீசிச் சித்திரவதை செய்து விசாரணை நடத்தியுள்ளனர். இலங்கை மக்கள் இப்படியான சித்திரவதைகள் குறித்த விடயங்களுக்கு முழுமையாகப் பழகிப் போய்விட்ட ஒருவித நிலை காணப்படுகிறது என மன்னிப்புச் சபை மேலும் கூறியுள்ளது. (த-5)

## கிழக்கு அரியாலையில் உல்லாசமான கடற்கரை

### அமைக்க நல்லூர் பிரதேச சபை முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 27
கிழக்கு அரியாலையில் உல்லாசப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் 'பீச்' ஒன்றை அமைப்பதற்கு நல்லூர் பிரதேச சபை தீர்மானித்துள்ளது.
இது தொடர்பான தீர்மானம் கடந்த 18ஆம் திகதி இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.
முதற் கட்டமாகப் பிரதேச சபைத் தலைவர், செயலாளர், பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் அரியாலைக்குச் சென்று இடத்தைப் பார்வையிட்டுள்ளனர்.
அத்துடன் கடற்கரைப் பகுதி

தொடர்ச்சி: பக்கம் 21

## அதிகாரப் பகிர்வு தொடர்பில் சிங்களவர்களுக்கு விளக்கம்

### அனைவரையும் அழைக்கிறார் மனோ

கொழும்பு, ஜூன் 27
அதிகாரப்பகிர்வு என்பது இறக்குமதி செய்யப்பட்ட மேற்குலக – வெளிநாட்டுச் சிந்தனை என்பது வெட்கங்கெட்ட பச்சைப் பொய். இந்த உண்மையை நாம் சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு சென்று கொண்டிருக்கிறோம்.
இந்தக் கடின பணிக்கு நாட்டில் வாழும் சகலரும் மற்றும் புலம் பெயர்ந்த தமிழர்களும் உதவி செய்ய வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம்

தொடர்ச்சி: பக்கம் 21

## ராஜீவ் காந்தி படுகொலை இந்திய – ரஷ்ய கூட்டுச் சதி

### ரஷ்யப் பத்திரிகை பரபரப்புத் தகவல்

மொஸ்கோ,ஜூன் 27
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவம் இந்திய– ரஷ்யக் கூட்டுச் சதியின் பிரகாரமே நடைபெற்றது என ரஷ்யப் பத்திரிகையொன்று பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளது.
ரஷ்யாவில் வெளிவரும் முன்னணிச் செய்திப் பத்திரிகைகளில் ஒன்றான'

தொடர்ச்சி: பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த அரசுக்கு எதிராக சந்திரிகா-பொன்சேகா கூட்டு

## வடமேல் மாகாணத் தேர்தலில் ஒன்றாகக் களமிறங்கத் திட்டம்

கொழும்பு,ஜூன் 27
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கும் நோக்கில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடன் இணைந்து அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் ஒரு கட்டமாக எதிர்வரும் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் சரத் பொன்சேகாவின் தலைமையிலான கட்சியின் சார்பில் சந்திரிகாவுக்கு நெருக்கமான சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்களும் போட்டியிடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.





இலங்கையில் ஆகக் கூடுதலான இராணுவத்தினர் வசிக்கும் பிரதேசம் என்பதால் குருநாகல் மாவட்டத்தில் தமது கூட்டணி இலகுவாக வெற்றிபெறும் என இவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

இது தொடர்பான பல சுற்றுப் பேச்சுக்கள் சந்திரிகாவின் ஹொரகொல்லை இல்லத்தில் நடைபெற்றதாகவும் அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

இதேவேளை-
ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் கோடிக் கணக்கில் சம்பாதிப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்க முடியவில்லை. நாட்டை அபிவிருத்தி செய்ய அதிகளவு மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்க வேண்டும். எனினும், மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க தேவையான அளவு பணமில்லை. சிறந்த பொருளாதாரத் திட்டமொன்றை உருவாக்கியிருந்தோம். லஞ்ச ஊழல் மோசடிகளை இல்லாதொழிக்க திட்டம் வகுத்திருந்தோம். இன்று முன்னெடுக்கப்பட்டு வரும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நானே திட்டமிட்டேன் என அவர் மேலும் கூறியுள்ளார். (த)

# மஹிந்த அரசைக் கண்டித்து தமிழக மாணவர்கள் போராட்டம்

சென்னை, ஜூன் 27
'இனப் படுகொலையாளனான இலங்கை ஜனாதிபதியை உலக நாடுகள் தண்டிக்க வேண்டும்' என்று வலியுறுத்தி தமிழ் நாட்டு மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டம் பேரெழுச்சியுடன் நடைபெற்று வருகின்றது.

கடந்த 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஒற்றை ஆட்சி முறையில் இன அழிப்பு மேற்கொள்ளும் மஹிந்தவோடு ஈழத் தமிழர்கள் இனியும் இணைந்து வாழ முடியாது. அவர்களுக்கு நீதி வேண்டும். இனப்படுகொலையாளனான இலங்கை ஜனாதிபதி தண்டிக்கப்பட வேண்டும்.

இலங்கைப் பொருள்களை தமிழக மண்ணில் விற்கவோ, வாங்கவோ கூடாது ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி பொது இடங்களில் பதாகைகள் தாங்கிய பிரசாரம், வீதி நாடகம், கருத்தரங்கம் மூலம் விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

> “ இலங்கைப் பொருள்களை தமிழக மண்ணில் விற்கவோ, வாங்கவோ கூடாது ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தினர்

கடந்த 22 ஆம் திகதி சென்னையிலிருந்து மோட்டார் சைக்கிள்களில் தமது விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஆரம்பித்த மாணவர்கள் தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களான காஞ்சிபுரம், செய்யாறு, தர்மபுரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், பொள்ளாச்சி, உடுமலைபேட்டை, பழனி, மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, திருநெல்வேலி, நாகர் கோயில், கன்னியாகுமாரி, இராமநாதபுரம், இராமேஸ்வரம், புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, சிதம்பரம், புதுச்சேரி வழியாக சென்று மீண்டும் சென்னையை அடையவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-5)

# போஷாக்கு விநியோகத்தில் முறைகேடு நடந்தால் அறிவிக்குக

யாழ்ப்பாணம்,ஜூன் 27

கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான போஷாக்கு உணவுப் பொருள்கள் விநியோகத்தின் போது ஏதாவது முறைகேடுகள் நடந்திருந்தால் அதுகுறித்து உடனடியாக யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்துக்கு அறிவிக்குமாறு அதன் உதவி ஆணையாளர் கோரியுள்ளார். கடந்த ஐந்து மாதங்களுக்குமான பொருள்களைத் தாய்மார்கள் பார்வையிட்டு உறுதிப்படுத்திய பின்னரே பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கூறியுள்ளார்.

இந்தப் பொருள் விநியோகத்தில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் அது குறித்து உடனடியாக அறிவிக்குமாறும் அவர் பயனாளிகளிடம் கோரியுள்ளார்.

தாய்மார்களுக்கான இந்த நிவாரணத்துக்கு ஐந்து கிலோ அரிசி, 500 கிராம் பருப்பு, 450 கிராம் கடலை, மூன்று முட்டைகள் என்பன விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (த-17)

# 168 பட்டதாரிப் பயிலுநருக்கு இன்று கொழும்பில் நியமனம்

கொழும்பு,ஜூன் 27
வடக்கு-கிழக்கு மாகாணங்கள் உட்பட 16 மாவட்டங்களில் சமூக சேவைகள் அமைச்சின் கீழ் பணியாற்றுவதற்காக 168 பட்டதாரிப் பயிலுநர்களுக்கு இன்று வியாழக்கிழமை கொழும்பில் வைத்து நியமனம் வழங்கப்படவுள்ளதாகச் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த வருடம் பட்டதாரிப் பயிலுநர்களாக அரச சேவைக்குள் உள்வாங்கப்பட்டவர்கள் ஒவ்வொரு அமைச்சுக்கும் உள்வாங்கப்பட்டு வருகின்றார்கள்.

இந்த வகையில் சமூக சேவை அமைப்பும், ஒவ்வொரு பிரதேச செயலர் ரீதியாக தனது அமைச்சுக்கு ஒவ்வொரு பட்டதாரிப் பயிலுநர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோண மலை ஆகிய வடக்கு-கிழக்கைச் சேர்ந்த 7 மாவட்டங்களுக்கும், அனுராதபுரம், பொலநறுவை, மாத்தளை, மாத்தறை, அம்பாந்தோட்டை, களுத்துறை, பதுளை, நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலுமே இந்த 168 நியமனங்களும் வழங்கப்படவுள்ளன.



கொழும்பிலுள்ள சமூக சேவைகள் அமைச்சில் வைத்து இன்று பிற்பகல் 1.30 மணிக்கு சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா இந்த நியமனங்களை வழங்கவுள்ளார்- என்றார். (த-5)

## சமூக சேவைகள் அமைச்சினால் வாழ்வாதார உதவி

கொழும்பு,ஜூன் 27
பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டுள்ள குடும்பங்களுக்கு சமூக சேவைகள் அமைச்சினால் சுயதொழில் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதாக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

பிள்ளைகள் தாயில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்குச் சமூக சேவைகள் அமைச்சினால் நலன்புரி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால், சமூக சேவைகள் அமைச்சிடம் தாயில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கு ஏதாவது நலன்புரித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதா என்று கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் விளக்கமளிக்கையில், தந்தை சிறையில் இருந்தாலோ அல்லது தாயை நம்பி அந்தக் குடும்பம் இருந்தாலோ அவர்களுக்கு நாம் நலன்புரி உதவிகளை வழங்கி வருகின்றோம்.

குறிப்பாக இதுவரை காலமும் அவர்களுக்குச் சுயதொழில் கொடுப்பனவுக்காக 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வந்தது. தற்போது அந்தக் கொடுப்பனவு 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது- என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-5)

# சென்னைப் பெண்மணிக்கு ஓமந்தையில் எச்சரிக்கை

வவுனியா,ஜூன் 27
சர்வதேச விதவைகள் தினத்தை முன்னிட்டு, வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விதவைகளுக்கான நிகழ்வொன்றில் கலந்து கொண்ட சென்னையைச் சேர்ந்த பெண்மணி ஒருவர், தொண்டு நிறுவனப் பணியாளராகக் கலந்து கொண்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டு அதிகாரிகளால் எச்சரிக்கப்பட்டார்.

பெண்களுக்கான கிராமிய பொது அமைப்புக்களைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் சிலர் அடங்கலாக, 35க்கும் மேற்பட்ட விதவைகள் கலந்து கொண்டிருந்த இந்த நிகழ்வில் பிரதேச சமூக சேவைப் பணியாளரின் வேண்டுகோளுக்கிணங்க, அனுசரணை வழங்கி, பெண்களுக்காகப் பணியாற்றும் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த வளவாளர் ஒருவர் கலந்து கொண்டிருந்தார்.

இந்த வளவாளருடன், இந்தியாவில் இருந்து இலங்கைக்கு உல்லாசப் பயணியாக வருகை தந்திருந்த எஸ்தர் தேவகுமார் என்ற பெண்மணியும் கலந்து கொண்டு, பெண்களுக்கான ஆற்றுப்படுத்தல் விளையாட்டு நிகழ்ச்சியில் பங்குபற்றியிருந்தார்.

இந்த நிகழ்வின் போது, இந்தியாவில் இருந்து இந்த நிகழ்வில் பங்குபற்றுவதற்காகப் பெண்மணி ஒருவர் வருகை தந்திருப்பதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகக் கூறி பிரதேச படையதிகாரிகள் நிகழ்ச்சி நடைபெற்ற இடத்துக்குச் சென்று விசாரணை செய்துள்ளனர். விதவைகளுக்கான ஆற்றுப்படுத்தல் நிகழ்வென்பதைக் கண்டறிந்ததும், அவர்கள் சென்றுவிட்டனர்.

ஆயினும் நிகழ்ச்சி முடிந்து எஸ்தர் தேவகுமார் என்ற அந்தப் பெண்மணி கொழும்புக்குத் திரும்பும்போது ஓமந்தை சோதனைச்சாவடியில் படையினர், அவரையும், அவரை நெடுங்கேணிக்கு அழைத்துச் சென்ற தொண்டு நிறுவனப் பெண்மணியையும் தடுத்து வைத்து சுமார் 8 மணித்தியாலங்கள் விசாரணை செய்துள்ளனர்.

உல்லாசப் பயணியாக வந்த ஒருவர் இங்கு கருத்தரங்கு போன்ற நிகழ்வுகளில் கலந்து கொள்ள முடியாது எனப் படையதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும் தாங்கள் சர்வதேச விதவைகள் தினத்தையொட்டி, அரச தரப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விளையாட்டுக்கள் நிறைந்த விதவைகளுக்கான ஆற்றுப்படுத்தல் நிகழ்விலேயே கலந்து கொண்டதாக அந்தப் பெண்கள் படையதிகாரிகளிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

எனினும் தங்களுக்கு மேலிடத்தில் இருந்து கிடைத்த உத்தரவுக்கமையவே விசாரணை நடத்தியதாகவும், அங்கிருந்து அவர்கள் சென்றுவிட வேண்டும் என்றும் படையதிகாரிகள் கூறியுள்ளனர்.

உல்லாசப் பயணியாக வருகை தந்திருந்த எஸ்தர் தேவகுமார் என்ற அந்தச் சென்னையைச் சேர்ந்த பெண்மணி அடுத்த நாளாகிய திங்கட்கிழமை தனது பிரயாணத் திட்டத்துக்கமைய சென்னைக்குத் திரும்பிச் சென்றுள்ளார். எஸ்தர் தேவகுமார் சென்னையைச் சேர்ந்த பெண் [illegible] என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# வாக்காளர் பட்டியலின் பிரதிகளைப் பெறலாம்

முல்லைத்தீவு,ஜூன் 27
முல்லைத்தீவு மாவட்டத்தில் சொத்தழிவுக்காக விண்ணப்பிப்பதற்காக வாக்காளர் பெயர்ப் பட்டியலின் பிரதி கோரி விண்ணப்பித்தவர்கள் இன்று வியாழக்கிழமை பெற்றுக்கொள்ள முடியும் என்று உதவித் தேர்தல் ஆணையாளர் இ.சு.கருணாநிதி தெரிவித்தார்.

2008, 2009 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர்ப்பட்டியலின் பிரதியைக் கோரி இந்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பித்தவர்கள் இன்று வியாழக்கிழமை பிரதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். 16ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை விண்ணப்பித்தவர்கள் நாளை வெள்ளிக்கிழமை பிரதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் கூறியுள்ளார். (த-5)



காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் வலந்தலைச் சந்தியில் புதிய எரிபொருள் நிரப்பும் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடற் கதை நடைபெறாது

வவுனியா, ஜூன் 27
வவுனியா கலாசார மண்டபத்தில் இன்று நடைபெறவிருந்த ஆடற்கதை நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணத்தால் நடைபெறாது என மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.
(வ-402)

## கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுடையோரும் தொழிற் சந்தையில் பங்குபற்றலாம்

கிளிநொச்சி, ஜூன் 27
வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வெள்ளிக்கிழமை நடத்தப்படவுள்ள மாற்று வலுவுள்ளோருக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தக் கூடிய தொழிற் சந்தையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாற்று வலுவுள்ளோரும் பங்கு பற்ற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
தொழிற்சந்தையில் கலந்து கொள்ளவுள்ள தனியார் நிறுவனங்கள் தகுதியும் திறமையும் உடைய மாற்று வலுவுள்ளவர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்க முன்வந்துள்ளதால் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுவலுவுள்ளோர் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
தொழிற் சந்தையில் கலந்து கொள்ள மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் பதிவை மேற்கொண்டவர்களுடன் பதிவை மேற்கொள்ளாதவர்களும் கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# 32,000 குடும்பங்கள் கடற்றொழிலை நம்பி

## இறங்குதுறை திறப்பு விழாவில் ஆஸி. தூதர் தெரிவிப்பு






ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் புலம்பெயர்தலுக்கான சர்வதேச இறங்குதுறையை ஆஸ்திரேலியத் தூதர் றொபின் மோடி நேற்று திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணம், ஜூன் 27
வடமாகாணத்தில் 32 ஆயிரம் குடும்பங்கள் கடற்றொழிலில் தங்கி வாழ்கின்றனர். இதில் யாழ்ப்பாணத்தில் மட்டும் 60 வீதத்துக்கும் அதிகமான குடும்பங்கள் மீன்பிடியை பிரதானமாகக் கொண்டுள்ளனர்.
இந்த நிலையானது யாழ்ப்பாணம் மீன்பிடியில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதாக ஆஸ்திரேலிய தூதர் றொபின் மோடி தெரிவித்தார்.
ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் புலம் பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பினால் புனர் நிர்மாணிக்கப்பட்ட பாஷையூர் மீன்பிடி இறங்குதுறை திறப்பு விழா நேற்று பாஷையூரில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:-
மீன்பிடியின் முக்கியத்துவம் அறியப்பட்டதன் காரணத்தால் ஆஸ்திரேலிய அரசு ஐ.ஓ.எம். நிறுவனத்துடன் பங்காளியாக இணைந்து 58 மில்லியனை (சுமார் 456 ஆயிரம் ஆஸ்திரேலியன் டொலர்கள்) இந்தத் திட்டத்துக்காக ஒதுக்கீடு செய்துள்ளது.
இலங்கை அரசுக்கும் ஆஸ்திரேலிய அரசுக்கும் இடையிலான ஒத்துழைப்பின் மூலமாக இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைக்கான ஒரு உதாரணமாகவும் இதனைக் கொள்ளலாம்.
இந்தத் திட்டத்தின் ஊடாக பாஷையூர் துறைமுகம் புனரமைப்புச் செய்யப்பட்டதால் 682 குடும்பங்களுக்கு நேரடியாக பயன் கிட்டுவதுடன் அவர்கள் எந்த நேரமும் கடலுக்குச் செல்ல உதவியாக அமைகிறது.
குறிப்பாக பெண்களையும் உள்ளடக்கி அவர்களது செயற்பாடுகளுக்கும் உதவியாக இருப்பதால் இதன் மூலம் பெண்களுடைய ஆற்றலை வளர்ப்பதற்கு வாய்ப்புக் கிட்டுகிறது.
ஆஸ்திரேலிய அரசு இந்தத் திட்டத்தால் பெருமிதம் அடைவதுடன் நீண்ட காலத்துக்கு இந்தத் திட்டம் பயனளிக்கும் என நம்புவதுடன் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த வசதியைத் தொடர்ந்து பராமரிப்பதற்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
இலங்கை அரசு மற்றும் அனைத்து மாகாண, மாவட்ட, அமைச்சின் அதிகாரிகள், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், துறைமுக அதிகார சபை என்பன இந்தத் திட்டத்துக்கு உதவியாக இருந்தன- என்றார்.
பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை அருட்பணி றோய் பேடினன்ட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆஸ்திரேலியத் தூதர், ஐ.ஓ.எம். அதிகாரி யுசேப்பே மொறாட்டி ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் மாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், பங்குத்தந்தையர்கள், மீனவ சங்கப் பிரதிநிதிகள், கடற்படை அதிகாரிகள் மற்றும் மீனவர்கள் உட்பட பொது மக்களும் கலந்து கொண்டனர். (வ-14-23-135)

## 'டோர்ச்' வெளிச்சத்தில் நோயாளருக்கு சிகிச்சை

### சாவகச்சேரி வைத்தியசாலையில் செவ்வாயன்று அவலம்

தென்மராட்சி, ஜூன் 27
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு எட்டரை மணித்தியாலயம் மின்சாரம் இல்லாது போனதால் நோயாளர்கள் சிரமங்களுக்கு இலக்காகினர்.
இரவு வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்ட நோயாளர்களுக்கு 'டோர்ச்' வெளிச்சத்தில் சிகிச்சையளிக்கப்பட்டது.
வீதி விபத்து மற்றும் தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்து கொண்டு வரப்பட்டவர்களுக்கும், விடுதியில் தங்கியிருந்த நோயாளர்களுக்கும் 'டோர்ச்' வெளிச்சத்தில் சிகிச்சை வழங்கப்பட்டதாக நோயாளர்கள் தெரிவித்தனர்.
வைத்தியசாலையில் உள்ள ஜெனரேட்டர் பழுதடைந்துள்ள நிலையில் இதுவரை திருத்தப்படாததால் மின்சாரம் தடைப்படும் வேளைகளில் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
(வ-9)

## சொந்தக் கட்டடத்தில் தனங்களப்பு அ.த.க.



தென்மராட்சி, ஜூன் 27
5 ஆயிரம் ஊட்டப் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், கடந்த ஏப்ரல் 5ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தனங்கிளப்பு அ.த.க.பாடசாலையில் 50 அடி நீளமான வகுப்பறைத் தொகுதிக் கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.
பாடசாலை அதிபர் சி.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், தென்மராட்சி தெற்குப் பிரிவு கட்டளைத் தளபதி லெப். கேணல் பி.ஏ.எஸ்.எஸ்.டி.புளத்கம, சாவகச்சேரி நகரசபை எதிரணித் தலைவர் சூ.அலெக்ஸாண்டர் ஆகியோர் கூட்டாக கட்டடத்தை திறந்து வைத்தனர்.
தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட தனங்களப்பு அ.த.க. பாடசாலை 13 வருடங்களின் பின்னர் பாடசாலை வளாகத்தில் 5 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தில் நேற்று முதல் இயங்குகின்றது.
(வ-9)

## பிரதேச சபை வளாகத்தில் மது அருந்தியோருக்கு அபராதம்

வடமராட்சி, ஜூன் 27
பருத்தித்துறை கிராமக்கோட்டடிச் சந்தியில் உள்ள பிரதேச சபைக் கட்டடத்தில் வைத்து மது அருந்திய மூவருக்கு தலா 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பருத்தித்துறை பொலிஸார் மது அருந்திக் கொண்டிருந்த மூவரையும் கைது செய்து, பொது இடத்தில் வைத்து மது அருந்தியதாக குற்றம்சாட்டி பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.
இந்த வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மூவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தலா 2 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார்.
(வ-8)

## பிரேரணை முன்மொழிவு காரைநகர் பிரதேச சபையில்

### 13 ஆவது திருத்த சட்டம் தொடர்பில்

காரைநகர், ஜூன் 27
அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தை கொண்டு வருவதோ அதனை இல்லாமல் செய்வதோ வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு இருக்கின்ற ஒரே ஒரு அரசியல் தீர்வுக்கான வாய்ப்பை இல்லாமல் செய்வதாகும்.
எனவே இது விடயத்தில் வடக்கு, கிழக்கு பிரதேச சபைகளில் தீர்மானம் நிறைவேற்றி ஜனாதிபதியின் கவனத்துக்கு அனுப்ப வேண்டும்.
இதன் முதற் கட்டமாக கடந்த புதன்கிழமை நடைபெற்ற காரைநகர் பிரதேச சபையின் 23 ஆவது மாதாந்த கூட்டத்தில் பிரதேச சபை உறுப்பினர் க.பாலச்சந்திரன் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார். சபை ஏகமனதாக நிறைவேற்றி அதனை செயற்படுத்துவதாக தீர்மானித்துள்ளது.
அரசுடன் இணைந்துள்ள ஏனைய தமிழ் தலைவர்களும் 13 ஆவது திருத்தத்தில் தங்களது நிலைப்பாடு தொடர்பாக மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.
(வ-60)

## பயனாளிகளுக்கு முருங்கைக் கன்றுகள்



யாழ்ப்பாணம், ஜூன் 27
வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் சிறிய ரக முருங்கைக் கன்றுகள் வழங்கப்படவுள்ளன.
நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் 70 பயனாளிகளுக்கு முருங்கைக் கன்றுகள் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்தார்.
வீட்டுத் தோட்டமாக இந்தக் கன்றுகள் செய்கை பண்ணப் பயனுள்ளதாகவும் முருங்கைக் கன்றுகளைப் பெற்றுக் கொள்ள விரும்பும் பயனாளிகள் தமது பிரிவு கிராம அலுவலரிடம் அல்லது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பட்டதாரி பயிலுநர்களுடன் தொடர்பு கொண்டு தமது விவரங்களைப் பதிவு செய்யுமாறும் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.
(வ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் வட்டத்தின் விசேட செயற்றிட்டமாக இலங்கை கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு பிரதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை நடைபெறவுள்ளது.

அதிபர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைக் கான கருத்தரங்கும் ஆரம்பாகவுள்ளது. இதற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## மரண அறிவித்தல்



### சிவக்கொழுந்து சேனாதிராசா

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து சேனாதிராசா நேற்று (26.06.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.06.2013) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப. 11மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நியாகலை வைரவர் கோயிலடி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(38706)

தகவல்:
குடும்பத்தினர்.

# அரசைப் பிரிக்க சந்திரிகா சதி

## வீரவன்ஸ குற்றச்சாட்டு



கொழும்பு,ஜூன் 27

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் தற்போதைய அரசையும் இரண்டாகப் பிரிப்பதற்கு 13 ஆவது திருத்தத்தைத் துரும்பாகக் கொண்டு அரசில் உள்ள சில அமைச்சர்களைத் தூண்டிவிடுகின்றார் என அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாகப் பிரித்துப் பின்னர் சந்திரிகாவின் மகன் விமுக்தியைக் கொண்டு அரசியல் நடத்துவதற்கு அவர் முயல்கின்றார் எனவும் அமைச்சர் விமல் கூறினார்.

நேற்று அவரது கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை-இந்தியா ஒப்பந்தம் கைச்சாத்திடும் விடயத்தில் எதிராக இருந்தவர்கள் தற்பொழுது அதற்கு ஆதரவாக உள்ளார்கள். ராஜித, ரெஜினோல்ட் கூரே போன்றோர்கள் சந்திரிகாவின் கணவரின் கட்சியான மகாஜன கட்சியில் இருந்தவர்கள். அவர்கள் அன்றும் ஆதரவாக இருந்தார்கள் இன்றும் ஆதரவாகப் பேசுகின்றனர்.

ஆனால் செப்ரெம்பரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வடக்கு மாகாண ஆட்சி செல்வதற்கு முன் 13 ஆவது திருத்தத்தில் பொலிஸ்,காணி அகற்ற வேண்டும். அந்த நிலைப்பாட்டிலேயே எமது கட்சி உள்ளது. வடக்கில் எமது கட்சி போட்டியிடுவதில்லை.

வாசுதேவ நாணயக்கார போன்றோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாகப் பேசுகின்றனர். அவர்கள் போர் செய்யாமல் சமாதானம் செய்யச் சொன்னவர்கள். வடக்கு- கிழக்கை இணைத்துச் சுயாட்சி முறை வழங்கச் சொன்னவர்தான் வாசுதேவ நாணயக்கார போன்றோர்.

ஆனால் ஜனாதிபதி தற்போது உள்ள ஆட்சியில் உள்ள சகல கட்சிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வைத்துக் கொண்டு இந்தத் திருத்தத்தை மேற்கொள்ளவே முயற்சிப்பார்-என்றார்.(த)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி செல்லத்துரை



மந்துவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லத்துரை நேற்று முன்தினம் (25.06.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-அம்மினி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னர்- ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தெய்வானை, சரஸ்வதி மற்றும் கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாக்கியவதி, கிருபராஜ், பத்மாவதி, லீலாவதி, பிரபாவதி, புஸ்பாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், இரட்ணேஸ்வரன், இரத்தினராசா, ஸ்ரீஸ்கந்தராசா, கோதை ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.06.2013) வியாழக்கிழமை பி.ப.3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ஸ்ரீகந்தராசா(மருமகன், சன்னிதி முருகன் மோட்டோர்ஸ் அன் சேவிஸ் அன் ரவல்ஸ் உரிமையாளர்) (டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி)

மந்துவில் கிழக்கு,
மந்துவில்.

38710

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மீனாட்சி சிதம்பரநாதர்

இடைக்குறிச்சி கிழக்கு, வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சி சிதம்பரநாதர் நேற்றுமுன்தினம் (25.06. 2013) செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்

அன்னார் காலஞ்சென்ற முருகர்-அமுதாத்தை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிதம்பரநாதரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கதிர்காமர், சின்னாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், பாறுபதிப்பிள்ளை, கதிர்காமராசா, மனோன்மணி, சிவராசா, செல்வராஜா(சாரதி, நிலஅளவைத்திணைக்களம், யாழ்ப்பாணம்), யோகராசா, நடராஜா(புகையிரத நிலைய உத்தியோகத்தர், புத்தளம்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.06.2013) வியாழக்கிழமை பி.ப.4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இடைக்குறிச்சி, வரணி.

தகவல்: குடும்பத்தினர். செல்வராசா (மகன்)

### யோகராஜா சிறிகாந் (ராஜன்)



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட யோகராஜா சிறிகாந் நேற்றுமுன்தினம் (25.06.2013) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் சின்துஜாவின் (ஜினசேன Pvt Ltd) அன்புக் கணவரும், யோகராஜா- அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், துஷ்யந்தி, சிறிநாத், சிறிரகுநாத், சிறிராம்நாத் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அபிராம் மற்றும் சுகன்ஜா, சிவஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2013) வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

33, 2ஆம் ஒழுங்கை, விதானையார் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சிந்துஜா (மனைவி)

### சதாசிவம் பரமேஸ்வரன்

(ஓய்வுபெற்ற பொறுப்பதிகாரி- வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை)



கரணவாய் மத்தியைப்பிறப்பிடமாகவும் இமையாணன் கிழக்கை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான சதாசிவம் பரமேஸ்வரன் நேற்று (26.06.2013)புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னர் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான சபாபதி-தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், ரேணுகா(இலங்கை வங்கி, சாவகச்சேரி), தவசீலன் (கனடா), துஸ்யந்தி(கனடா), துவாகரன் (ஜேர்மனி), மேனகா(நியூசிலாந்து), கண்ணதா(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரஞ்சன்(வடமராட்சி தெற்கு மேற்கு, பிரதேசசபை, கரவெட்டி), ஜனனி(கனடா), தவக்குமார்(கனடா), சிவானந்தரூபன்(நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனும், தனோஜ், ஜானுஜன், சிவலோஜனன்(நியூசிலாந்து), சிவதேனுஜன்(நியூசிலாந்து), அனுபரன்(நியூசிலாந்து), கனிஸ்கா(நியூசிலாந்து), வெனிசியா(கனடா), கேசாந் (கனடா), லிசான்(கனடா), நித்திக்(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா ரொரன்ரோவில் எதிர்வரும் ( 30.06.2013) ஞாயிற்றுக் கிழமை இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தெய்வபதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி. 021 2263429

தகவல்:
க. சிவரஞ்சன்.
(மருமகன்)

### திருமதி மகாராணி துரைராசலிங்கம் (ராணி)



வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா தோணிக்கல்லை தற்காலிக வதிவிட மாகவும் கொண்ட மகாராணி துரைராசலிங்கம் நேற்று (26.06.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் துரைராசலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் -ராஜபுஸ்பம் தம்பதியரின் அன்பு மகளும், துரைச்சாமி, காலஞ்சென்ற கமலம் தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெசிதா (லண்டன்), சஜிதா (பிரான்ஸ்), சுரேகா, கபிலன் (பிரான்ஸ்), கஜலக்ஷி ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயச்சந்திரன் (லண்டன்), தயாளன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், டயானா, டினு, ஷிகா (லண்டன்), வைஷ்ணவி, அட்சயா (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும், தவமணிதேவி, தர்மகுலசிங்கம், சறோஜினிதேவி, தனபாலசிங்கம், குணபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், செல்வராணி (வேலணை ப.நோ.கூ.ச), தேவிகாராணி, இரவீந்திரநாதன் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற புவநேந்திரன் மற்றும் ஸ்ரீகலா, கலைச்செல்வி, விமலாதேவி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், புவனேந்திரன் (சதீஸ் ஒலிப்பதிவு படப்பிடிப்பு கலையகம்), காலஞ்சென்ற ஆறுமுகம், தவமதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2013) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் 72/12, பிரம்படிலேன், கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

72/12, பிரம்படி லேன்,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூலை முதல் டெங்கு ஒழிப்பு குடாநாட்டில் முன்னெடுப்பு

## யாழ். அரச அதிபர் பிரதேச செயலகங்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 27
நாட்டின் பல பாகங்களிலும் மழைக்குப் பின்னர் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்த எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 7 ஆம் திகதி வரை நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாக கடைப்பிடிக்கப்பட வேண்டுமென மத்திய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

**எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 7 ஆம் திகதி வரை நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாக கடைப்பிடிக்கப்பட வேண்டுமென மத்திய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.**


இந்த வாரத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பிரதேச செயலகங்களுக்கு யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவுறுத்தியுள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்ததாவது:-
பிரதேச செயலாளர் பிரதேச மட்ட டெங்கு தடுப்பு செயலணிக் கூட்டத்தை ஒழுங்கு செய்து பிரதேசத்திலுள்ள நிறுவனங்களையும் , கிராம மட்ட அமைப்புக்களையும் இணைத்து நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் திட்டமிடல் வேண்டும். சுகாதார வைத்திய அதிகாரி இதற்கு ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட வேண்டும்.
கிராம மட்ட தடுப்புச் செயலணிக் கூட்டத்தை கிராம அலுவலர் தலைமையில் ஏற்பாடு செய்து கிராம மட்ட அமைப்புக்களை நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும். பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இதற்கு ஒருங்கிணைப்பாளர்களாகச் செயற்பட வேண்டும்.
சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஒவ்வொன்றும் 7 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்துக்கும் ஒவ்வொரு நாள் ஒதுக்கப்படும். குறித்த நாளில் குறித்த வலயத்துக்குட்பட்ட சகல நிறுவனங்களிலும் வைத்தியசாலைகளிலும் , பொது இடங்களிலும், வணக்கத் தலங்களிலும் , வர்த்தக நிலையங்களிலும், வீடுகளிலும், பராமரிப்பற்ற காணிகளிலும் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
இது பற்றிக் குடும்ப நல உத்தியோகத்தர்கள், மலேரியா தடுப்பு வெளிக்கள உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரிப் பயிலுநர்கள், உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், கிராம மட்ட சமூக அமைப்புக்களின் தொண்டர்கள், சுற்றாடல் பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகிய தரப்பினர் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.
கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் போது ஒவ்வொரு நாள் செயற்பாடுகள், விவரங்கள் அதில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களது விவரங்களையும் சுகாதார வைத்திய அதிகாரி ,சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக அரச அதிபருக்கும் , மாகாண சுகாதார அமைச்சுக்கும் அனுப்பி வைக்க வேண்டும்-என்றுள்ளது. (வ-4)

## குடிதண்ணீர் வசதி ஏற்படுத்த பொதுமகன் காணி அன்பளிப்பு



வலி.தென்மேற்கு, ஜூன் 27
சாந்தை கிராமத்தில் வசிக்கும் மக்களின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய விரும்பிய ஒருவர், கிணறு வெட்டி குழாய் மூலம் குடி தண்ணீர் வழங்குவதற்காக தனது காணியின் ஒரு பகுதியை வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு வழங்க முன் வந்ததையடுத்து அதற்கான சகல ஒழுங்குகளையும் தவிசாளர் மேற்கொண்டுள்ளார்.
வலி.தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள பல கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு வலி.தென்மேற்கு பிரதேச சபை பௌசர் மூலம் குடிதண்ணீரை வழங்கி வருகிறது. பிரதேச சபையால் வழங்கப்படும் குடிதண்ணீர் போதாமையால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.
இந்த நிலையில் வடலியடைப்பைச் சேர்ந்த ஒருவர் சாந்தை கிராமத்தில் வசிக்கும் மக்களின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கிணறு வெட்டிக் குழாய் மூலம் நீரை வழங்குவதற்கு வசதியாகப் பண்டத்தரிப்பிலுள்ள தனது காணியில் ஒரு பரப்பை பிரதேச சபைக்கு வழங்க முன்வந்ததை அடுத்து இதற்கான சகல ஒழுங்குகளையும் தவிசாளர் அ.ஜெபநேசன் மேற்கொண்டுள்ளார். (வ-115)

## வலி.தென்மேற்கில் 5 வீதிகள் 'புறநெகும'வில் புனரமைப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 27
வலி.தென்மேற்கில் 'புறநெகும' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஐந்து வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.
அவசிய தேவை முன்னுரிமைத் தெரிவின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்ட வீதிகளே 'புறநெகும' அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் புனரமைக்கப்படவுள்ளதாக வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் மகேந்திரன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வலி.தென்மேற்குப் பிரதேச சபை ஆனைக்கோட்டை, மாதகல், பண்டத்தரிப்பு, மானிப்பாய் ஆகிய நான்கு உப அலுவலகங்களைக் கொண்டுள்ளது.
இந்த நான்கு உப அலுவலகங்களுக்கும் மக்களின் முன்னுரிமை தெரிவின் அடிப்படையில் 5 வீதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
பிரான்பற்று-நல்லுண்ணி வீதி ஒரு கோடியே 30 லட்சம் ரூபா செலவிலும், மானிப்பாய்-ஆனந்த வைரவர் வீதி 90 லட்சம் ரூபா செலவிலும், சுதுமலை-எச்சாடி வைரவர் வீதி ஒரு கோடியே 20 லட்சம் ரூபா செலவிலும், மாகியப்பிட்டி -அரசடி வீதி ஒரு கோடியே 80 லட்சம் ரூபா செலவிலும், மாதகல்-விளான் வீதி இரண்டு கோடியே 30 லட்சம் ரூபா செலவிலும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.
இந்த வீதிகளின் புனரமைப்புப் பணிகளை இவ்வாண்டுக்குள் பூரணப்படுத்தி வழங்க யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் துரித நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-41)

## பொதுநோக்கு மண்டபம் தனங்களப்பில் நேற்று திறப்பு



தென்மராட்சி, ஜூன் 27
தென்மராட்சி தெற்கு தனங்கிளப்பு பகுதியில் 16 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொது நோக்கு மண்டபம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.
மண்டபம், கிணறு மலசலகூடம் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் சில்வேஸ்திரி அலென்ரின், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன், தென்மராட்சி தெற்கு பிரிவு கட்டளைத் தளபதி லெப்.கேணல் பி.ஏ. எஸ்.எஸ்.டி.புளத்கம ஆகியோர் கூட்டாகத் திறந்து வைத்தனர்.
கிராம மீள் எழுச்சித் திட்டத் தலைவர் செல்லத்துரை ஆனந்தராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை எதிரணித் தலைவர் சு.அலெக்ஸாண்டர், கிராம அலுவலர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (வ-9)

## விளையாட்டு வசதிகளுடன் முன்பள்ளி முற்றம்

வலி.வடக்கு, ஜூன் 27
உடுவில் இந்து இளைஞர் சங்க முன்பள்ளிக்கு விளையாட்டு வசதிகளுடன் கூடிய முற்றம் அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன.
சிறுவர் அபவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் நிதி உதவியுடன் இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கென குறித்த அமைச்சு 60 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளது.
முன்பள்ளிச் சிறார்களுக்கான விளையாட்டு முற்றம் அமைப்பதால் கூடியளவு பயன்பாட்டை முன்பள்ளிச் சிறார்கள் பெறக்கூடிய வாய்ப்பு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-86)

## திருட்டைத் தடுக்க ஆலயத்தில் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27
மண்கும்பான் வெள்ளைப்புற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற திருட்டை அடுத்து ஊர் பொதுமக்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஒன்று கூடி ஆலயத்தைப் பாதுகாக்க தீர்மானித்துள்ளனர். இதன்படி தினமும் 5 பேர் அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.
கடந்த சனிக்கிழமை ஆலயத்தில் விக்கிரகம் உட்பட மின் சாதனப் பொருள்கள், ஒலி பெருக்கி போன்றவை களவு போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-7)

## தம்பிக்கும் தங்கைக்கும் ஒரே காணியை எழுதிக் கொடுத்த மூத்த சகோதரன்

**கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்.நீதி மன்று நேற்று முன்தினம் உத்தரவிட்டது.**

யாழ்ப்பாணம், ஜூன் 27
தனது தம்பிக்கும் தங்கைக்கும் ஒரு காணியையே எழுதி வைத்தார் மூத்த அண்ணன். தனது காணி என்று நினைத்து தம்பி ஐந்து வருடங்களின் பின்னர் காணியை வேறு ஒருவருக்கு விற்றபோது மோசடிக் குற்றச்சாட்டில் மாட்டிக் கொண்டார் அண்ணன்.
காரைநகர் பகுதியில் காணியை வாங்கிய ஒருவர் யாழ்ப்பாணம் விசேட குற்றத்தடுப்புப் பிரிவில் செய்த முறைப்பாட்டை அடுத்தே காரைநகரைச் சேர்ந்த வரும் நீர்கொழும்பில் வசிக்கும் வர்த்தகருமான குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.
கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்று நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.
இந்த மோசடிச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-
மூத்த சகோதரன் குறித்த காணியைத் தனது சகோதரிக்குச் சீதனமாக எழுதிக் கொடுத்துள்ளார். அதே காணியை குறித்த சகோதரிக்குத் தெரியாமல் தனது இளைய சகோதரனுக்கும் நன்கொடையாக எழுதிக் கொடுத்துள்ளார்.
இளைய் சகோதரன் அந்தக் காணியை பிறிதொருவருக்கு விற்பனை செய்துள்ளார். காணியைக் கொள்வனவு செய்தவர் அங்கு திருத்த வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மற்றொரு காணி உரிமையாளரான பெண்மணி அங்கு சென்று அந்தக் காணி தன்னுடையது என்று உரிமை கோரியுள்ளார். காணியை பணம் கொடுத்து வாங்கியவர் யாழ்.விசேட குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்தார். இந்த நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மோசடிக் குற்றச்சாட்டில் சந்தேக நபரான வர்த்தகரைக் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர். (ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காஷமீர், ஸ்ரீநகரில் நேற்றுமுன்தினம் ரோந்து சென்ற இராணுவத் தொடரணி மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் இராணுவத்தைச் சேர்ந்த 9 பேர் உயிரிழந்தனர். அதையடுத்து துப்பாக்கிதாரிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது. எனினும் தாக்குதலை நடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

# மீட்புப் பணிகளின்போது ஹெலிகொப்டர் விபத்து

## உத்தரகாண்டில் 19 பேர் சாவு

பாட்னா, ஜூன் 27

உத்தரகாண்டில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த விமானப் படை ஹெலிகொப்டர் கன மழை காரணமாக விழுந்து நொறுங்கியது.அதில் இருந்த 19 பேரும் உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உத்தரகாண்டில் மீண்டும் மழை கொட்டத் தொடங்கியதால் மீட்பு பணி பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், நேற்றுமுன்தினம் கொட்டும் மழைக்கு இடையே மீட்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மதியம் 12.30 மணிக்கு கேதார்நாத் பகுதியில் மீட்கப்பட்டவர்களை ஏற்றிக்கொண்டு இந்திய விமானப்படைக்கு சொந்தமான எம்.ஐ.17 ரக ஹெலிகொப்டர் ஒன்று புறப்பட்டது. அதில் விமானப்படை அதிகாரிகள், தேசிய பேரிடர் மீட்புப் படை, இந்தோ திபெத்திய எல்லை படை மற்றும் கேதார்நாத்தில் இருந்து மீட்கப்பட்ட சுற்றுலாப் பயணிகள் இருந்தனர். புறப்பட்ட 7 ஆவது நிமிடத்தில் கவுரிகுண்ட் மலைப் பகுதியில் அந்த ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கியது. அது பற்றிய தகவல் கிடைத்ததும் அந்தப் பகுதியில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஏனைய ஹெலிகொப்டர்கள் அங்கு அனுப்பப்பட்டன. மீட்புப் படையினரால் இதுவரை 8 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

விபத்துக் குறித்து தேசிய பேரிடர் மீட்புப் படை துணைத் தலைவர் சசிதர் ரெட்டி தெரிவிக்கும்போது,

''விபத்துக்குள்ளான ஹெலிகொப்டர் ரஷ்யாவில் இருந்து கடந்த ஆண்டு வாங்கப்பட்டது. காலை முதல் 2 முறை கேதார்நாத்தில் இருந்து மீட்கப்பட்டவர்களை ஏற்றிக் கொண்டு கவுசார் தளத்துக்கு அந்த ஹெலிகொப்டர் வந்துள்ளது. மூன்றாவது முறை கேதார்நாத்தில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் விபத்துக்குள்ளாகி உள்ளது. மழை பெய்து கொண்டிருந்ததால் மோசமான வானிலை காரணமாக ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளாகி உள்ளது. அதில் பயணம் செய்த 19 பேரும் உயிரிழந்திருப்பார்கள் என்று அஞ்சப்படுகிறது. 8 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன'' என்றார். (ற)

## 1 மணி நேரத்தில் 15 தற்கொலைகள் இந்தியாவில்

சென்னை, ஜூன் 27

இந்தியாவில் கடந்த வருடத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிக மானவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர் என்று புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன.

2012 ஆம் ஆண்டில் மாத்திரம் ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 445 பேர் தற்கொலை செய்துள்ளனர்.

இந்தியாவில் மணித்தியாலத்திற்கு 15 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர் என்று புள்ளிவிவரங்களில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் குடும்பப் பிரச்சினைகள் காரணமாக நாளாந்தம் 84 தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு தற்கொலை செய்துகொள்ளும் 6 பேரில் ஒருவர் குடும்பப் பெண் என்றும் ஆய்வறிக்கைகள் கூறுகின்றன.

இந்தியாவில் அதிகளவானவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் மாநிலமாக தமிழ்நாடு பதிவாகியுள்ளது. (ற)

# ஈழப் பிரச்சினையை மறந்ததா தி.மு.க.?

## அன்புமணி ராமதாஸ் காட்டம்

சென்னை, ஜூன் 27

மாநிலங்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியிடம் உதவி கேட்கும் தி.மு.க. ஈழப் பிரச்சினையை மறந்துவிட்டதா? என்று பா.ம.க. இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கும் போது:

''தமிழகத்தில் அ.தி.மு.க., தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளுக்கும் மாற்றாக நல்லது செய்யும் கட்சியை மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

பா.ம.க. ஒருபோதும் திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி வைக்காது. 3 மாதங்களுக்கு முன்பு ஈழப்பிரச்சினையில் காங்கிரஸ் கட்சியின் அணுகுமுறையை எதிர்த்து வெளியேறிய தி.மு.க., இப்போது மக்களவைத் தேர்தலுக்கு காங்கிரஸ் கட்சியிடம் ஆதரவு கோரியுள்ளதன் மூலம் அது



ஈழப்பிரச்சினையை மறந்துவிட்டதா? என்பதை தி.மு.க. தலைவர் கருணாநிதி விளக்க வேண்டும்'' என்றார். (ற)

## உம்மன்சாண்டிக்கு விருது

திருவனந்தபுரம், ஜூன் 27

பொதுச் சேவைக்கான ஐ.நாவின் சர்வதேச விருது கேரள முதல்வர் உம்மன் சாண்டிக்கு வழங்கப்பட உள்ளது. இவ்விருதினை பஹ்ரைனில் இன்று நடைபெறும் விழாவில் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் வழங்க உள்ளார்.

எந்தத் தரகர்களும் இன்றி தினமும் ஆயிரக் கணக்கான மக்கள் சாண்டியைச் சந்தித்து தங்களின் குறைகளைக் கூறிச் செல்கின்றனர். இதுவரை 55 லட்சம் மனுக்களைப் பெற்ற உம்மன்சாண்டி அதில் 3 லட்சம் மனுக்களுக்குத் தீர்வு வழங்கியுள்ளார். அவரது பொதுப்பணிகளுக்காக இவ்விருது வழங்கப்படுவதாக ஐ.நா.தெரிவித்துள்ளது. (ற)

## மன்மோகனின் வருகையை எதிர்த்து போராட்டம்

ஸ்ரீநகர், ஜூன் 27

பிரதமரின் வருகையைக் கண்டித்து காஷ்மீரில் ஹூரியாத் போன்ற அமைப்புகள் முழு அடைப்புப் போராட்டம் நடத்துவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. ஜம்மு காஷ்மீருக்கு இரண்டு நாள் பயணமாக பிரதமர் மன்மோகன் சிங்கும், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாவும் நேற்று ஸ்ரீநகர் வந்து சேர்ந்தனர்.

இந்த நிலையில், இவர்களது வருகையை எதிர்த்து முழு அடைப்புப் போராட்டம் நடத்துவதற்கு ஹூரியாத் மற்றும் ஜே.கே.எல்.எப். அமைப்புகள் அழைப்பு விடுத்திருந்தன. (ற)

# காங்கிரஸ் ஆதரவு கனிமொழிக்கே

சென்னை, ஜூன் 27

தமிழகத்தின் சட்டப்பேரவையிலிருந்து இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களவை (ராஜ்யசபா)க்கு நடக்கவிருக்கும் தேர்தல்களில், ஆறாவது இடத்துக்கான போட்டியில், தி.மு.க. வேட்பாளர் கனிமொழியை ஆதரிக்க காங்கிரஸ் கட்சி முடிவு செய்திருக்கிறது.

இந்த முடிவை தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஞானதேசிகன் அறிவித்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கு சட்டமன்றத்தில் ஐந்து உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஏற்கனவே தி.மு.க. வேட்பாளர் கனிமொழிக்கு தி.மு.கவின் 23 உறுப்பினர்கள் ஆதரவுடன் , மனித நேய மக்கள் கட்சி மற்றும் புதிய தமிழகம் கட்சியின் தலா இரண்டு உறுப்பினர்களும் ஆதரவளிக்கும் நிலையில், காங்கிரஸின் ஆதரவு அவரது வெற்றி வாய்ப்பை பலமாக்குவதாக நோக்கர்கள் கருதுகிறார்கள்.

ஆறாவது இடத்துக்கு போட்டியிடும் மற்றுமொரு கட்சியான தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தின் வாய்ப்புகள் இப்போது அருகி வருகின்றன.

சட்டப்பேரவையில் அக்கட்சிக்கு 29 உறுப்பினர்கள் இருந்தாலும், அவர்களில் ஏழுபேர் கட்சித் தலைமை மீது அதிருப்தி கொண்டு அ.தி.மு.கவுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். அவர்கள் முதல்வர் ஜெயலலிதாவின் விருப்பத்தின் படியே வாக்களிக்கக்கூடும். அவர் என்ன நினைக்கிறார் என்பது தெரியாத நிலையில் தே.மு.தி.க. வேட்பாளருக்கு 22 வாக்குகளே உறுதி. ஏழு பேரும் தே.மு.தி.க. விற்கு வாக்களித்தாலும், அக் கட்சியின் வேட்பாளர் இளங் கோவனுக்கு 29 வாக்குகள் தான் கிட்டும்.

தேர்தல் நடக்கவிருக்கும் ஆறு இடங்களில் ஆளும் அ.தி.மு.க. நான்கு இடங்களிலும், அதன் ஆதரவு பெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு இடத்திலும் போட்டியிடுகின்றன. அவை வெற்றி பெறுவது உறுதி என்று கூறப்படுகிறது. (ற)

# ஒரே இடத்தில் தகனக்கிரியை உத்தர்கண்டில் ஏற்பாடு

பாட்னா, ஜூன் 27

வட இந்தியாவில் மழை வெள்ளம் மற்றும் மண்சரிவுகளில் சிக்கி வெளியேற முடியாது சிக்கிக்கொண்டுள்ள ஆயிரக்கணக்கானவர்களை சென்றடைவதற்கான முயற்சிகளில் மீட்புப் பணியாளர்கள் முயன்று வரும் வேளையில், இந்த அழிவில் உயிரிழந்தவர்களுக்கு ஒன்றாகத் தகனக் கிரியை நடத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கேதார்நாத் கோவில் நகரில் பெருமளவில் நடைபெறவுள்ள இந்த தகனக்கிரியைகளுக்காக இந்து மத குருமாருடன் விறகுகளும் எரிபொருள்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை மழை காரணமாக மீட்புப் பணிகள் பாதிக்கப்பட்டன.

கோவில் வளாகத்தில் அடுக்கிய நிலையில் உள்ள பல சடலங்கள் உருக்குலையத் தொடங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் தகனக் கிரியைகளுக்கான விறகுகள் ஹெலிகொப்டர்கள் மூலம் அங்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.



உத்தர்காண்ட் மாநிலத்தில் 600 பேர் வரை உயிரிழந்துள்ளனர். இந்த எண்ணிக்கை 1,000 வரை இருக்கலாம் என்று முதலமைச்சர் தெரிவித்திருந்தார். (ற)

## இருநாள்களில் மீட்கப்படுவர்

டேராடூன், ஜூன் 27

உத்தரகண்ட் மாநிலத்தில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி உள்ள அனைவரும் அடுத்த 2 நாள்களில் மீட்கப்படுவர் என உத்தரகண்ட் முதல்வர் விஜய் பகுகுனா தெரிவித்துள்ளார். ஹர்சில் பகுதியில் இன்னும் மக்கள் சிக்கி உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மீட்புப் பணிகள் குறித்து தெரிவித்தபோதே விஜய் பகுகுனா இதனைத் தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான்களுடன் பேச அமெரிக்கா தயார்

## தலைவர்கள் அறிவிப்பு

காபூல், ஜூன் 27
தலிபான் அமைப்பினருடன் பேச்சுக்கள் நடத்தத் தயார் என்று அமெரிக்கா மற்றும் ஆப்கன் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

காபூலில் ஜனாதிபதி மாளிகைக்கு அருகாமையில் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வன்முறைகளைக் கட்டுப்படுத்த சமாதானப் பேச்சுக்களே சிறந்த வழி என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும், ஆப்கன் ஜனாதிபதி ஹமீட் கர்ஸாயும் தெரிவித்துள்ளனர். தொலைபேசி மூலம் இருவரும் கலந்துரையாடிய பின்னரே இந்த அறிவிப்பை விடுத்துள்ளனர்.

''ஆப்கனில் உயிரிழப்புகளை ஏற்படுத்திக் கொண்டு கட்டாரில் சமாதான அலுவலகத்தைத் தலிபான்கள் அமைப்பதில் பயனில்லை. ஆப்கன் மக்களின் எதிரிகள் சமாதானத்தை விரும்பவில்லை என்பது ஜனாதிபதி மாளிகைக்கு அருகாமையில் இடம்பெற்ற தாக்குதலின் மூலம் மீள அம்பலமாகியுள்ளது'' என்றும் கர்ஸா சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, சமாதானப் பேச்சுக்கள் குறித்த இருநாட்டுத் தலைவர்களின் கருத்துக்கு தலிபான் அமைப்பினர் எவ்வித கருத்துக்களையும் இதுவரையில் வெளியிடவில்லை. (ற)



ஈராக் தலைநகர் பாக்தாக்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கார்க்குண்டுவெடிப்புச் சம்பவத்தில் பத்துப் பேர் உயிரிழந்ததுடன், ஏராளமானோர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். (ற)

# மன்னிப்பு கேட்டார் இந்தோனேஷிய ஜனாதிபதி



கோலாலம்பூர், ஜூன் 27
சுமாத்திரா தீவு காட்டுத் தீயால் சிங்கப்பூர், மலேசியாவில் ஏற்பட்ட பாதிப்புகளுக்காக, இந்தோனேசிய ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யுதோயோனோ மன்னிப்புக் கோரியுள்ளார்.

இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயால் அயல் நாடுகளான சிங்கப்பூர், மலேசியாவுக்கும் கடும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. காட்டுத்தீயால் ஏற்பட்டுள்ள கடும் புகை மூட்டம் சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளைக் சூழ்ந்துள்ளது. காட்டுத்தீ புகைமூட்டத்தைக் கட்டுப்படுத்த இந்தோனேஷியா எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சிங்கப்பூர் குற்றஞ்சாட்டியுள்ளது.

சிங்கப்பூரின் குற்றச்சாட்டு குறித்து இந்தோனேஷிய சுற்றுச்சூழல் அமைச்சர் கூறுகையில், ''சிங்கப்பூர் இந்த விடயத்தில் சிறுபிள்ளைத்தனமாக குற்றஞ்சாட்டுகிறது'' என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்தோனேஷிய ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யுதோயோனோ கருத்துக் கூறும்போது, ''காட்டுத்தீ புகைமூட்டத்தால் சிங்கப்பூர், மலேசியாவில் ஏற்பட்ட பாதிப்புக்காக, இந்தோனேஷிய ஜனாதிபதி என்ற முறையில் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். இந்த பிரச்சினையைக் கையாள்வதில் எங்களுக்குள்ள பொறுப்பை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்'' என்று தெரிவித்தார். (ற)

# பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்போம்

## ஐ.நாவில் தீர்மானம் நிறைவேற்றம்

ஜெனிவா, ஜூன் 27
பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளைத் தடுக்கும் நோக்கத்துடன் ஐ.நா.வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாலியல் குற்றங்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று அந்த தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

15 நாடுகள் அடங்கிய ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில், பெண்கள் பாதுகாப்பு மற்றும் அமைதி தொடர்பான விவாதம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதன்போதே குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அங்கு கருத்துத் தெரிவித்த ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூன், ''பெண்களுக்கு எதிரான பாலியல் கொடுமைகள் எந்தச் சூழ்நிலையில், எந்த இடத்தில் நடைபெற்றிருந்தாலும் அது மிகவும் கொடூரமான குற்றம். ஆட்சி, அதிகாரத்தில் உள்ளவர்கள் இது போன்ற குற்றங்களைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று வலியுறுத்தினார்.

அகதிகளுக்கான ஐ.நா. சிறப்புத் தூதரான ஹொலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜூலியும் இந்த விவாதத்தில் பங்கேற்றார். தீர்மானம் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கும்போது,

''அனைத்து நாடுகளிலும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஆட்சியிலும், அரசியலிலும் உள்ளவர்கள் முனைப்புடன் பணியாற்ற வேண்டும்.

பெண்களுக்கு எதிரான கொடுமைகளை தீவிரமான பிரச்சினையாக எடுத்துக் கொண்டு ஐ.நாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பாலியல் கொடுமைகளைத் தடுக்க தொடர் நடவடிக்கை எடுக்காவிட்டால், அதனைத் தடுக்க முடியாது'' என்றார் ஏஞ்சலினா ஜூலி. (ற)

# இந்தியாவுடன் பேச்சு

## எல்லைப் பிரச்சினை தொடர்பாக சீனா அறிவிப்பு

பீஜிங், ஜூன் 27
எல்லைப் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுடன் பேச்சுகள் நடத்தப்படவுள்ளன என்று சீனா தெரிவித்துள்ளது.

சீனா-இந்தியாவுக்கு இடையே நீண்ட காலமாக நிலவி வரும் எல்லைப் பிரச்சினைகள் குறித்து நாளையும், நாளை மறுதினமும் பீஜிங்கில் நடைபெறவுள்ள பேச்சுக்களில் கலந்துரையாடப்படவுள்ளது என்று சீன வெளியுறவுத்துறைச் செய்தித் தொடர்பாளர் ஹுவா சன்யிங் தெரிவித்துள்ளார்.

''எல்லைப் பிரச்சினை தொடர்பாக இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரும், சிறப்பு பிரதிநிதியுமான சிவ்சங்கர் மேனன் நாளையும், நாளை மறுதினமும் சீனாவின் சிறப்பு பிரதிநிதி யாங் ஜிய்சியுடன் பீஜிங்கில் பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

எல்லையில் அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு தொடர்பான வரைபடங்களைப் பரிமாறிக் கொள்வது தொடர்பாக இந்தப் பேச்சுகளின் போது கலந்துரையாடப்படும். அடுத்தவாரம் சீனாவுக்கு வரவுள்ள இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனியுடனும் இது குறித்துக் கலந்துரையாடப்படும்'' என்று அவர் தெரிவித்தார்.

சீனப்பிரதமர் லீ கெகியாங்கின் இந்தியாவுக்கான சுற்றுப்பயணம் நிறைவடைந்துள்ள நிலையில் இந்தப் பேச்சுகள் ஆரம்பமாகின்றன. எல்லைப் பிரச்சினை தொடர்பாக 2005ஆம் ஆண்டு இருநாடுகளும் மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இந்தச் பேச்சுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

# தென்கொரியா மீது இணையத் தாக்குதல்



சியோல், ஜூன் 27
தென்கொரியா மீது நடத்தப்பட்ட இணையத் தாக்குதலில் ஜனாதிபதியின் அலுவலக இணையத்தளம் உட்பட பல இணையத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளன. அதையடுத்து இத்தாக்குதல் குறித்து அந்நாட்டு மக்களை எச்சரித்துள்ளது தென்கொரிய அரசு.

கொரிய தீபகற்பம் உடைந்து தென் கொரியா மற்றும் வட கொரியா என இரு நாடுகள் உருவாகக் காரணமாய், அமைந்த 1950- 53ஆண்டுகளில் நிகழ்ந்த போரின் ஆரம்ப தினமான நேற்று இந்த இணையத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலை தென் கொரியாவின் அறிவியல் துறை அமைச்சகமும் உறுதி செய்துள்ளது. எனினும், இத்தாக்குதல் நடத்தியவர்கள் (ஹேக்கர்கள்) பற்றிய விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இந்த ஆண்டு மார்ச் 20ஆம் திகதியன்று, 6 தென்கொரிய வங்கிகள் மற்றும் ஒளிபரப்பாளர்களின் இணையத் தளங்கள் மீது நடந்த இணையத் தளத் தாக்குதலில், 32,000க்கும் மேற்பட்ட கணினிகள் தாக்கப்பட்டு வங்கிப் பணிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. (ற)

# ஸ்நோடனுக்குத் தஞ்சம் ஆராய்கிறது வெனிசுவேலா



கராக்கஸ், ஜூன் 27
அமெரிக்காவின் புலனாய்வுத் தகவல்களை அம்பலப்படுத்திய எட்வட் ஸ்நோடனுக்கு அரசியல் புகலிடம் வழங்குவது குறித்து ஆராய்ந்து வருவதாக வெனிசுவேலா தெரிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை விடுத்துள்ள வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கலஸ் மடுரோ, ஸ்நோடனின் தைரியத்தைப் பாராட்டியுள்ளார்.

எட்வட் ஸ்நோடனின் விவகாரத்தில் சீனாவையும் ரஷ்யாவையும் அமெரிக்கா கடுமையாகச் சாடிவருகின்றது.

இதேவேளை, வேறு நாட்டிற்கு செல்லும் நோக்கில் ஸ்நோடனின் மொஸ்கோ விமான நிலையத்தில் தற்காலிகமாக தங்கியுள்ளதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் குறிப்பிட்டுள்ளார்.

குற்றங்களுடன் தொடர்புடையவர்களை நாடு கடத்துவதற்கான பரஸ்பர ஒப்[illegible] அமெரிக்காவும் கைச்சாத்திடவில்லை. எனினும் ஸ்நோடனை நாடு கடத்துமாறு அமெரிக்கா ரஷ்யாவிடம் வலியுறுத்தலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, ஸ்நோடன் ஈக்குவடோரில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளதுடன், விக்கிலீக்ஸ் இணையத் தளத்தின் ஆதரவாளர்கள் இவருக்கான ஒத்துழைப்புக்களை வழங்குவதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்க இராஜாங்கத் தகவல்களை வெளியிட்ட விக்கிலீக்ஸ் இணையத் தளத்தின் ஸ்தாபகர் ஜூலியன் [illegible]வே ஈக்குவடோரில் அரசியல் தஞ்சம் கோரியிருந்தார். (ற)

# கண்காணிப்பு தொடர்பாக விளக்கமளிக்க வேண்டும்

## பிரிட்டனிடம் ஜேர்மனி வலியுறுத்து



பேர்லின், ஜூன் 27
தமது நாட்டு தொலைபேசி உரையாடல்கள், மின்னஞ்சல்கள் போன்றவற்றை இரகசியமாக பதிவு செய்தமை குறித்து பிரிட்டனிடம் ஜேர்மனி விளக்கம் கேட்டுள்ளது.

ஜேர்மனியில் இருந்து இணையம் மூலம் பரிமாறிக் கொள்ளப்படும் தகவல்களை பிரிட்டனின் உளவு அமைப்பு கடந்த 18 மாதங்களாக பதிவு செய்து வந்துள்ளது.

இவை தவிர ஜேர்மனி நாட்டவரின் பேஸ்புக் உள்ளிட்ட சமூகவலைத் தளங்களில் பதிவு செய்யும் தகவல்கள், தொலைபேசி உரையாடல்கள் உள்ளிட்ட பல விடயங்களை பிரிட்டன் இரகசியமாக கண்காணித்து வந்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள ஜேர்மனியின் சட்டம், நீதித்துறை அமைச்சர் சபினி லியுத்யூசர் ''பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் லட்சக்கணக்கான ஜேர்மனியர்களின் தகவல்கள் திருடப்பட்டுள்ளன. இப்படிச் செய்வதற்கு எந்த நாட்டுச் சட்டத்திலும் இடமில்லை. ஐரோப்பிய யூனியனில் உறுப்பினராக உள்ள பிரிட்டனுக்கும் அந்த அமைப்பின் தகவல் பாதுகாப்புச் சட்டம் பொருந்தும். எனவே இது தொடர்பாக பிரிட்டன் விளக்கமளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்'' என்று அவர் தெரிவித்தார்.

பிரிட்டனின் கண்காணிப்பு நடவடிக்கைக்கு ஜேர்மனியில் பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று(27.06.2013)வியாழக்கிழமை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் வெளிவாரி பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டம் பெறும் ஆரியகுளம் புதிய உயர்கல்லூரி மாணவர்களையும் அவர்களை வழிப்படுத்திய விரிவுரையாளர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

S.ANCHANA, Kondavil East, Kondavil.
T.SITSHAKTHY, Punnalaikaduvan South, Chunnakam.
P.RAJINI, Meruthady, Karainagar.
S.PATHMASHANTHY, Araly South, Vaddukkoddai.
K.KARTHIKA, 2nd Lane, Brown Road, Jaffna.
S.SUKANYA, Kanagasabai Road, Manipay.
B.PRIYANGA, Ida kurichchi, Varany.
U.RUSITHA, Kokuvil East, Kokuvil.
R.QUEENCY, Kokuvil East, Kondavil.
T.AGITHA, Kokuvil West, Kokuvil.
K.KESITHA, Meesalai North, Kodikamam.
V.SIVATHARSINI, Suthumalai South, Manipay.
R.SASIKALA, Thavady South, Kokuvil.
T.ANUSULA, Kaddudai, Manipay.
M.LOGIN, Amman Road, Kantharmadam.

S.LUXAJINI, Keerimalai Street, Ilavalai.
K.RUBAKALA, Mukamalai North, Eludumadduval.
K.VASANTHAVALLY, Kokuvil East, Kokuvil.
R.KIRUSHANTHY, Puloly North, Point Pedro.
G.JENIPA, Imayanan East, Udupiddy.
V.SUTHARSINI, Nallur, Jaffna.
E.THARANI, Alvai North, Point Pedro.
S.SUMASKA, Kaithady North, Kaithady.
S.SIVARANCHINY, Barathi Road, Pathameny, Atchuvely.
S.NIRUJA, Puttur East, Puttur.
A.KIRUBALENY, Puttur East, Puttur.
THARAKAI, Vithakapuram, Tellipalai.
V.UMAGOWRY, Chulipuram East, Chulipuram.
T.SIVAPPIRIYA, Puttur West, Puttur.
S.VITHTHIKA, Madduvil South, Chavakachcheri.

V.SUJANTHINY, Navatkuli Junction, Navatkuli, Kaithady.
R.SUGANTHINI, Urelu East, Urelu.
T.ALAKSSHANTHINI, Punnalaikkaduvan North, Thedatpulam.
M.PAVITHIRA, Pokkalai Lane, Uduppiddy.
S.SANGEETHTHA, Mariamman Road, Thirunelvely.
P.USHANTHINY, Mullaiyadi, Palai.
M.THISARUBAN, Kumulamunai, Poonakary.
S.SASIVANI, Mukamalai, Eluthumadduval, Palai.
T.SARATHBABU, Somasundram Road, Anaicoddai.
T.SUTHA, Alliyawattai, Kopay Center, Kopay.
N.PIRAVEENA, Atchuveli North, Atchuveli.
S.GANGATHEVI, Pokkalai Lane, Uduppiddy.
V.PAVITHRA, Maliddy North, Maliddy.
V.THARANI, Maruthankerny South, Thalaiyady.
B.ANANTHARANI, Puthuththoodam, Alvai South, Alvai.

S.KANCHANA, Kadavaipulam, Chunnakam.
M.ANOJA, Alaveddy West, Alaveddy.
V.VIGITHA, Madduvil South, Chavakacheheri.
S.SARMILA, Arivoli Road, Puttur East, Puttur.
S.THIRUMAVALAVAN, Sandilipay South, Sandilipay.
I.THULASI, Uduvil South, Manipay.
P.PIRATHAPAN, Atchuveli North, Atchuveli.
V.ARUDSELVY, Kalapoomi, Kaarainagar.
S.SUJEEVAN, Thavadi North, Kokuvil.
T.THARMASEELAN, Thavalai Eyattalai, Vaany.
V.KIRISHA, Brown Road, Jaffna.
S.PIRIYATHARSINI, Avarangal, Puttur.
S.SATHTHIYAPAMA, Idaikkurichy West, Varany.
V.KOHILAVARTHINI, Pokkalai Lane, Uduppiddy.
M.SUTHARSHINY, Ward No. 05, Analaitivu.

R.SAMBAVY, Palam Road, Kantharmadam, Jaffna.
S.THARSINI, Karanavai North, Valvettiturai.
S.THUSHYANTHI, Aththiyadi, Jaffna.
P.SATHIARAGAVAN, Arasady Road, Jaffna.
S.SOUNTHAKUMAR, Pannalai, Tellipalai.
R.SUVARNATHAS, Atchchelu North, Neervely.
T.VIJEKARAN, Vithakapuram, Tellipalai.
T.KAJAN, Anaicoddai West, Anaicoddai.
B.SHAMINI, Kokuvil East, Kokuvil.
K.KUVENTHINY, Kaithady South, Kaithady.
P.SINTHUJA, Kopay Center, Kopay.
M.YATHEESWARAN, Achchelu, Neervely.
M.ARULSELVANAYAGAM, Manthuvil West, Kodikamam.
V.PIRATHEEPAN, Vatharawatai, Puttur.
N.SIVAKUMARAN, Karanavai North, Vathiry, Karaveddy.

S.PARTHIPAN, Madduvil North, Chavakachcheri.
R.THARMENTHIRA, Manthuvil East, Kodikamam.
S.KIRUPAKARAN, Solai Valavu, Tellipalai.
R.GOWRTHAMAN, Atchuveli South, Atchuveli.
S.JENITA, Navanthurai, Jaffna.
V.REVATHY, Karanavai North, Karaveddy.
R.NITHTHIYA, Sagayapuram, Mathagal.
S.MENAGA, Moolai South, Chulipuram.


Congratulations on your success

வாழ்த்துவோர்:
கலைமாணிப் பட்டம் பெறும் மாணவர்களின் பெற்றோர்கள்.

(C/10108)(5.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லுண்டாய் மக்களுக்கு மின்



வலி.தென்மேற்கு பிரதேசத்தில் கல்லுண்டாய் பகுதியில் மீள் குடியமர்ந்த குடும்பங்களுக்கு மின்சார இணைப்பு வழங்கப்படவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் கல்லுண்டாய் பகுதியிலுள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் பல வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட மகேஸ்வரன் வீட்டுத் திட்டம், கிராம சபை வீட்டுத் திட்டம் ஆகியவற்றில் 28 வீடுகள் அடங்குகின்றன. இதேவேளை பிரதேச சபைக்குச் சொந்தமாக உள்ள மேலும் 5 பரப்பு காணியில் மக்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இந்த நிலையில் கல்லுண்டாய் பகுதியிலுள்ள வீட்டுத் திட்டத்தில் மீள்குடியமர்ந்த குடும்பங்கள் மின்சார வசதி கிடைக்காமல் பெரும் சிரமங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். (வ-115)

# 'பவ்ரல்' ஏற்பாட்டில் நடமாடும் சேவை

## ஜுலை முதலாம் திகதி முதல் பிரதேச செயலர் பிரிவுகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ். மாவட்டத்தில் சகலருக்கும் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் 'பவ்ரல்' அமைப்பால் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 9 ஆம் திகதி வரையில் நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளதாக அதன் அமைப்பாளர் சபாநாயகம் சிறீதரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் பலர் தேசிய அடையாள அட்டை இல்லாத நிலையில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்த மாத ஆரம்பத்திலும் 'பவ்ரல்' அமைப்பினால் நடமாடும் சேவை கோப்பாய், சங்கானை பிரதேச செயலர் பிரிவுகளில் நடத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலும், 3 ஆம் திகதி ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிலும் , 4 ஆம், 5 ஆம் திகதிகளில் உடுவில் பிரதேச செயலர் பிரிவிலும் , 8 ஆம் திகதி வேலணை பிரதேச செயலர் பிரிவிலும் ,9 ஆம் திகதி புங்குடுதீவு சர்வோதயம் அலுவலகத்திலும் நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.


நடைபெறவுள்ள இலவச நடமாடும் சேவையூடாக அடையாள அட்டையைத் தொலைத்தவர்களும் பயன்பெற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

> நடைபெறவுள்ள இலவச நடமாடும் சேவையூடாக அடையாள அட்டையைத் தொலைத்தவர்களும் பயன்பெற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சைக்கிளுக்கு 'லைற்' இன்றி பயணித்த இருவருக்கு அபராதம்

வடமராட்சி, ஜூன் 27

இரவு நேரத்தில் 'லைற்' இன்றி சைக்கிளில் பயணம் செய்த இருவரை தலா 2 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் செலுத்துமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குள் சைக்கிள்களில் 'லைற்' இன்றி பயணித்த இருவர் மீது பருத்தித்துறை பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கை விசாரணை செய்த பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் இருவரையும் தலா 2 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (வ-8)

# மந்திகை கிடங்குகளில் குப்பை கொட்டாதீர்கள்



வடமராட்சி, ஜூன் 27

மந்திகையில் கிடங்குகள் அமைந்துள்ள இடத்தில் குப்பை கூளங்களைக் கொட்ட வேண்டாம் என அந்தப் பகுதிக்கான பொது சுகாதாரப் பரிசோதகர் விளம்பர அட்டை மூலம் அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மந்திகை சிலையடிச் சந்திக்கும், ஆஸ்பத்திரிச் சந்திக்கும் இடையில் மேற்குப் புறத்தில் விசாலமான கிடங்குகள் காணப்படுகின்றன. சட்டி, பானைகள் உட்பட மட்கலப் பொருள்களை வனைவதற்காக குறித்த பகுதியில் அரை நூற்றாண்டு காலத்துக்கு முன்னர் மண் பெருவாரியாக அகழப்பட்டது. இதனால் உருவான மிக விசாலமான கிடங்குகளில் கடந்தகாலங்களில்பலரும்குப்பை. கூளங்களைக் கொட்டி வந்தனர். மரம், செடி, கொடிகள், பற்றைகள் வளர்ந்து கொண்டிருக்கும் இந்தக் கிடங்குகளுக்குள் சுற்றுச் சூழல் பாதுகாப்புக் கருதி குப்பை கூளங்களைக் கொட்ட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (வ-8)

## மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள்




மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில், புலம்பெயர் அன்பரொருவரின் அனுசரணையில் நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை மாணவர்களுக்கான கற்றல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா பிரதம விருந்தினராகவும் வலி.தென்மேற்கு பிரதேச சபை இளைஞர் சேவை அதிகாரி நவசக்தி ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (வ-23)

### விதவைகள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

சர்வதேச விதவைகள் தினத்தை முன்னிட்டு நெதர்லாந்து கூட்டுறவு மனிதநேய அமைப்பும், யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் விதவைப் பெண்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குசமாசப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அருந்தவநாதன் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் சமாசத்துடன் இணைந்துள்ள பெண்களில் கணவனை இழந்த 100 பெண்க்ளைக் கௌரவிப்புச் செய்து நினைவுப்பரிசில்வழங்கும்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (வ-14)

# மீளக்குடியமர்ந்தோரின் வசதிக்காக குழாய்க் கிணறு

வலி.தென்மேற்கு, ஜூன் 27

கல்லுண்டாய் பிரதேசத்தில் வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு சொந்தமான வீட்டுத் திட்டத்தில் மீள் குடியமர்ந்த மக்களின் நலன் கருதி 50 ஆயிரம் ரூபா செலவில் குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.



பல வருடங்களுக்கு முன் கிராம சபை இயங்கிய காலப் பகுதியில் கல்லுண்டாய் பிரதேசத்திலிருந்த கிராம சபைக்குச் சொந்தமான காணியில் கிராம சபையால் கட்டப்பட்ட 16 வீடுகளில் வாழ்ந்து வந்த குடும்பங்கள் நாட்டில் இடம்பெற்ற போர்ச் சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்ந்து வந்தனர்.

நாட்டில் அமைதி நிலை உருவானதைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து சென்ற குடும்பங்களில் 8 குடும்பங்கள்சொந்த இடங்களில் மீள் குடியமர்ந்தன.

வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் மக்களின் பயன்பாட்டுக்காக வெட்டப்பட்டிருந்த இரு கிணறுகளும் பாவிக்க முடியாதவாறு மூடப்பட்டுள்ளதால் அந்தக் குடும்பங்கள் குடிதண்ணீர் தவிர்ந்த வேறு தேவைகளுக்காக வயல் வெளிகளிலுள்ள கிணறுகளைப் பயன்படுத்தின.(வ-115)

## செஞ்சிலுவைச் சங்கத்தால் 183 குடும்பங்களுக்கு கழிப்பறைகள் இதுவரை அமைக்கப்பட்டன

வலி.வடக்கு, ஜூன் 27

யாழ்.மாவட்டத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சுகாதாரச் செயற்பாடுகளின் கீழ் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 183 குடும்பங்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதி உதவியுடன் மலசலகூட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் கு.பாலகிருஸ்ணன் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களில் இன்றும்கூட மலசலகூட வசதிகள் அற்ற நிலை காணப்படுகின்றது.

பருத்தித்துறை பிரதேசத்தில் 90 ஆயிரம் ரூபா பெறுமதியில் தலா 138 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டன.

மக்கள் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வளலாய் கிராமத்தில் உள்ள 45 குடும்பங்களுக்கு 40 மில்லியன் ரூபா செலவில் 45 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

அவற்றை விட பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 14 பாடசாலைகளுக்கு 14 மில்லியன்ரூபாசெலவில்மல சலகூடங்கள் அமைத்தும் கொடுக்கப்பட்டுள்ளன- என்றார். (வ-86)

### போத்தல் குத்தில் ஒருவர் காயம்

தென்மராட்சி, ஜூன் 27

வீதியில் நடந்து சென்றவர் உடைத்த போத்தலால் குத்தப்பட்டு காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு வரணிப் பகுதியில் இடம்பெற்றது.

உடைந்த போத்தலால் குத்தப்பட்டு கையில் காயமடைந்த நிலையில் வரணி, கரம்பைக் குறிஞ்சியைச் சேர்ந்த அன்பழகன் நிர்மலன் (வயது-27) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, வரணிப் பகுதியில் கடந்த மூன்று தினங்களில்தாக்குதல்களுக்கு உள்ளாகி காயமடைந்தவர்களின்எண்ணிக்கை ஏழாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# '13' ஐ ஒழிக்க எதிர்ப்பு

## திருமலை நகர சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

திருகோணமலை.ஜுன் 27
13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒழிக்கும் முயற்சியைக் கைவிட்டு தமிழ் பேசும் மக்களுக்கு நிலைத்து நிற்கக்கூடியதும் நியாயமானதுமான அதிகாரப்பகிர்வை வழங்கி மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யுமாறு திருகோணமலை நகரசபை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கோரியுள்ளது.
இதுதொடர்பான பிரேரணை திருகோணமலை நகரசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.
1987 ஆம் ஆண்டு ராஜீவ்-ஜெயவர்த்தனா உடன்படிக்கையின் கீழ் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளின் அதிகாரங்களை கடந்த 25 ஆண்டுகளாக பெரும்பான்மையின மக்களும் அனுபவித்து வந்தனர்.
தற்போது வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்படவுள்ளபோது 13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்று பேரின வாதிகள் குரல் எழுப்புகின்றனர்.
இந்த நடவடிக்கை இனங்களுக்கு இடையேயான நல்லிணக்க முயற்சிகளுக்கு தீங்கிழைக்கும். அத்துடன் இனவிரிசலையும் ஏற்படுத்தும்.
எனவே ஜனாதிபதி உடனடியாக தலையிட்டு தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடியதான அரசியல் தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்று பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

# ஒலுவில் துறைமுகத்தின் திறப்பு விழா ஒத்திவைப்பு



அம்பாறை.ஜுன் 27
ஒலுவில் துறைமுகத்தின் திறப்பு விழாவை ஒத்திவைக்குமாறு மீன்பிடி அமைச்சருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.
ஒலுவில் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள துறைமுகத்தை விரைவில் திறக்க வேண்டும் என்று அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.
அதனையடுத்து, எதிர்வரும் ஜுலை மாதத்தில் இந்த துறைமுகத்தை திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார்.
எனினும் ஜுலை மாதம் புனித நோன்பு ஆரம்பமாகின்றமையினால் திறப்பு விழாவை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் வரை ஒத்திவைக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் மீண்டும் கோரிக்கை விடுத்தார்.
அதனையடுத்து, இந்தத் திறப்பு விழாவை ஒகஸ்ட் மாதத்தில் நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் தெரிவித்தார். (ச)



மலேரியா நோயை தடுக்கும் நோக்கில் திருகோணமலை, வீரநகர் பகுதியில் உள்ள சுமார் 600 குடும்பங்களுக்கு இலவச நுளம்புவலை வழங்கும் நிகழ்வு புதன்கிழமை இடம்பெற்றது.
இந்நிகழ்வில் திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராஜா கலந்துகொண்டு பயனாளி ஒருவருக்கு நுளம்பு வலை வழங்குகிறார். (ச-40)

# சோரம் போகாத கட்சி கூட்டமைப்பு

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கூறுகிறார்

மட்டக்களப்பு. ஜூன் 27
அரசின் சலுகைகளுக்கு சோரம் போகாத கட்சியாகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இருந்து வருகிறது என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.



நாவிதன்வெளி, வேப்பையடி உதயா விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
இளைஞர்கள் எதை நினைத்தாலும் சாதிக்க முடியும். இளைஞர்களின் ஒத்துழைப்பும் ஒத்தாசையும் இல்லாவிட்டால் எதனையும் வெல்லமுடியாது.
கிழக்கு மாகாணத்தைப் பொறுத் தவரை வேப்பையடி வைத்தியசாலைக்குத்தான் நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. வேப்பையடி வைத்தியசாலையின் புறக்கணிப்பானது இனரீதியான புறக்கணிப்பாகவே மக்கள் கருதுகின்றனர்.-என்றார். (ச)

# சந்தர்ப்பவாத அரசியலை செய்கிறது மு.காங்கிரஸ்

## அதாவுல்லா குற்றச்சாட்டு

பொத்துவில், ஜூன் 27
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சந்தர்ப்பவாத அரசியலை மேற்கொள்கிறது. வாக்குகளை சூறையாடியவர்களால் அபிவிருத்திகளை செய்ய முடியவில்லை என்று உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா குற்றஞ்சாட்டியுள்ளார்.
பொத்துவில் பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மக்களிடம் கையளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
கிழக்கு மாகாணத்தில் அரசியல் அதிகாரம் வழங்கப்படாமல் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் மூதூர், பொத்துவில் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே பொத்துவில் மக்கள் வாக்குகளை வழங்கிவிட்டு ஏமாற்றப்படுகின்றனர். நாம் ஒருபோதும் மக்களைப் பாரபட்சமாகப் பார்ப்பதில்லை. கிழக்கு மாகாணத்தின் கண்ணாக பொத்துவில் காணப்படுகின்றது. முஸ்லிம் காங்கிரஸ் வெறும் வாக்குறுதிகளை மட்டுமே வழங்குகின்றது. முஸ்லிம் காங்கிரஸ் சந்தர்ப்பவாத அரசியலைத்தான் மேற்கொள்கிறது. தலைவர் அஷ்ரப் பின் மறைவுக்குப் பின்னர் கட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட தலைமை இனவாதத்தை மூலதனமாக்குகின்றது.- என்றார். (ச-ரி)



# சிவில் பாதுகாப்புக் குழு சட்டம் பேண அவசியம்

அம்பாறை. ஜூன் 27
சிவில் பாதுகாப்பு குழுக்கள் சிறப்பாக செயற்படும்போதுதான் பிரதேசத்திலுள்ள குற்றச்செயல்களை தடுத்து நிறுத்தி நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் பேணமுடியும்.
இவ்வாறு அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கபிலஜயசேகர தெரிவித்தார்.
சவளக்கடை பொலிஸ் பிரிவுக்கான சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம் சவளக்கடை பொலிஸ் நிலைய வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். (ச)

# 'கோல் சீல்' சிகரெட்டை வைத்திருந்தவர் கைது



அக்கரைப்பற்று. ஜூன் 27
அக்கரைப்பற்றில் தடை செய்யப்பட்ட 'கோல் சீல்' சிகரெட்டுக்களை வைத்திருந்த நபர் ஒருவரை பொலிஸார் திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.
இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் தெரிவித்ததாவது:
கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து மூன்று 'பண்டில்' சிகரெட்டுக்களை மீட்டுள்ளோம்.
எமக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து அக்கரைப்பற்று முதலாம் பிரிவிலுள்ள குறித்த நபரின் வீட்டைச் சுற்றி வளைத்த போதே தடை செய்யப்பட்ட சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டன.
கைது செய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- எனத் தெரிவித்தனர். (ச-ரி)

# வீடமைப்பு அதிகாரசபை உப அலுவலகத்தை தரம் உயர்த்துங்கள்

## ஜனாதிபதியிடம் அரச பொது ஊழியர் சங்கம் வேண்டுகோள்

அம்பாறை.ஜுன் 27
கல்முனை வீடமைப்பு அதிகாரசபை உப அலுவலகத்தை மீண்டும் முழுமை பெற்ற நகர அலுவலகமாக இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
இது தொடர்பில் சங்கம் ஜனாதிபதி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள மனுவிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் நலன்கருதி கடந்த பத்து வருடகாலமாக முழுமை பெற்ற நகர அலுவலகமாக இயங்கி வந்த மேற்படி வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனை நகர அலுவலகம், தற்பொழுது உபஅலுவலகமாகத் தரம் குறைக்கப்பட்டு இயங்குகிறது.
இந்த அலுவலகத்தின் பல முக்கிய பிரிவுகள், அம்பாறையிலுள்ள வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அலுவலகத்துடன் இணைக்கப்பட்டு கரையோரப் பிரதேச மக்களுக்குத் துரோகமிழைக்கப்பட்டுள்ளது.
பதினையாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பான வீடமைப்புக் கடன்பெறல் உட்பட பல்வேறு நன்மைகளையும் இந்த நகர அலுவலகம் மூலம் பெற்று வந்தன.
ஆனால் இந்த நகர அலுவலகத்தின் பல முக்கிய பிரிவுகள் அம்பாறையிலுள்ள வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைக்கப்பட்டுள்ளன.
இதனால் முன்னர் போன்று மாவட்ட கரையோரப் பிரதேச தமிழ், முஸ்லிம் மக்கள் தமது தேவைகளுக்கென அம்பாறையிலுள்ள அலுவலகத்துக்கு பல்வேறு சிரமங்களை அனுபவித்துச் செல்ல வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.
வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உப அலுவலகமாக இயங்கும் இந்த அலுவலகத்தை மீண்டும் முழுமையான செயற்பாடுகள் கொண்ட நகர அலுவலகமாக இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# '13' ஐ நடைமுறைப்படுத்தாவிட்டால் இலங்கைக்கு பாதிப்புக்கள் அதிகம்

## தயான் ஜயதிலக எச்சரிக்கை



கொழும்பு,ஜூன் 27
13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதனால் இலங்கைக்கு பாதிப்புக்கள் அதிகம் ஏற்படும் என்று முன்னாள் இராஜதந்திரி தயான் ஜயதிலக தெரிவித்தார்.
சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
விடுதலைப் புலிகள் முதல் இடதுசாரி கோட்பாடுகளை பின் பற்றி வரும் சகல தப்பினரும் 13 ஆம் திருத்தச் சட்டம் போது மானதல்ல என்ற நிலைபாட்டிலேயே இருந்தனர்.
13 ஆம் திருத்தச் சட்டத்தை சிலர் ஈழத்துக்கான வழியாகவும், நாட்டை பிளவுபடுத்தக் கூடிய ஒன்றாகவும் பிரசாரம் செய்கின்றனர்.
அவ்வாறு என்றால் விடுதலைப் புலிகள் ஏன் 13 ஆம் திருத்தச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்?
தமிழீழத்தை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பதை விடுதலைப்புலிகளுக்கு பாடம் புகட்ட சில தற்போதைய அரசியல் வாதிகள் முயற்சிக்கின்றனர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சகல தரப்பினரும் 13 ஆவது திருத்தச் சட்டம் போதுமானதல்ல என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர் .
எனவே இதனை நடைமுறைப் படுத்தாமல் இருப்பதனால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் அதிகமாகும்.-என்றார். (ச)

## பரீட்சை நடைபெறும் 5 நாள்களுக்கு முன் கருத்தரங்கு நடத்தத் தடை



கொழும்பு,ஜூன் 27
பொது பரீட்சைகள் நடைபெறுவதற்கு ஐந்து நாள்களுக்கு முன்பிருந்து அந்தப் பரீட்சைகள் நிறைவடையும் வரையிலும் மாணவர்களுக்கு கருத்தரங்குகள் மற்றும் மேலதிக வகுப்புகள் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
இந்தத் தகவலை கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.
புதிய கட்டளைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.
இந்த சட்டம் கடந்த 21 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப் படுத்தப்பட் டுள்ளது என்று அவர் கூறினார்.
இந்தப் புதிய சட்டம் ஜி.சீ.ஈ சாதாரண தரம், உயர்தரம், 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.
இந்தச் சட்டத்தை மீறுகின்ற நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## சைபர் தாக்குதல்களை தடுக்க வங்கி முறைமையில் மாற்றம்


கொழும்பு,ஜூன் 27
சைபர் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும் வகையில் இலங்கையின் வங்கி முறைமை நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.
இலங்கையின் வங்கி முறைமை நவீன தொழில்நுட்பத் துறைக்கமைய விஸ்தரிக்கப்பட்டுள்ள போதிலும், இணையம் மூலம் மேற்கொள்ளப்படும் சைபர் தாக்குதல் மற்றும் குற்றச் செயல்களை தவிர்க்கும் வகையில் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று அவர் கூறினார்.



இணைய பாதுகாப்புத் தொடர்பான மாநாடு செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார்.

## பட்டதாரி ஆசிரியர்களை தெரிவு செய்யப் பரீட்சை

### ஜூலை 6 கொழும்பில்



கொழும்பு,ஜூன் 27
தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பட்டதாரி ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 6ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.
உதவிச் சுங்க அத்தியட்சகர் தரம் 11 இற்கான வினைத்திறன் பரீட்சை மற்றும் 2012-2013 ஆம் ஆண்டுக்கான சுங்க பரிசோதகர் தரம் 11 இற்கு ஆள்களை தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சையும்,எதிர்வரும் 7ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளன.
இந்தப் பரீட்சைகள் தொடர்பான மேலதிக விவரங்களை அறிய விரும்புவோர் பத்தரமுல்லை, பெலவத்தையிலுள்ள இலங்கை பரீட்சை திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மனித உரிமைகள் சட்டத்தில் திருத்தம்

### மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை

மனித உரிமைகள் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துவருகிறது.
இது விடயம் தொடர்பில் மனித உரிமைகள் தொடர்பான சிவில் அமைப்புக்களிடம் யோசனை மற்றும் கருத்துகளைப் பெற்றுக்கொள்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் பிரதீபா மஹனாமஹேவா தெரிவித்தார்.
அண்மையில் சிவில் அமைப்புக்கள் சிலவற்றுடன் பேச்சு நடத்தியதாகத் தெரிவித்த அவர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு எதிர்காலத்தில் விதிமுறைகள் தயாரிக்கப்படும் என்றும் கூறினார். (ச)

## இலங்கையர்கள் நாடு திரும்புவது அதிகரிப்பு

கொழும்பு,ஜூன் 27
இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து தமிழகத்தில் தங்கியுள்ளவர்கள் நாடு திரும்புவது அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 350 இலங்கையர்கள் நாடு



திரும்பியுள்ளனர் என்று தமிழகத்திலுள்ள ஐ.நா. வின் அகதிகளுக்கான தூதரகம் குறிப்பிட்டுள்ளது.
2012ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரை 1600 பேர் இலங்கைக்குத் திரும்பியுள்ளனர் என்று தூதரகம் தெரிவித்துள்ளது.
நாடு திரும்பியவர்களுக்கு பாதுகாப்புத் தொடர்பான அச்சுறுத்தல்கள் காணப்படுவதாக இதுவரையில் எவ்வித முறைப்பாடுகளும் பதிவாகவில்லை என்று தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.
நாடு திரும்ப விரும்புபவர்கள் வசிக்கவுள்ள பகுதி பாதுகாப்பானதா என்பதை உறுதிப்படுத்தியதன் பின்னரே, அவர்களை அகதிகளுக்கான தூதரகம் திருப்பியனுப்பி வைக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஆசிரியையை தண்டித்த சம்பவத்தின் சாட்சியை மாற்ற முயற்சி

கொழும்பு,ஜூன் 27
வடமேல் மாகாண சபை உறுப்பினர் ஆனந்த சரத்குமாரவினால், நவகத்தேகம நவோதய பாடசாலையின் ஆசிரியை முழந்தாளிட வைக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட சம்பவம் தொடர்பான சாட்சிகளை மாற்றம் செய்வதற்கு மாகாண கல்வி அதிகாரிகள் முயற்சித்து வருகின்றனர் .
இவ்வாறு கல்வி சார் உத்தியோகத்தர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.
கடந்த முதலாம் திகதி புத்தளம் வலயக் கல்விப் பணிப்பாளர் குறித்த பாடசாலைக்குச் சென்று சம்பவத்தை நேரில் கண்ட பிரதி அதிபர் உட்பட மூன்று ஆசிரியர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்தார் என்று அந்தச் சங்கத்தின் பொதுச் செயலர் வசந்த தர்மசிரி தெரிவித்தார்.
இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள புத்தளம் வலயக் கல்விப் பணிப்பாளர் காமினி பண்டார, பாடசாலையில் ஏற்பட்டிருந்த குழப்ப நிலையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் நோக்கிலேயே அங்கு சென்றேன் என்று கூறியுள்ளார்.
இந்தப் பிரச்சினை குறித்து [illegible] மளிக்கும் நோக்கில் திங்கட்கிழமை குருநாகலில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட ஆசிரியை கருத்துத் தெரிவித்ததாவது:
என்னை முழந்தாள் இடவைப்பித்த சம்பவத்தையடுத்து, ஆனமடுவ இரத்தினபால வித்தியாலயத்துக்கு இடமாற்றம் ஒன்றை வழங்குமாறு கோரியிருந்தேன். அந்தக் கோரிக்கையைக் கல்வி அதிகாரிகள் ஏற்றுக்கொண்டனர்.
எனினும் எனக்கு இடமாற்றம் [illegible] என்னைத் துன்புறுத்திய மாகாண சபை உறுப்பினரின் இல்லத்துக்கு அண்மையில் இருப்பது எனக்கு புதிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.
இதன் காரணமாக தற்போதைய பிரச்சினையை விளங்கப்படுத்தி, கல்கமுவ யூ.பி. வன்னிநாயக்க தேசிய பாடசாலைக்கு இடமாற்றம் தரும்படி வேண்டியிருக்கிறேன்.-என்றார்.
இதேவேளை, அவரது கோரிக்கைக்கமைய இடமாற்றம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று குறித்த வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@utnayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இந்திய - இலங்கை உறவு நிலை; எத்திசை நோக்கிப் பயணிக்கும்?

இரண்டு தோணிகளில் கால் வைக்கும் நிலைக்கு, இந்தியா தள்ளப்பட்டுள்ளமை, இலங்கையுடனான அதன் ராஜீக உறவுகளில் பலத்த ஓட்டையை உண்டாக்கலாம் என்று பலமாகக் கருதப்படுகிறது.

இலங்கையில் நடைபெற்ற போரின் போது, அதன் இறுதிப் பகுதியில் இலங்கைப் படையினரால், மனித உரிமை மீறல்கள் நிகழ்த்தப்பட்டன என்றும் அது குறித்து உள்நாட்டில் நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதும் ஜெனிவாத் தீர்மானம் ஆகும்.

அதனை ஆதரித்த இந்திய அரசு, தனது நாட்டில் இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிக்கலாமா என்ற விவகாரம் பலத்துள்ளது. அதற்குப் பதில் அளிக்க முடியாத நிலைக்கு அது தள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையைக் கருத்தில் கொண்டு, இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக்கட்சியின் தலைவர்களில் ஒருவரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான யஸ்வந்சிங், இலங்கை தொடர்பான இந்திய வெளிநாட்டுக் கொள்கை தோல்வியடைந்துவிட்டது என்று தெரிவித்துள்ளார்.

அதற்கு உதாரணமாக, விடுதலைப் புலிகளுக்கு இந்தியா ஆயுதப் பயிற்சியளித்து அவர்களைப் பலப் படுத்திவிட்டு, அவர்களுடனேயே போர் செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திராகாந்திக்குப் பின்னர் இந்திய வெளிநாட்டுக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவு இது என்றும் கொள்ளலாம்.

நீலகிரி மாவட்டம் குன்னூரில் உள்ள வெலிங்டன் இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த விங் கொமாண்டர் மற்றும் மேஜர் தர இரு இலங்கை இராணுவத்தினர் தமிழ்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டு கடந்த செவ்வாயன்று தமது குடும்பத்தினருடன் கொழும்பு வந்து சேர்ந்தனர். அண்டை மாநிலமான ஆந்திராவிலுள்ள மற்றொரு இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் அவர்கள் இருவருக்கும் பயிற்சி வழங்க இந்திய அரசு தீர்மானித்த போதிலும், இலங்கை அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தியாவுக்கு சவால் விடுவது போன்று இருவரையும் திருப்பி அழைத்துக் கொண்டுள்ளது. ஒரு வருடப் பயிற்சிக்குச் சென்ற இவர்கள் ஒரு மாதப் பயிற்சியுடன் திரும்பி வந்துவிட்டனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் சமீப காலமாக மீனவர் பிரச்சினை, அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் குறித்த பிரச்சினை என்பன உள்ளன. இலங்கைக் கடற்படையால் தனது மீனவர்கள் தாக்கப்படுகின்றனர் என்று தமிழ்நாடு அரசு இலங்கை மீது குற்றஞ்சாட்டி வருகிறது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பொதுவான ஆழ்கடலில் இலங்கைக் கொடியுடன் சீனக் கப்பல்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டமை புதிய பிரச்சினையை உருவாக்கியுள்ளது.

மறுபுறத்தில் 1964இல் ஸ்ரீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இலங்கைக்கு வழங்கப்பட்ட கச்சதீவை இந்தியா மீண்டும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று தமிழ்நாட்டில் பெரும்பாலும் அனைத்துக்கட்சிகளும் கோரி வருகின்றன. அதேவேளை, இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் செய்து கொள்ளப்பட்ட அரசமைப்புத் திருத்தத்தில் மாற்றம் செய்யப்படுவதை இந்தியா எதிர்க்கிறது. இதுகுறித்து இலங்கையில் பேச்சு நடத்த இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் அடுத்தமாத முதல்வாரம் கொழும்பு வருகிறார்.

இராணுவப் பயிற்சிக்காகத் தமிழ்நாடு சென்ற இரு படையினர் இலங்கை திரும்பி இருப்பது இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தியா பயிற்சியளிக்க மறுத்தால் சீனாவில் பயிற்சி பெறுவோம் என்ற தோரணையில் இலங்கை செயற்படுகிறது. இலங்கைப் படையினர் பயிற்சி பெற சீனாவுக்கு அனுப்பப்படுவார்களானால் அது இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைக்கு ஏற்படும் மற்றொரு தோல்வியாக முடியும். அத்தோடு இலங்கை- இந்திய உறவில் மிக மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தலாம்.

இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையின் பிரகாரம் இலங்கையுடன் மிக மிக நெருக்கமான உறவு வேண்டும். ஆனால் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை அதனால் தட்டிக்கழிக்க முடியாதிருக்கிறது.

மொத்தத்தில், இந்தியா தனது வெளிநாட்டுக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய நேரிடலாம். எதற்கும் காலம்தான் பதிலைக் கொண்டுவர வேண்டும்.

# ஈழத்தமிழர் மீதான இந்தியாவின் அக்கறை முதலை நீலிக் கண்ணீர் வடிப்பதை ஒத்ததே

இலங்கைத் தமிழர்கள் மீதான இந்தியாவின் கடந்த கால நடவடிக்கைகளைப் பார்க்கும் போதும், அதன் வெளியுறவுக் கொள்கை மிக மோசமாக தோல்வியுற்றதை பார்க்கும் போதும் இந்தியா தமிழ் மக்கள் தொடர்பில் முதலைக் கண்ணீர்வடிப்பதை தெளிவாக அறியமுடியும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் இலங்கையின் மஹிந்த ராஜபக்ஷ அரசு இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதி தற்போது மீறப்படுவதை இலங்கை அரசின் அண்மைய போக்கு வெளிப்படுத்தப்படுவதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இந்தியா சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளிடம் குறிப்பிட்டிருந்தார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், அரசியல் யாப்பில் இணைக்கப்பட்ட 13வது திருத்தச் சட்டத்தின் முக்கிய சரத்துக்களை நீக்குவதற்கு இலங்கை அரசு திட்டமிட்டு செயற்படுவதாக ஊடகங்கள் வெளியிட்டு வரும் செய்திகள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை அதிருப்திக்கு உள்ளாக்கியிருக்கலாம். 13வது திருத்தச் சட்டமானது 1987 இல் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆகியோருக்கிடையில், தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் உள்ளடங்கலாக அனைத்து மாகாணங்களுக்கும் அதிகாரப் பகிர்வை வழங்குவதை உறுதிப்படுத்தும் மிக முக்கிய சரத்துக்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட ஒன்றாகும்.

2009இன் ஆரம்பத்தில் இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததையடுத்து 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தவுள்ளதாக இலங்கை அரசு பல தடவைகள் வாக்குறுதிகளை வழங்கியிருந்ததுடன், மேலதிகமாக இதில் இணைக்கக் கூடிய விடயங்களின் சாத்தியப்பாடுகள் தொடர்பாகவும் ஆராயவுள்ளதாக வாக்குறுதியளித்தது. ஆயினும் நாட்டில் செயற்படும் பல்வேறு இனவாத சக்திகளின் அழுத்தங்கள் காரணமாக அதிபர் மஹிந்த ராஜபக்ஷ தனது வாக்குறுதிகள் தொடர்பாக திரிவுபட்ட தகவல்களை வெளியிட்டார். இதனால் இந்தியா மற்றும் இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டது. இந்நிலையில் இந்தியப் பிரதமரின் தமிழ் மக்கள் மீதான 'கவலையும் அக்கறையும்' முதலை நீலிக்கண்ணீர் வடிப்பது போன்றமைந்துள்ளது. இலங்கைத் தமிழர்கள் மீதான இந்தியாவின் கடந்த கால நடவடிக்கைகளைப் பார்க்கும் போதும், அதன் வெளியுறவுக் கொள்கை தோல்வியுற்றதை பார்க்கும் போதும் இந்தியா தமிழ் மக்கள் தொடர்பில் முதலைக் கண்ணீர்விடுவதை தெளிவாக அறியமுடியும். இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு இந்தியா துணை போயிருந்தது. இந்த விடயத்தில், தமிழ்நாட்டுக்கும் புதுடில்லி அரசுக்கும் இடையில் மிகப் பெரிய விரிசல் காணப்படுகிறது. இலங்கையில் தற்போது சீனா தனது செல்வாக்கை அதிகரித்து வருகிறது, நாள்தோறும் பல நூறு வரையான தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர், கைதுசெய்யப்படுகின்றனர். ஆனால் இவ்வாறான விடயங்களில் இந்தியாவின் இலங்கை மீதான வெளியுறவுக் கொள்கை தோல்வியடைந்துள்ளது. மே 2009இல் இலங்கையில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, 'நாங்கள் இந்தியாவின் போரை போரிட்டு வெற்றிகொண்டுள்ளோம்' என இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

இந்தப் போர் எவ்வாறு வெற்றி கொள்ளப்பட்டது என்பதை அண்மையில் இலங்கை ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்புச் செயலருமான கோத்தபாய ராஜபக்ஷ விளக்கியிருந்தார்:

''இலங்கை ஜனாதிபதி எமது நாட்டில் இடம்பெற்ற போர் தொடர்பான செய்திகளை இந்திய மத்திய அரசுக்கு தெரியப்படுத்துவார். இதற்கும் மேலாக போர் இடம்பெற்ற காலத்தில் அதிபரின் மூத்த ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ, அதிபரின் செயலர் லலித் வீரதுங்க, பாதுகாப்புச் செயலர் என்ற வகையில் நான் ஆகியோர் இலங்கைத் தரப்பிலும், இந்தியாவின் முன்னைய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், வெளியுறவுச் செயலர் சிவ் சங்கர் மேனன், அப்போதைய பாதுகாப்புச் செயலர் விஜய் சிங் ஆகியோர் இந்தியத் தரப்பிலும் நியமிக்கப்பட்டு இரு நாடுகளும் இணைந்து உயர்மட்ட சிறப்பு ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. அந்த ஆணைக்குழு எப்போதும் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொண்டதுடன், சிக்கலான பிரச்சினைகள் தோன்றும் போது அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதை இந்த ஆணைக்குழு உறுதிப்படுத்தியது'' என மார்ச் 25 டெய்லி மிரர் பத்திரிகைக்கு அவர் தெரிவித்திருந்தார்.

இலங்கையில்போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர், இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசை இந்தியா அனைத்துலக சமூகத்திடமிருந்து மிக நேர்மையற்ற முறையில் பாதுகாத்து வந்தது. இலங்கையின் கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என்பதை இவ்வாண்டில் மனித உரிமைகள் பேரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் வலியுறுத்தியது.

கடந்த இரு ஆண்டுகளாக இடம்பெறும் இராஜதந்திர முயற்சிகள் மற்றும் இலங்கைப்போர் தொடர்பான அமெரிக்க தலைமையிலான சாத்தியமான அனைத்துலக விசாரணையைச் சுட்டி நிற்கும் மிகப் பலமான தீர்மானம் போன்றவை இலங்கைத் தமிழர் விவகாரத்தை தீர்ப்பதற்கான நிலையான அரசியற் தீர்வொன்றை முன்வைக்கக் கூடிய வெளிநாட்டுத் தலையீடொன்று எழுவதற்கான வாய்ப்பை வழங்கியிருந்தது.

இதற்குப் பதிலாக, பேரவையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தின் மொழிநடையில் மாற்றத்தைக் கொண்டு வந்து, அதன் சரத்துக்களில் முக்கியத்துவத்தைக் குறைப்பதற்காக இந்தியா திரைமறைவில் பணியாற்றியிருந்தது. இதேபோன்று மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஆணையாளர் தனது அறிக்கையில் குறிப்பிட்ட 'சுயாதீன, நம்பகமான அனைத்துலக விசாரணையை' மேற்கொள்வதற்கான அழைப்பை விலக்கிக் கொள்ளுமாறு இந்தியா, திரைமறைவில் அழுத்தம் கொடுத்திருந்தது.

முன்னாள் தூதர் எம்.கே பரத்குமார் விசனப்பட்டதைப் போன்று, இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளின் கூட்டு ஆணைக்குழுவையும் இனப்படுகொலைக்குத் துணைபோனவர்களையும் பாதுகாப்பதற்காகவே இந்தியா திரைமறைவில் இவ்வாறான நடவடிக்கையை மேற்கொண்டது என்பது தெளிவானதாகும்.

ஐ.நா. சாசனத்தின் 'பாதுகாப்பதற்கான பொறுப்பு - Responsibility to Protect (R2P)' பிரகாரம், இறைமையுள்ள ஒவ்வொரு நாடும் அதன் குடிமக்களை இனப்படுகொலை, இனச்சுத்திகரிப்பு, போர்க் குற்றங்கள், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் போன்ற மிகப் பெரிய அழிவுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளதுடன், அனைத்துலக சமூகமானது நாடுகள் தனது மக்களைப் பாதுகாப்பதற்கு உதவி வழங்க வேண்டிய கடப்பாட்டையும் கொண்டுள்ளது எனக் கூறுகிறது.

ஐ.நா. சாசனம், 1948 இனப்படுகொலை சாசனம், 1949 நான்கு ஜெனீவா சாசனங்கள் ஆகியனவற்றை ஏற்று கையெழுத்திட்டுள்ள இந்தியா, இலங்கையில் 2008-09 காலப்பகுதியில் இடம்பெற்ற மனிதப் பேரழிவுகள் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையிடம் எடுத்துக் கூறி அதனைத் தடுத்திருக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளது.

ஆனால் இலங்கை பாதுகாப்புச்செயலர் கூறிய கூட்டு ஆணைக் குழுவைப் பாதுகாப்பதற்காக இந்தியா குற்றவாளிகளுக்கே துணைபோனது.

2012இல் முன்வைக்கப்பட்ட ஜெனீவாத் தீர்மானத்தின் பிரகாரம், இலங்கை அரசு வடக்கு கிழக்கில் மேற்கொள்ளும் சிங்களமயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இவ்வாண்டில் முன்வைக்கப்பட்ட ஜெனீவாத் தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்வதற்காக இந்தியாவால் திரைமறைவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால், இலங்கை அரசுவடக்கு கிழக்கில் மேற்கொள்ளும் சிங்களக் குடியேற்றங்களுக்கு மேலும் கால அவகாசத்தை வழங்குகிறது.

இவ்வாறான அனைத்துலக சமூகத்தால் வழங்கப்பட்ட வாய்ப்புக்களைப் பயன்படுத்தி இந்தியாவானது இலங்கையில் வாழும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு 13வது மேலதிக திருத்தச் சட்டத்தின் கீழ் நிலையான சமாதானத் தீர்வை ஏற்படுத்திக் கொடுக்க முன்வரவில்லை. இதற்காக இந்தியப் பிரதமர், இலங்கை மீதான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை மீள முழுமையாக ஆராய வேண்டும். இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு நிலையான அரசியற் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக இந்தியப் பிரதமர் இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும்.

*(நன்றி: புதினப்பலகை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களால் மனிதர்களுக்கு.....

ராஜராஜன்


நாம் வாழுகின்ற பிரபஞ்சத்தின் அழிவு வெகு தொலைவில் இல்லையென சிலர் கூறுவதை விஞ்ஞானிகள் ஆணித்தரமாக மறுத்துக் கூறுகின்றனர். இதெல்லாம் வீணான கற்பனைகள் என்றும், இந்த உலகம் இன்னமும் பல ஆயிரம் கோடி ஆண்டுகள் நிலைத்திருப்பதற்கான சாத்தியம் உள்ளதெனவும் கூறும் அவர்கள் இதற்குச் சான்று பகரும் விஞ்ஞான பூர்வமான ஆதாரங்களையும் முன் வைக்கின்றனர்.

ஆனால் இந்தப் பூவுலகுக்கு வேட்டு வைத்துக் கொண்டிருப்பவர்கள் இங்கு வாழும் மனிதர்களே என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

ஒரு விஞ்ஞான யுகத்தில் வாழ்கின்றோம் என்பதைக் கூறிக்கொள்வதில் எமக்குள் அலாதியான பெருமை உண்டு. மின்சார சாதனங்கள் மூலமாக எமது நாளாந்த தேவைகள் யாவும் துரிதமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தொலைவிலுள்ள இடம் ஒன்றை சில மணி நேரத்தினுள் சென்றடைகின்றோம். விரும்பிய உணவு வகைகள் நினைத்தவுடன் கிடைக்கின்றன. மிகவும் இலகுவான தொடர்பாடல் முறைமைகள், நவீன மருத்துவ வசதிகள் இவையெல்லாம் எமது தேவைகளுக்கு ஏற்றால் போன்று கிட்டுகின்றன. சுருக்கமாகச் சொல்வதாயின் விஞ்ஞானத்தின் உயர் வளர்ச்சி காரணமாக பல அதிசயங்கள் இங்கு நிகழ்கின்றன.

எமது முன்னோர்கள் இவற்றையெல்லாம் அறிந்திராத நிலையில் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் நிறைவான வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்கள். தமது பசியைப் போக்குவதற்குத் தேவையான உணவு மட்டுமே அவர்களின் தேடலாக இருந்தது. அது கிடைத்து விட்டால் அவர்களுக்கு ஓய்வுதான் அன்று நவீன நாகரிகமற்ற வாழ்க்கை. இவர்களுக்கு அமைந்திருந்த போதிலும் அதிலும் ஒரு சுகத்தை நம்முன்னோர் அனுபவித்தனர்.

எமக்கு முந்திய தலைமுறையினர் மரங்களில் முற்றிப் பழுத்த பழவகைகளையே உண்டனர். அன்று விளைந்த



பெரிய அளவிலான தக்காளிப் பழத்தைக் கொண்டு ஆக்கப்பட்ட குழம்புக் கறியின் நாக்கில் நீரை ஊற வைக்கும். இன்று அந்த நிலை தொலைந்து போய்விட்டது. தக்காளி மரத்திலிருந்து பிடுங்கப்பட்ட காய்களுக்கு இரசாயனங்கள் சேர்க்கப்பட்டு பழங்கள் போன்று மாற்றம் செய்யப்படுகின்றன. இவற்றை வாங்கிச் சென்று சமைப்பவர்கள் புளிச் சுவையைத்தான் அனுபவிக்க முடியும். அத்துடன் கலக்கப்பட்ட இரசாயனங்களின் பாதிப்புக்கள் வேறு. சந்தைகளில் காணப்படுகின்ற ஏனைய பழ வகைகளும் இதே நிலையில் தான் விற்பனை செய்யப்படுகின்றன. தேசிக்காய்கள் கூட தனது இயற்கை நிறத்தை இழந்து பச்சையும் மஞ்சளும் கலந்து காணப்படுகின்றன. இவற்றைப் பிழியும்போது வெறும் சக்கைகள் தான் கிடைக்கின்றன. சாறு கிடைப்பதில்லை.

புல்வெளிகளில் சுதந்திரமாக மேய்ந்து வீடு திரும்பும் பசுக்களில் இருந்து கிடைக்கும் பால் அலாதியான சுவையைக் கொண்டது. இதில் கொழுப்பு அளவோடு உள்ளதால் உடல்நலத்துக்குக் கேடு விளைவிப்பதில்லை. ஆனால் பாலுக்கும் தற்போது வில்லங்கம் ஏற்பட்டுள்ளது. பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு புல்லுக்குப் பதிலாக செயற்கையாக உருவாக்கப்பட்ட கால்நடை உணவு வகைகள் பசுக்களுக்கு அளிக்கப்படுவதால் இவற்றிலிருந்து கிடைக்கும் பாலைத் தொடர்ந்து அருந்துவோர் நாளடைவில் இதய நோய்களுக்கு ஆளாவதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மேலும் சமீப காலமாக வெளிநாடுகள் சிலவற்றிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களில் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் கலந்துள்ளதாகச் சர்ச்சைகள் தோன்றியுள்ளன. பசுக்களின் மேய்ச்சல் தரவைகளில் ஒருவகை இரசாயனத்தை விசிறுவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக இதற்கான விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி அணு உலைகளிலிருந்து வெளியேற்றப்படும் அணுக் கழிவுகள் சமுத்திரங்களில் கலக்கவிடப்படுவதால் அங்கு வாழுகின்ற கடல் வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுவதுடன், அவற்றைப் பிடித்து உண்ணும் மனிதர்களும் பாதிப்புக்களுக்கு ஆளாகுகின்றனர்.

இந்த நிலை நீடிக்குமாயின் காலப் போக்கில் மனிதர்கள் உண்பதற்கு எதுவுமே கிடைக்காத நிலை உருவாகி விடும். இதனை நோக்கியதாகவே மனிதர்களின் பயணம் தற்போது அமைந்துள்ளது.

இன்று பெரிய நாடுகள் மட்டுமல்ல சிறிய நாடுகளும் கூட பெரியளவில் பணத்தைச் செலவிட்டு ஆயுதங்களை வாங்கிக் குவித்து வைத்துக் கொண்டு எப்போதோ ஆரம்பிக்கப் போகும் போருக்காகக் காத்திருக்கின்றன. தமது நாட்டு மக்களுக்கு சீரான வகையில் உணவைக் கூட வழங்க முடியாத பல வறிய நாடுகளில் கூட இந்த நிலைதான் காணப்படுகின்றது. வளர்ந்த நாடுகளில் உற்பத்தியாகும் ஆயுதங்கள் வறிய நாடுகளின் ஆயுதக் களஞ்சியங்களில் தூங்கி வழியும் நிலை காணப்படுகின்றது. இவற்றுக்கு வேலை கொடுக்க வேண்டுமாயின் காரணமில்லாத வகையிலாவது வேறொரு நாட்டுடன் போரை ஆரம்பிக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது. அத்துடன் தனது நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் திசை திருப்பும் பொருட்டு மற்றொரு நாட்டுடன் போரை வலிந்து நடத்தும் நாடுகளும் உண்டு. எமது நாட்டில் கூட போரைக் காரணம் காட்டி மக்களின் பிரச்சினைகளைத் திசை திருப்பிய அரசியல்வாதிகள் பலர் இருந்தனர். இன்று போர் ஓய்ந்த நிலையில் சிறுபான்மையின மக்களுக்கு எதிரான காழ்ப்புணர்வுகள் முன்னெப்போதும் இல்லாத அளவு அதிகரித்துக் காணப்படுகின்றன. தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அரசியல்வாதிகள் எதனையும் செய்வார்கள் என்பதற்கு எமது நாட்டை உதாரணமாகக் கூறலாம்.

இந்த உலகம் முழுவதையும் ஒரு கணப்பொழுதில் சுடுகாடாக மாற்ற வல்ல தேவையான அணு ஆயுதங்கள் பல நாடுகளில் குவித்து வைக்கப்பட்டுள்ளமை இந்த உலகின் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக மாற்றியுள்ளது. குறிப்பாக தீவிரவாதம் தலைதூக்கியுள்ள பல நாடுகள் அணு ஆயுதங்களைக் கொண்டுள்ளமை மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தவல்லது. ஜப்பான் நாட்டின் கொட்டத்தை அடக்குவதற்கு அமெரிக்கா வீசிய அணு குண்டுகளின் தாக்கம் இன்னமும் தொடர்கின்றது. இன்று அவற்றைவிட அதிக சக்தி வாய்ந்த குண்டுகள் இத்தகைய நாடுகளில் தயாரிக்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளன. இவை சில வேளைகளில் தீவிரவாதிகளின் கரங்களையும் சென்றடையக் கூடிய அபாய நிலை தோன்றியுள்ளது. பாகிஸ்தான் நாட்டின் வசம் உள்ள அணு குண்டுகள் தொடர்பாக பலரும் கவலை வெளியிட்டு வருகின்றனர். வடகொரியா, ஈரான் ஆகிய நாடுகளும் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இவை உண்மையாக இருக்குமாயின் அதனால் ஏற்படக்கூடிய எதிர் விளைவுகள் இந்தப் பூவுலகின் அழிவுக்கு இலகுவாகபாதைஅமைத்துக்கொடுத்து விடும்.

தம்பாட்டில் சென்று கொண்டிருந்த நதிகளைத் திசை திருப்பி விடுவதனால் ஏற்படுகின்ற விபரீதங்களை வடஇந்தியாவின் சில பகுதிகளில் ஏற்பட்ட வெள்ள அழிவுகளின் வாயிலாக அறிந்து கொண்டோம். இயற்கையோடு முரண்படுவதால் மனிதர்களுக்கும் இந்தப் பூமிக்கும்தான் பாதிப்புக்கள் ஏற்படும்.

மேலும் இன்னுமொரு உலக யுத்தம் ஆரம்பமாகுமாயின் அது தண்ணீருக்கானதாகவே இருக்குமென விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தண்ணீர்ப் பற்றாக்குறைக்கு கட்டியம் கூறுகின்றது. மேலும் போதிய உணவு கிடைக்காததால் பலர் பட்டினியால் மடிவர் எனவும் கூறப்படுகின்றது.

எனவே இன்று மனிதர்கள் சிந்திக்க வேண்டிய தருணம் இதுதான். இந்த உலகின் வாழ்வும் சாவும் மனிதர்களின் கரங்களிலேயே உள்ளன. இனியும் சிந்திக்காது மனம்போன போக்கில் செயற்பட்டுக் கொண்டிருந்தால் உலக அழிவு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகவே அமைந்து விடும். எதிர்காலத்தில் ஏற்படப் போகும் இயற்கை இடர்களிலிருந்து இவ்வுலகைக் காத்துக் கொள்ளத் தக்க வகையில் செயற்றிட்டங்கள் வகுக்கப்படுவதில் மேலும் தாமதங்கள் ஏற்படுமாயின் மனிதர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் எதிர்காலத்தில் மறைந்து போய் விடும்.

# தீவில் தலை தூக்கி நிற்கும் திரைப்பட வில்லத்தனம்

ஆர்.கே. மேனன்

இலங்கைத் தீவில் குறிப்பாக வட மாகாணத்தில் இப்போதெல்லாம் தென்னிந்திய திரைப்படங்களில் பார்க்கும் வில்லத்தன விளையாட்டுக்கள் தலையெடுக்க ஆரம்பித்துவிட்டன. சிறிய சிறிய வில்லர்கள் விரல் நீட்ட ஆரம்பித்துவிட்டார்கள். பட்டப் பகலில் சிறுமிகளைக் கடத்துதலும் பிள்ளைகளை பணயம் வைத்து கொள்ளையடித்தலும் ஆங்காங்கே இடம் பெறுகின்றன.

### ஏன் இந்த மாற்றம்

பணம் சம்பாதிப்பதற்கு பல வழிகளை நாட வேண்டிய தேவையை இன்றைய கடன் கலாசாரம் வலுப்படுத்தி வருகின்றது. அளவுக்கு மேல் ஆசைகளை வளர்த்துவிட்டு பட்ட கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழல் பலரைப் பயங்கரவாதி ஆக்குகின்றது. குறுக்கு வழியில் செல்ல வேண்டுமென்கின்ற கட்டாய தேவையானது குற்றத்தை மறைக்க விரும்பியோ விரும்பாமலோ வில்லத்தனம் காட்டும் நிலைக்கு இட்டுச் செல்கின்றது.

இது ஒரு சாராரின் பிரச்சினை; மறுபுறம் அநியாயங்களுக்கு அஞ்சாத நெஞ்சங்களுக்கு இதன் ஆழம் புரியாது. அவமானம் தெரியாது. வியர்வை சிந்தி உழைத்து பொழுதை சிரமத்துடன் கழிப்பதை விட இது சுலபமான வழியாகத் தோன்றும். அன்று போராட்ட துன்பங்களில் ஒரு முகப்பட்ட சிந்தனைகள் இன்று ஆடம்பர வாழ்வியலில் அத்துமீறிப் போகின்றன. எப்படியும் வாழலாம் என்கின்ற சிந்தனை தலைதூக்க ஆரம்பித்துவிட்டது. இதுவே இந்த மாற்றத்துக்குக் காரணம்.

### வெற்றிபடுமா இந்த நிலை.....

மனித மனநிலையில் இக்கட்டுக்கள் தலைதூக்கும்போது, இதற்கான தீர்வினை சிந்திக்க வேண்டிய தேவை எழுகின்றது. தற்கால சி[illegible] யோட்டத்தில் வலுப்பட்[illegible] இங்கு சில தீர்வுகளைச் சொல்ல ஆரம்பிக்கின்றது. அதனை விபரீத மற்ற முறையில் நகர்த்த நாளடைவில் சட்டம் விலை கொடுத்து வாங்கப்படுகின்றது. கதாநாயகர்கள் இல்லாத கட்டத்தில் எங்கள் வாழ்க்கை சினிமாவில் வில்லராட்சி வலுப்படுகின்றது.

### சத்தமில்லாத போர்களுக்கு தீர்வு கிடைக்காதா?

நிச்சயமாக இதற்குத் தீர்வு உண்டு. இதற்கு மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும். திட்டமிட்ட சில செயற்பாடுகளால் இது மேலும் வலுப்பெற இடமுண்டு. சத்தமிட்ட போர்கள் முடிந்த பின்பு சத்தமில்லாத போர்கள் பல தமிழர்களுக்கெதிராக தொடுக்கப்பட்டு வருகின்றன. அவை ஆதரவுகள், செல்வாக்குக்களால் சட்டத்தின் முன் சாட்சியமற்றுப் போகலாம். இதனால் பாதிக்கப்படப் போவது அப்பாவிப் பொது மக்களே. பட்டப்பகலில் வெட்ட வெளியில் நடப்பது யாருக்கும் தெரியவில் [illegible] [illegible]லை. ஊர்மக்கள் உசார் அடைய வேண்டும். சிந்தனைகள் சீர்படுத்தப்பட வேண்டும். வரன்முறை வாழ்க்கைகள் திட்டமிடப்பட வேண்டும். ஆடம்பர மோகத்தில் அங்கீகரிக்கப்பட்ட வாழ்வியல் என்றுமே வெற்றியைத் தராது. இன்று அங்கீகாரம் இழந்த மாந்தர்களாக பெரும்பான்மையினர் மத்தியில் சிறுபான்மையினரான நாம் பல வழிகளில் நசுக்கப்பட்டு வாழ்கின்றோம். இதற்கிடையில் சிந்தனைகளை சீர்படுத்தாமல் மனம் போன போக்கில் நாம் வாழ்ந்து எமக்குள் நாமே வினையைத் தேடுவது எந்த வகையிலும் ஏற்புடையதன்று.

பெற்றோர்கள் பிள்ளைகளின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்த வேண்டும். பிரத்தியேக வகுப்புகள் மற்றும் பாடசாலைக்கு பிள்ளைகள் செல்லும்போது பாதுகாப்பான முறையில் சென்றுவர வழிசமைக்க வேண்டும். கிராம ரீதியான பாதுகாப்புக்கள் பற்றி சிந்திக்க வேண்டும். இது இன்றைய கட்டாய தேவை. வாழும் பூமியில் மனிதாபிமானமற்ற செயல்கள் எந்த நேரத்திலும்; எப்படியும் நிகழலாம். நாங்கள் தானே அவதானமாக இருக்க வேண்டும்! குடாநாடு ஒரு கட்டத்தில் பலவழிகளால் இறுக்கப்பட்டு இடர்படப் போகின்றது. அதில் ஒரு துருவம் கடத்தல், கொள்ளை என்பனவாகும். வன்முறைசார் எண்ணக் கருக்கள் எம்மவர் மத்தியில் மலிந்துவிட்டது. ஆன்மிக ஈடுபாடும் குறைந்து விட்டது. கலைத்துறைசார் வெளிப்படுத்தல்களில் நாட்டம் குறைந்து வருகின்றது. இதனால் சிறுவர்கள் கூட சீரற்ற மனப்பாங்குவிருத்திகளைப் பெறுகின்றனர். தென்னிலங்கையில் சீரழிவுகள் இருப்பினும் புதிய தேடல் கொண்ட சமூக மனப்பாங்கு பரந்த சிந்தனை விருத்திக்கு வித்திடுகின்றது. ஆனால் நாமோ குண்டுச்சட்டிக்குள் குதிரையோட்டுகின்றோம். இதனால்தான் எமது சமூகத்தவர் மத்தியில் நல்லது கெட்டதைப் பிரித்தறியும் மனப்பாங்கு அற்று இவ்வாறான சீரழிவுப் பாதைக்குச் செல்கின்றோம். இதில் மாற்றம் தேவை. யாருமே நல்லவரும் இல்லை, யாருமே கெட்டவரும் இல்லை. மாற்றங்கள்தான் மனிதனை வாழ்வைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே...

இன்றைய உலகம் மிக வேகமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அதில் நவநாகரிகப் போக்கைப் பெண்கள்தான் அதிகம் நாடிச் செல்கின்றனர். முன்னைய காலத்தில் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவற்றுக்கு உதாரணமாகத் திகழ்ந்தவர்கள் பெண்கள்தான்.



ஆனால் இந்தக்காலத்துப் பெண்களிடம் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற இயல்புகள் எதுவும் இல்லாமல் மிகவும் மோசமான நவநாகரிக மோகத்தில் மூழ்கியுள்ளனர். நவீன காலத்தில் வெளிநாட்டு நவநாகரிக மோகத்தால் ஈர்க்கப்பட்டு பெண்கள் நவநாகரிக போர்வையால் சமுதாயத்தின் கலாசாரத்தை மாற்றுகின்றனர். எங்கள் நாட்டில் இருந்து வெளிநாடு சென்ற பெண்கள் திரும்பி உறவினர்களைப் பார்ப்பதற்காக குடும்பத்துடன் வருகிறார்கள். வருவது மட்டுமல்ல கலாசார பண்பாட்டுக்கு ஒவ்வாத ஆடையை அணிகிறார்கள். அவர்கள் ஆண்களைப் போன்று ஜீன்ஸ், ரீசேட் அணிகிறார்கள்.

சிலபெண்கள் சரும பராமரிப்பு என்று அடிக்கடி மேக்-கப் செய்கிறார்கள். இயற்கையாக இருக்கும் கண் இமையை வழித்துவிட்டு 'ஐடெக்ஸ்சினால்' செயற்கைக் கோடு வரைகிறார்கள். முகத்துக்கு கிறீம், உடம்பிற்குகிறீமென்று பணத்தை வீண் செலவு செய்கின்றனர்.

முன்னைய காலத்துப் பெண்கள் அடக்கமான சேலையுடுத்து பூ, பொட்டு வைத்து பெற்றோரின் கட்டுப்பாட்டிற்குள் வாழ்ந்தார்கள். நவீன காலத்துப் பெண்களோ முற்றிலும் மாறுபட்டவர்களாகவே காணப்படுகிறார்கள். குட்டைப் பாவாடை அணிந்து உடலுடன் ஒட்டும் விதத்திலான மேலாடை அணிகிறார்கள். எனவே நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்கள் தான்.

கு.தயாமினி, இணுவில் மேற்கு, இணுவில்.



## வாழ்க்கை வாழ்வதற்கே!

புது முக நிலவு
ஏன் உன்னை சுடுகின்றது
வெண்மையான புன்னகை
ஏன் மறைந்து கொண்டது
செந்தூரச் சிரிப்பை இழந்த
உன் செந்தாமரை முகம்
சொல்லும் செய்தி என்ன?
மனிதா! வாழ்க்கை
வீணடிப்பதற்கல்ல
வாழ்க்கை வாழ்வதற்கே!



க.நிரஞ்சன்



## அறிந்து கொள்ள...

படிப்பித்த பாடத்தையும்
அறிந்தேன்!
வந்த பெறுபேறையும்
அறிந்தேன்!
தொழில் நுட்பக்
கல்லூரியையும் அறிந்தேன்!
அங்கு வந்த என்
நண்பர்களை அறிந்தேன்!
யாழ்ப்பாணத்தை
அறிந்தேன்!
அங்கு நடக்கும் கலாசார
சீரழிவையும் அறிந்தேன்!
கடவுளையும் கூட
அறிந்தேன்!
இந்த உலகம் நிறையவே
மாறிவிட்டதையும்
அறிந்தேன்!
அறிய பல இருக்கின்றன
இன்னமும் அறிந்து
கொள்ள....

ச.பவித்ரா, தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்

## 60 வயதுப் பாட்டியாக காட்சியளிக்கும் 16 வயது பெண்



தெற்கு, யார்க்ஷயரில் உள்ள ரோதர்ஹாம் நகரை சேர்ந்தவர் ஸாரா ஹார்ட்ஷார்ன். 16 வயதேயான ஸாரா, அரிய வகை மரபணு பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதனால் இவரது தோல் சுருங்கி வயதான பெண் போன்று காட்சி தருகிறார். கிட்டத்தட்ட 60 வயது மூதாட்டி போன்று உள்ளது இவரது தோற்றம். இவரது தாய் டிரேசி ஜிப்சனுக்கும் இதே போன்றதொரு பிரச்சினை உள்ளது. இந்தநிலையில் ஸாராவின் பிரச்சினை குறித்து அறிந்த அமெரிக்க மருத்துவர் ஒருவர், முகச் சீரமைப்பு அறுவை சிகிச்சையை இலவசமாக செய்துள்ளார்.

இதனையடுத்து ஸாராவின் முகம் நிறைய மாறிவிட்டதாம். இதனால் மகிழ்ச்சியின் உச்சகட்டத்தில் இருக்கும் ஸாரா, கல்லூரி செல்வதற்கும் தயாராகிவிட்டார்.



16 வயதேயான ஸாரா, அரிய வகை மரபணு பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளார். இதனால் இவரது தோல் சுருங்கி வயதான நபர் போன்று காட்சி தருகிறார், கிட்டத்தட்ட 60 வயது மூதாட்டி போன்று உள்ளார்.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா?**
**பெண்களா?**

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.



உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-........................................................

முகவரி :- ........................................................

........................................................

........................ ........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோட்டார் சைக்கிள் மோதியதில் பொலிஸ் உத்தியோகத்தர் காயம்

### வவுனியா மஞ்சள் கடவையில் சம்பவம்

வவுனியா,ஜூன் 27



கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் அந்தப் பொலிஸ் உத்தியோகத்தரும், மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளம் யுவதியும் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா ஏ -9 வீதியில் தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாகவுள்ள மஞ்சள் கடவையில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரொருவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே அந்தப் பொலிஸ் உத்தியோகத்தரும் மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்த யுவதியும் காயமடைந்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.


கடந்த திங்கட்கிழமை பகல் 1.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. வவுனியா நகரிலிருந்து மோட்டார் சைக்கிளில் சென்றகொண்டிருந்த யுவதி தான் செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது போனதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்த விபத்தில் காயமடைந்த இருவரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணையை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

## ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை விருத்தி செய்யக் கோரிக்கை

வவுனியா,ஜூன் 27



வவுனிக்குளத்தின் கீழான ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை அபிவிருத்தி செய்து வழங்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளத்தின் கீழ் 11 இடங்களில் ஏற்று நீர்ப்பாசன விநியோகத் திட்டம் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்துள்ளதாகவும் கடந்த காலப் போர் காரணமாக அவை கைவிடப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

மீள் குடியமர்வின் பின்னர் ஐ.ஓ.எம்.நிறுவனத்தின் நிதியுதவியுடன் பாண்டியன் குளம் பகுதிக்கான ஏற்று நீர்ப்பாசனத் திட்டமும், புகழேந்தி நகர், செல்வபுரம் ஆகிய கிராமங்களுக்கான ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் நிக்கோட் நிறுவனத்தின் நிதியுதவியுடனும் புனரமைக்கப்பட்டு அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று ஏனைய கிராமங்களுக்கான ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்களையும் மீளப் புனரமைத்து வழங்குமாறு இந்தக் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## கண்டாவளையில் இடம்பெற்றது போசாக்கு கண்காட்சி

கிளிநொச்சி, ஜூன் 27

கிளிநொச்சி கண்டாவளையில் போசாக்குக் கண்காட்சியொன்று இடம்பெற்றுள்ளது.

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் தாய்மார் கழகங்களால் நடத்தப்பட்ட மேற்குறித்த போசாக்குக் கண்காட்சி ஊரியான் பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமானது.

மேற்படி கண்காட்சியில் சிறுவர்களுக்கு அன்றாடம் வழங்கவேண்டிய போசாக்கு உணவு வகைகள், நோய்க் காப்பு முறைகள், சிறுவர்களின் ஆக்கத்திறனை வளர்த்தல், போசாக்கான உணவு வகைகளை மிக இலகுவாக வீட்டுத் தோட்டங்களில் இருந்து பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான விவரங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்தக் கண்காட்சி நிகழ்வில் கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி, தருமபுரம் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி, கண்டாவளை மற்றும் கரைச்சி பிரதேசத்தைச் சேர்ந்த மருத்துவ மாதுக்கள், தாய்மார்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-6)



முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நடமாடும் மருத்துவ சேவையை முல்லைத்தீவு அரச அதிபர் நா. வேதநாயகன் மங்கல விளக்கு ஏற்றலுடன் ஆரம்பித்து வைக்கின்றார். (க-435)

## வீதிகளைப் புனரமைக்க மக்கள் வேண்டுகோள்

முல்லைத்தீவு, ஜூன் 27

முல்லைத்தீவு சுதந்திரபுரம் கொலனி வீதி மற்றும் கோம்பாவில் திம்பிலிவில் வீதி என்பனவற்றின் புனரமைப்புக்கென கற்கள் பரவப்பட்டு வருடக் கணக்காகியும் இதுவரை புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றன. இதன் காரணமாக வீதியைப் போக்குவரத்துக்கு பயன்படுத்த முடியாதுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் சுதந்திரபுரம் சந்தியில் இருந்து சுதந்திரபுரம் கொலனிக்கு செல்லும் சுமார் 3 கிலோமீற்றர் நீளமான பிரதான வீதி மற்றும் கைவேலியில் இருந்து கோம்பாவில் திம்பிலிவில் செல்லும் 2 கிலோமீற்றர் நீளமான வீதி ஆகிய இரண்டுமே கடந்த 2011 ஆம் ஆண்டு கிராமிய வீதிகளை கொங்கிறீட் வீதிகளாக மாற்றும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு, பெயர்ப் பலகைகள் திரை நீக்கம் செய்யப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இன்று வரை முழுமை பெறாது அரைகுறையாக விடப்பட்டுள்ளன.

குறித்த வீதிகளுக்கு கற்கள் பரவப்பட்ட நிலையில் கைவிடப்பட்டுள்ளதால் வீதிகளைப் பயன்படுத்தும் பிரதேச மக்கள் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே குறித்த வீதிகளை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-6)



## வங்கி அதிகாரியால் அவமானப்பட்ட மாற்றுற்றல் கொண்ட ஆசிரியை

மன்னார், ஜூன் 27

தமது சம்பளப் பணத்தைப் பெறுவதற்கென வங்கிக் கிளையொன்றுக்குச் சென்ற மாற்றாற்றல் கொண்ட ஆசிரியை ஒருவர் அங்கு கடமையில் இருந்த அதிகாரி ஒருவரால் தான் அவமானப்படுத்தப்பட்டதாக வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை மன்னாரில் அமைந்துள்ள அரச வங்கியொன்றின் கிளையில் இடம்பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட அடம்பன், கண்ணாட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த நான் பட்டதாரி ஆசிரியையாகக் கடமையாற்றி வருகின்றேன்.

இரண்டு கண்களும் பார்வையற்ற நிலையில் உள்ளவள் நான். 2005 ஆம் ஆண்டு இந்த வங்கியில் கணக்கை ஆரம்பித்த நான் எனது சம்பளப் பணத்தையும் இந்த வங்கியூடாகப் பெற்று வருகின்றேன்.

கடந்த மாதம் வரை எனது தேவைக்கேற்ப எனது கணக்கில் உள்ள பணத்தை மேற்படி வங்கிக்குச் சென்று உரிய விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து வழங்கிப் பெற்று வந்தேன்.

கண்பார்வை இல்லாத காரணத்தினால் நான் வங்கிக் கணக்கை ஆரம்பிக்கின்ற போது வங்கிப் புத்தகத்தில் கையொப்பம் இட முடியாத நிலையில் கைவிரல் அடையாளம் வைத்தேன். அதனையே தொடர்ந்தும் பின்பற்றி வந்தேன்.

கைவிரல் அடையாளம் வைப்பதால் பணத்தை மீளப்பெறும் படிவம் முதலில் முகாமையாளரிடம் காண்பிக்கப்பட்டதன் பின்னர் காசாளரிடம் ஒப்படைக்கப்பட்டு பணம் வழங்கப்பட்டு வந்தது. அதற்கு அங்குள்ள பணியாளர்கள் சிறப்பாக உதவி வந்தார்கள்.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை எனது சம்பளப் பணத்தை பெற்றுக்கொள்ளவென வங்கிக் கிளைக்கு நானும், எனது சகோதரியும் சென்றோம். பின்னர் பணத்தை பெற்றுக் கொள்வதற்கான படிவத்தைப் பூர்த்தி செய்து கை விரல் அடையாளம் இட்டேன்.

23 ஆயிரம் ரூபாய் பணத்தை பெற்றுக்கொள்வதற்காகவே நான் படிவத்தை அங்குள்ள பணியாளர்கள் மூலம் பூர்த்தி செய்தேன்.

குறித்த பணம் மீளப்பெறும் படிவம் முகாமையாளரிடம் காண்பிக்கப்பட்டபோது அவர் என்னை அழைத்தார். குறித்த கை விரல் அடையாளத்தை பரிசோதிக்கின்ற கருவி எங்களிடம் இல்லை. இது உங்களின் பணமா என எங்களுக்குத் தெரியாது. உங்களில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. இவ்வளவு தொகைப் பணத் தைத் தர முடியாது. கணக்கு ஆரம்பிக்கப்பட்ட முருங்கன் வங்கிக் கிளைக்கு திங்கட்கிழமை சென்று பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் தேவைக்காக 5 ஆயிரம் ரூபாய் மட்டுமே இப்போது தருகிறேன் என்றார்.

நான் மிகவும் தாழ்மையாக எனது அவசர தேவை கருதி பணத்தை வழங்குமாறு கேட்டேன்.

ஆனால் அவர் பணம்தரவில்லை. குறித்த வங்கிக் கணக்கு எனது பெயரிலும், எனது அக்காவின் பெயரிலும் உள்ளது. இதனால் அக்கா குறித்த பணத்தைப் பெற்றுக் கொள்ளவென விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து பணத்தை பெற்றுக் கொள்ளச் சென்றார்.

நான் முகாமையாளர் இருந்த இடத்தில் இருந்து சுமார் 10 மீற்றர் தொலைவில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது குறித்த முகாமையாளர் என்னைப் பார்த்து கண் தெரியாத இவர் டீச்சராம். இவருக்கு யார் டீச்சர் வேலை கொடுத்தது எனக் கேலி செய்து சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தார்.

அடையாள அட்டையில் ஆசிரியை எனக் கூறிப்பிட்டிருந்தும் அதனை பொருட்படுத்தாது அவர் செயற்பட்டார். என்னை வேதனைப்படுத்தும் வகையில் எனது இயலாமையைக் கேலி செய்து கதைத்துக்கொண்டிருந்தார்.

இந்த நிலையில் வங்கியில் உள்ள பணியாளர் ஒருவர் முகாமையாளரிடம் என்னைச் சுட்டிக்காட்டி' இவர் ஓர் ஆசிரியை எனவும், இங்கேதான் பணத்தை பெற்றுக்கொள்கின்றார் எனவும் கூற குறித்த முகாமையாளர் மௌனம் காத்தார்.

என்னைப் போன்ற கண் பார்வை அற்ற மற்றும் மாற்றாற்றல் கொண்ட வாடிக்கையாளர்கள் வங்கிக்கு வரும் போது அவர்களை அவமானப்படுத்துகின்ற வகையில் நடந்து கொள்ள வேண்டாம் எனத் தான் கண்ணீர் மல்க முகாமையாளரிடம் தெரிவித்து விட்டு வங்கியை விட்டுச் சென்றேன் என- அந்த ஆசிரியை கவலையுடன் தெரிவித்தார். (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச கால்நடை வைத்திய அதிகாரிகள் இடமாற்றம்

அச்சுவேலி, ஜூன் 27

யாழ்.மாவட்டத்தில் குறிப்பிட்ட காலத்துக்கு மேல் ஒரே பிரதேசத்தில் தொடர்ந்து கடமையாற்றிய பிரதேச கால்நடை வைத்திய அதிகாரிகள் உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

உள்ளக இடமாற்றம் செய்யப்பட்ட கால்நடை வைத்திய அதிகாரிகளின் பெயர் விவரம் வருமாறு:

கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய திருமதி மகேந்திரராசா சகுந்தலா, கரவெட்டி பிரதேச கால்நடை வைத்திய அதிகாரியாகவும், வட்டுக்கோட்டை பிரதேச காலநடை வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய ரி.பிரபாகரன், கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரியாகவும், கரவெட்டி பிரதேச கால்நடை வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய திருமதி எம்.சறோசினிதேவி பருத்தித்துறை பிரதேச கால்நடை வைத்திய அதிகாரியாகவும், பருத்தித்துறை பிரதேச கால்நடை வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய செல்வி எஸ்.யூலியானா, வட்டுக்கோட்டை பிரதேச கால்நடை வைத்திய அதிகாரியாகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் புதிய பிரதேசங்களில் கடமைப் பொறுப்பை ஏற்றுள்ளனர். (வ-11)

## நெடுந்தீவு வைத்தியசாலை வளாகத்தில்



நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையில் அந்தப் பகுதி கடற்படையினரின் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்ற இலவச மருத்துவ முகாமில் கலந்து கொண்ட ஒருவருக்கு கண் பரிசோதனை இடம் பெறுகிறது...

## கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் கலைத்திறன் போட்டிகள் இன்று

கிளிநொச்சி, ஜூன் 27

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள இந்த ஆண்டுக்கான கலைத் திறன் போட்டிகள் தொடர்பான விவரங்களைச் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகள் கோட்ட மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் இடம் பெறவுள்ளதாகவும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

கண்டாவளைக் கோட்டத்துக்கான போட்டிகள் முருகானந்தாக்கல்லூரியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கும், பளைக் கோட்டத்துக்கான போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு பளை மத்திய கல்லூரியிலும், கரைச்சிக் கோட்டத்துக்கான போட்டிகள் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணிக்கு கனகபுரம் பாடசாலையிலும் இடம்பெறவுள்ளன.

மாவட்ட மட்டத்தில் இடம்பெறும் போட்டிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம்பெறுமெனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (க)

## ஊடகக் கல்வி குறித்த கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 27

சென்னை பாரதி பல்கலைக்கழகத்தின் யாழ்.கிளையான பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரின் ஏற்பாட்டில் உயர்தர மாணவர்களுக்கான தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் பாடத்துக்கான கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை தினமும் காலை 9 மணிக்கு இல 891, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிசப்சவுந்தரம் மீடியா சென்ரரில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழக ஊடகத்துறை விரிவுரையாளர்களான கிருத்திகா தர்மராஜா, சுடர்விழி ராஜ்குமார், ரூபன் மரியாம்பிள்ளை ஆகியோரும் ஊடகக் கல்வி ஆசிரிய விரிவுரையாளர் பரராஜசிங்கம், இராஜேஸ்வரன் ஆகியோரும் கருத்துரை வழங்கவுள்ளனர். (வ-14)

# அர்ப்பணிப்பான சேவை மக்கள் பாராட்டைப் பெறும்

## வலி. கிழக்கு பிரதேச செயலர் தெரிவிப்பு

அச்சுவேலி, ஜூன் 27

''அர்ப்பணிப்போடு கூடிய சேவை மன நிறைவைத் தருவதோடு, மக்களின் பாராட்டையும் பெறும். அந்த வகையில் வலி.கிழக்கு பிரதேச அரச சேவை நம்பிக்கை நிதியச் சங்க நிர்வாகிகள் பாராட்டப்பட வேண்டியவர்கள். ஓய்வு பெற்ற பின்னரும் நம்பிக்கைத் தன்மையோடு தொழிற்படுகின்றனர்.''

இவ்வாறு தெரிவித்தார் வலி.கிழக்குப் பிரதேச செயலர் எம்.பிரதீபன்.

யாழ். மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய ரீதியிலான மதிப்பீடுகளுக்கு தகுதி பெற்ற வலி. கிழக்கு ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்க நிர்வாகிகளைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலக நிர்வாக அதிகாரி துரை அருள்ராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

தற்போது அரச சேவையில் இருக்கும் அனைவரும் ஓய்வூதியர் என்ற நிலைக்கு வரவேண்டியவர்கள். ஓய்வூதியம் பெறுபவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கம் தொழிற்படுகின்றது. யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளில் வலி.கிழக்குப் பிரிவு ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கம் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய நிலை மதிப்பீட்டுக்குச் சென்றிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

ஓய்வு பெற்ற பின்னரும் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் நிர்வாகிகள் குறிப்பிடத்தக்க முன்மாதிரியுடன் செயற்பட்டு ஓய்வூதியம் பெறுவோரின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்படுவது பாராட்டப்பட வேண்டியது மட்டுமல்ல தற்பொழுது அரச சேவையில் உள்ளோரும் பின்பற்ற வேண்டிய நடைமுறை ஒன்றாகும்.

அர்ப்பணிப்போடு கூடிய சேவை தனிப்பட்ட முறையில் மன நிறைவைத் தருவதோடு மக்களின் பாராட்டையும் பெறும். இதனைக் கருத்தில் கொண்டு அனைவரும் சேவையாற்ற வேண்டும்-என்றார்.

உதவிப் பிரதேச செயலர் செல்வி ச.பிறேமினி, யாழ். மாவட்ட நிதியத் தலைவர் எஸ். சக்திவேல், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணராசா, பிரதேச செயலக கணக்காளர் திருமதி வசந்தமாலா மனோகரன் ஆகியோரும் உரையாற்றினர். (வ-11)

## தமிழ் மொழித்தின விழா

யாழ்ப்பாணம், ஜூன் 27

வடமாகாணத் தமிழ் மொழித்தின விழா நாளை வெள்ளிக்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (வ-4)

# இன்றைய நாள்

தருவது வித்தியா

### உங்களுக்கு எப்படி?

**மேஷர்:** பிரச்சினைகளின் ஆணி வேரைக் கண்டறிவீர்கள். அரசிலும், அதிகாரப் பதவியில் இருப்பவர்களாலும் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**இடபர்:** குடும்பத்தில் அமைதி நிலவும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**மிதுனர்:** பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். உறவினர், நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். நெருங்கியவர்கள் சிலர் உங்களை உதாசீனப்படுத்திப் பேசுவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களைப் பற்றி குறை கூற வேண்டாம்.

**கடகர்:** புதியவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத இலாபம் கிட்டும். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**சிங்கர்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிட்டும். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு அதிகரிக்கும்.

**கன்னி:** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களைக் கண்டறிவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**நாளை**

ஆனி-14 வெள்ளிக்கிழமை 28.06.2013

திதி: பஞ்சமி கா.06.53 வரை

ஷஷ்டி பி.இ.05.31 வரை

நட்சத்திரம்: சதயம் மு.இ.08.25 வரை

சுபநேரம்: 05.55 - 07.25 வரை

இராகுகாலம்: 10.25 - 11.55 வரை

**துலார்:** புதுப் பொருள் சேரும். எதிர்பாராத பயணம் உண்டு. வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.

**விருச்சிகர்:** துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்களின் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**தனுசு:** பேச்சைக் குறைத்து செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். நீண்ட நாள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மகரர்:** கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றப் போராட வேண்டியிருக்கும். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்திற்கு ஆளாவீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**கும்பர்:** தடைகளைத் தாண்டி முன்னேற வேண்டி வரும். உறவினர்கள் உதவி கேட்டு தொந்தரவு தருவார்கள். அரச காரியங்கள் இழுபறியாகும். சொத்து பிரச்சினையில் அவசர முடிவுகள் வேண்டாம். உத்தியோகத்தில் மேலதிகாரியால் பிரச்சினைகள் வரக்கூடும்.

**மீனர்:** குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். நீண்ட நாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | | | 3 | | | 7 |
| 1 | 7 | 6 | | | | | | |
| 3 | 8 | | 7 | | | | 4 | |
| | 1 | | | 6 | 8 | | 9 | 5 |
| 9 | | | | | | | | |
| 2 | 3 | | 1 | 9 | | | 6 | |
| | 5 | | | | 7 | | 2 | 4 |
| | | | | | | 5 | 7 | 3 |
| 6 | | | 4 | | | 1 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 5 | 3 | 8 | 4 | 6 | 9 | 7 |
| 8 | 3 | 4 | 6 | 9 | 7 | 2 | 1 | 5 |
| 9 | 6 | 7 | 2 | 5 | 1 | 3 | 4 | 8 |
| 3 | 8 | 1 | 4 | 7 | 9 | 5 | 6 | 2 |
| 6 | 4 | 2 | 8 | 3 | 5 | 9 | 7 | 1 |
| 7 | 5 | 9 | 1 | 6 | 2 | 8 | 3 | 4 |
| 2 | 7 | 8 | 9 | 4 | 6 | 1 | 5 | 3 |
| 5 | 9 | 3 | 7 | 1 | 8 | 4 | 2 | 6 |
| 4 | 1 | 6 | 5 | 2 | 3 | 7 | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளமார வாழ்த்தி பாராட்டுகின்றோம்



எமது பிரதேச செயலகத்தில் கடந்த ஆறு வருடங்களாக உதவித் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றி திட்டமிடல் சேவையின் முதலாம் தரத்துக்கு தரமுயர்த்தப்பட்டு மன்னார் மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளராக இன்று 27.6.2013 பதியேற்கும்

**திரு.கிருஸ்ணர் சிறீபாஸ்கரன்**

அவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர் மென்மேலும் பதவியுயர்வு பெற்று தனது உன்னத சேவையினை மக்களுக்கு வழங்கி பல்லாண்டு நலமே வாழவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலரும் அனைத்து அலுவலர்களும்,**
**உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,**
**பிரதேச செயலகம், கரவெட்டி.**

## கலாமினியின் வாழ்த்துக்கள்

எமது கிராம அலுவலர் (அச்சுவேலி வடக்கு)

**குமாரசுவாமி கதிரமலைநாதன்**

அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றிருப்பதை பாராட்டி வாழ்த்துகின்றோம்.



**வீடியோ கலாமினி**
**அச்சுவேலி 077 305 3086**
(C10105)(6.7.11)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று 27.06.2013 பேராதனைப் பல்கலைக்கழக பொதுப்பட்டமளிப்பு விழாவில் **கலைமாணிப்பட்டம்** பெறும்

**துரைராஜா சஜீவன் (B.A)**

அவர்கள்ள அகமகிழ்ந்து வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

**மயிலு வீதி.**
**ஆறுகால் மடம்.**
(38885)(45.6.7.)

**வாழ்த்துபவர்கள்,**
**குடும்பத்தினர்**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980 பூசம் செவ்வாய்க் குற்றமற்ற சி.பாவம் 36 சுணட PR மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.

தொடர்பு: 077 8020888,
பொன் வசந்தர் திருமண சேவை,
நீண்டியாற்றை, புலோலி வடக்கு, புலோலி.

## நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

இரண்டு மாதம் நிரம்பிய பூச்சி நீக்கப்பட்டு தடுப்பு ஊசிகள் போடப்பட்டு வால்வெட்டப் பட்ட கொக் கோஸ் பென்ஸர் (coco penser) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
257, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
077 9239314

## சிங்களம் (LEVEL III PAPER CLASS)

ஸ்ரீ இரண்டாம் மொழிக் கல்வி நிறுவனம், 41, றக்கா லேன், யாழ்ப்பாணத்தில்
சனி/ஞாயிறு பி.ப. 1.00மணி தொடக்கம் 03 மணிவரை.

இல. 72, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணத் தில் (மிலேனியம் அருகில்) சனி/ஞாயிறு மாலை 5.30 மணிதொடக்கம் 07.00 மணிவரை நடைபெறும்.

ஸ்ரீமாஸ்டர்
0777 033729

எவரும் பங்குபற்றலாம்

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதியில் இல. 144, (372) கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 291 5826

## விற்பனைக்கு

தினசரி ஓடக் கூடிய வவுனியா/கிளிநொச்சி NTC றூட் பெமிட்டுடன் லேலண்ட் (58 சீற்) பஸ் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 614 3340

## மரம்/சீற் விற்பனைக்கு

ரியூட்டறி கொட்டகைக்கு உகந்த பனைமரம், வளை,சலாகை,கப்பு 10அடி சீற் என்பன விற்பனைக்குண்டு.

எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட்,இருபாலை.

## TV கள் மலிவு விற்பனை

மலிவு விலையில் Sony Wega Flat TV கள் 21" - 12,000/= முதல், 25" 13,000/=, 29" - 16,000/-, பனசோனிக் (Panasonic) 29" 15,000/-, DTS அம்பிளிபயர், Box வகைகள், DVD - 3,000/-.

**தொடர்பு: 077 044 0570**

சோனி ரேடிரு சென்றர் (கொமர்சல் வங்கிக்கு முன்பாக)
56, K.K.S. றோட், சுன்னாகம்.
(38874)(45.6.3)

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)

### 91வது சர்வதேச கூட்டுறவு தினவிழா – 2013

1.திறந்த போட்டி – ஆண்களுக்கான சைக்கிளோட்டம்

- அங்கத்தவர், பணியாளர், பொதுமக்கள் யாவரும் பங்குபற்றலாம்.
- சைக்கிள் ஓட்ட தூரம் 45 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு 60 கி.மீற்றரும், 45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 50 கி.மீற்றரும் ஆகும்.
- விண்ணப்பக் கட்டணம் ரூபா 200/- செலுத்தி போட்டிக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.
- போட்டி 45 வயதுக்கு உட்பட்டவருக்கு தனியாகவும், 45 வயதுக்கு மேற்பட்டவருக்கு தனியாகவும் நடைபெறும்.
- விண்ணப்பதாரி மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர் என்பதை கிராமசேவகர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

2.பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள்

2.1 பேச்சுப் போட்டி

| பிரிவு | தரம் | விடயம் | நேரம் |
|---|---|---|---|
| கீழ்ப்பிரிவு | 6,7 | மக்கள் சக்தியே கூட்டுறவின் பலம் அல்லது எனது கிராமமும் கூட்டுறவும். | 4–5 நிமிடங்கள |
| மத்தியபிரிவு | 8,9 | மாணவர்களுக்கு கூட்டுறவுக் கல்வியின் அவசியம் அல்லது கூட்டுறவு வளர்ச்சியில் இளைய தலைமுறையின் பங்கு | 5–7 நிமிடங்கள |
| மேற்பிரிவு | 10,11 | கூட்டுறவு விருட்சத்தின் ஆணிவேர் அதன் அங்கத்தவர்கள் அல்லது சமூக தலைமைத்துவத்தை கட்டியெழுப்பவல்லதே கூட்டுறவு | 5-7 நிமிடங்கள் |
| அதிமேற்பிரிவு | 12,13 | ஜனநாயகத்தின் பயிற்சிக்களம் கூட்டுறவு அல்லது பயன்மிகு கூட்டுறவை வளர்க்க பற்றுமிகு கூட்டுறவாளர்களே தேவை. | 5–7 நிமிடங்கள |

1.மேற்படி தலையங்கங்களில் விரும்பிய ஒன்றை தெரிவு செய்து பேசலாம்
2.ஒரு பாடசாலையில் இருந்து ஒரு பிரிவில் இரண்டு மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

**2.2 வினாடிவினாப் போட்டி**

விடயப் பரப்பு

- கூட்டுறவு சார்ந்த விடயங்கள் - 50%
- பொதுவானவை – 50%
- ஒரு பாடசாலையில் இருந்து 03 பேர் கொண்ட ஒரு குழு மட்டும் பங்குபற்றலாம்.

**2.3 நாடகம்**

- ஒரு பாடசாலையில் இருந்து ஒரு நாடகம் பங்குபற்ற முடியும்
- கூட்டுறவு சம்பந்தமான நல்ல கருத்துக்களையும், நம்பிக்கையையும், புதிய சிந்தனையையும் மக்கள் மத்தியில் தோற்றுவிக்கக்கூடியதாக கருப்பொருள் இருத்தல் வேண்டும்.
- 20 நிமிடங்களுக்கு குறையாமலும் 30 நிமிடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
- பக்கவாத்தியங்கள், பின்னணிப் பாடல்கள் அனுமதிக்கப்படும்

❖ *பாடசாலை விண்ணப்பங்கள் யாவும் அதிபரால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.*

03. அங்கத்தவர், பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், பேச்சு, கவிதை, வினாடிவினா, கருத்தாடல் நிகழ்வு, குழுப்பாடல், நாடகம், சிறுவர் பாடசாலை குழு நடனம் ஆகிய போட்டிகளுக்கான விளம்பரங்கள் சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
விண்ணப்ப முடிவுத் திகதி–16/07/2013, போட்டி நடைபெறும் இடம் காலம் பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :**
**செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து),**
இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 2222324.
(சி/10114)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பேராதனைப் பல்கலைக்கழக
பொதுப்பட்ட மளிப்பு விழா 27.06.2013
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION
ஊடாக பட்டப்படிப்பை மேற்கொண்டு இன்று
பேராதனைப் பல்கலைக்கழகத்தில் **கலைமாணிப்பட்டம்** பெறும்
எமது கல்வி நிலைய புவியியல் ஆசிரியர்

**இரத்தினசிங்கம் தர்மேந்திரா (B.A)**

அவர்களை அக மகிழ்வோடு வாழ்த்தி அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று கல்விச் சமூகத்துக்கு சிறந்த சேவையாற்றி சகல செல்வங்களுடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

"Congratulations for your Success"

**சாரு அக்கடமி**
மிருசுவில் வடக்கு, மிருசுவில்.

**நிர்வாகி**
**ஆசிரியர்கள்,**
**மாணவர்கள்.**
(38676)(45.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வி ஜெனிபா குணசிங்கம்**
B.A(2012)

**2012 ஆம் வருடத்திற்கான (வெளிவாரி) பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு விழா கண்டி பல்லேகல சர்வதேச பௌத்த பிக்கு மத்திய நிலையத்தில் 2013.06.27 இன்று கலைத்துறைப்பட்டம் பெறும்**

**செல்வி ஜெனிபா குணசிங்கம்**

**அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்பாக வாழவேண்டும் எனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

Best Wishes

"ஆனைவிழுந்தான்"
இமையாணன் கிழக்கு
உடுப்பிட்டி.
(37617)(6.11)

**வாழ்த்துவோர்:**
அப்பா, அம்மா, அப்பம்மாமார், அப்பப்பாமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், அக்காமார், அத்தான்மார், அண்ணா, அண்ணி, பெரியம்மா, மச்சான்மார், மச்சாள், பெறாமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி
கலைவாணி அண்ணாமலை அவர்களின்
பாசமிகு தந்தை

**"முருகன் கனகரத்தினம்"**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
யா/நவற்கிரி ம.வித்தி, நைநடி.

## கடை வாடகைக்கு

A 9வீதி, 155ஆம் கட்டையிலுள்ள பல்பொருள் வாணிபம் நடந்து கொண்டிருக்கும் கடை பொருள்களுடன் (நீர் இறைக்கும் இயந்திரம், சோலார், மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்கும்) வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 891 4235
(37467)(5.6)

## ஆறுதல்
## பணிமனை இடமாற்றம்

**இல.172, சேர் பொன்.இராமநாதன் வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்** என்ற முகவரியில் இயங்கி வருகின்ற எமது ஆறுதல் பணிமனை எதிர்வரும் 01.07.2013 முதல்

**இல. 51, வைமன் வீதி, யாழ்ப்பாணம்**

என்ற முகவரியில் இயங்கத் தொடங்கும் என்பதனை எமது ஆதரவாளர்களுக்கும், அன்பர்களுக்கும் அறியத்தர விரும்புகின்றேன்.

**சுந்தரம் டிவகலாலா,**
**பிரதம நிறைவேற்று அதிகாரி,**
**ஆறுதல்,இலங்கை.**
(சி/10104)(5.6)

அனுமதி இலவசம்

## விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் இனத்துவக் கற்கைக்கான சர்வதேச நிலையம் இணைந்து நடத்தும்

### "அவளின் கதைகள்"

வடக்கிலும் தெற்கிலும் வாழ்கின்ற, போரினால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்களத் தாய்மார்களின் வாய் மூலக் கதையாடல்களின்

கண்காட்சி

இடம்: யாழ் பொது நூலக கூடம்
காலம்: 2013 யூன் மாதம் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில்
மு.ப 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(38682)(6.7.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணுவில் திருப்பதி
# அருள்மிகு ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஆலய
# மஹா கும்பாபிஷேக சிறப்புமலர் 27.06.2013



## ஆலய வரலாறு

இன்று நூதன மஹாசம்ப்ரோக்ஷணம் (மஹா கும்பாபிஷேகம்) காணும் இணுவில் திருப்பதி அருள் மிகு பத்மாவதி தாயார் கோதை நாச்சாரியார் உடனுறை அருள் மிகு ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஆலயத்தை ஸ்தாபிப்பதற்காக இலங்கையில் வேறு எங்கும் இல்லாத திவ்விய விஸ்வரூப வேங்கடேஸ்வரப் பெருமாள் பதினான்கு அடி (14') உயரத்தில் பிரதிஸ்டை செய்வதற்காக 22.06.2005 ஆம் திகதி அத்திபாரம் இடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 24.01.2008 இல் எட்டடி உயரமான (8') மகாலஷ்மியையும் ஏழரை அடி (7½)உயரமான ஆண்டாள் பிராட்டியையும் 14.04.2010 இல் ஏழரை அடி (7½) உயரமான விநாயகப் பெருமானையும் பிரதிஸ்டை செய்வதற்கான அத்திபாரங்கள் இடப்பட்டன. மேலும், ஏழரை அடி (7½') உயரமான ஆஞ்சநேயரையும் ஏழரை அடி (7½')உயரமான கருடாழ்வார் அவர்களையும் பிரதிஸ்டைசெய்ய அத்திபாரம் இடப்பட்டு வேங்கடேசப்பெருமானின் பெருங்கருணையினால் இக் கோயிலின் அறங்காவலராகிய ச.கணேசலவிங்கம் அவர்களின் கனவு நனவாகி இலங்கையில் ஒரு திருப்பதியாக மிளிர அடியார்கள் தாங்களாகவே முன்னின்று சகல செயற்பாடுகளையும் நிறைவேற்றி இன்று கும்பாபிஷேகம் காணும்பெரும் பேறு இணுவில் மக்களுக்கு மட்டுமன்றி சகலருக்கும் கிடைத்துள்ளது அவனருளால்.

"அவனருளால் அவன் தாள் வணங்குவோம்".

## மகா சம்ப்ரோக்ஷண குருவின் ஆசிச் செய்தி



அறுவகைச் சமய நெறிகளைப் பேணிக் காப்பாற்றி வருவது நமது இந்து மரபு. அத்தகைய நெறி முறை வழிபாட்டில் தனித்தனி கடவுளர் காணப்படுகின்றார்கள். அவர்களில் தனித்துவம் பெற்றவராக வழிபடப்படுபவர் திருமால். திரு என்ற சொல்லே அழகு,செல்வம்,சிறப்பு, பொலிவு , பேறு (பாக்கியம்), தெய்வகத் தன்மை என்ற பொருளிலே சுட்டப்படுகின்றது. எனவே இத்தனித்துவமான கடவுள் பக்தர்கள் மேல் கொண்ட கருணையினாலே பல இடங்களில் எழுந்தருளியுள்ளார். அத்தகைய பாவங்களைப் போக்கவல்ல மலைகளுள் வேங்கட பர்வதம் எனும் மலையிலே எழுந்தருளியுள்ள படியினால் அவருக்கு வெங்கடேஸ்வரர் அல்லது வேங்கடேஸ்வரன் என்ற பெயர் உண்டாயிற்று போலும். அவ் வண்ணமே அவர் நம் மீது கருணை கொண்டதால் எம் இணுவை பக்தரின் உள்ளத்தில் எழுந்த தன்னலம் கருதாத பக்தி உணர்வின் செயற்பாட்டிலே உருவான இவ்வாலயத்தில் எங்குமில்லா 14 அடி உயரமுடைய திருவேங்கடேஸ்வரர் வீற்றிருக்க உள்ளார். இத் தனித்துவம் வாய்ந்த கடவுளின் குடமுழுக்கானது வைணவ சம்பிரதாய முறைப்படியும் குடாநாட்டு மரபைச் சார்ந்துள்ளதும் மகா சம்ப்ரோசக்ஷணமா நடைபெற உள்ளது. ஆகையால் இம் மகா சம்ப்ரோக்ஷண வைபவத்தின் மூலம் நமது கிராமத்திலும் நகரத்திலும் தேசமெங்கும் நிம்மதியாக வாழவும் அறநெறிப்பட்ட சிந்தை யோங்கவும் எல்லா மக்கள் சகல பேறும் பெறவும் எல்லாம் வல்ல பத்மாவதித் தாயார், கோதை நாச்சியார் உடனுறை ஸ்ரீ வேங்கடஸ்வரர் பொற்பாதங்களைச் சேவிக்கின்றேன்.

**வை. சோமஸ்கந்தக்குரு.**

## ஆசிச் செய்தி



இறையருள் மழை போல் பொழியும் பேரூர் இணுவில். இணுவை மண்ணில் எங்கும் கோயில் திருநீறு பொலிந்து விளங்கும் திருக் கூட்டத்தைத் தினமும் தரிசிக்கலாம். இவ்வூர் இளைஞர் தனது நேர்த்தியாக உருவாக்கிய திருப்பதி ஸ்ரீ வேங்கடேஸ்வரப் பெருமானின் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துகின்றோம்.

எங்கள் பண்பாட்டுப் பாரம்பரியங்களை கோயில்கள் வளர்க்க வேண்டும். பல லட்சம் ரூபா செலவில் தன் உள்ளத்தில் நினைத்த கனவுக் கோயிலை உயர்திரு ச.கணேசலிங்கம் நிறைவேற்றியமை பெருமைக்குரியது. மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்று அனைவரும் சபீட்சம் பெற வேண்டுகின்றோம்.

" என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**நல்லை ஆதீன குருமுதல்வர்**

## ஆசிச் செய்தி



இனிய திருவூர் இணுவில். திருக்கோயில்கள் நிறைந்த திருவூரில் திருப்பதி நாராயணனுக்கு பெருங்கோயில் உருவாக்கி மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகின்றேன். தர்மம் நிலைப்பதற்காக இத்தரணியில் அவதாரம் எடுத்த பிரானுக்கு பெருங்கோயில் எடுத்தமை போற்றுதற்குரியது. இணுவிலில் பிறந்தவர்களுக்கு இயற்கையாகவே இறைபணி செய்யும் பண்பு நிறைந்திருப்பதை அனைவரும் ஒத்துக்கொள்வர். அந்த வகையில் சிறு பராயம் முதல் பரராசசேகரப்பிள்ளையாரை வழிபாடு செய்து, பிறர்க்கு தீமை எண்ணாது வாழ்ந்த குடும்பம் சண்முகராசா மகேஸ்வரி தம்பதிகள். இக்குடும்பத்து மைந்தனாகிய சண்முகராசா கணேசலிங்கம் கடந்த இருபத்தொன்பது ஆண்டுகளாக கனடாவில் வாழ்ந்து வருகின்றார். வெங்கடேஸ்வரப் பெருமானுக்கு பெருங்கோயில் கட்ட வேண்டும் என்ற அவரது தாகம் இன்று நிறைவேறியிருக்கின்றது. உலகப் பிரசித்தி பெற்ற திருப்பதியைத் தன் தாயகத்தில் உருவாக்கி வழிபட வசதி செய்ய வேண்டும் என்ற சிந்தனை நனவாகிவிட்டது. பல மனிதர்களுக்கு பல ஆசைகள் உருவாவது இயற்கை. எனினும் திரு.கணேசலிங்கம் அவர்களின் பரந்த நோக்கம் தான் பிறந்த மண்ணில் திருப்பதி வெங்கடாசல பதியை பலரும் தரிசிக்க வழிசெய்ய வேண்டும் என்பது. அழகான அற்புதமான கோயில் உருவாகியுள்ளது. அவரது உற்றார்,ஊர் நண்பர்கள் அவருக்குத் துணையாக நின்று இக்கைங்கரியத்தை ஒப்பேற்றியுள்ளார்கள். தெய்வதரிசனம் தேசத்தை புனிதப்படுத்துவதற்கு உதவும். எமது சந்ததி தெய்வீக வாழ்வு வாழ்வதற்கு அருள் மிகுந்த திருப்பதி நாதன் அரணாக நின்று அருள் செய்ய வேண்டி வாழ்த்து கிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்,**
**தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பழை.**
**சிவபூமி அறக்கட்டளை.**

## இணுவில் திருப்பதி இறையருளுக்கு காணிக்கை



என்னை யான் அறியேன் இறைவனின் திருவருள் நடக்கிறது. கடந்த இருபத்தொன்பது ஆண்டுகள் தேசம் கடந்து கனடாவில் வாழும் எனக்கு கடவுள் தந்த சந்தர்ப்பம் கண்ணனை நினைத்தால் சொன்னது பலிக்கும் என்பார்கள். என் பிறந்த மண்ணில் திருப்பதியானை இருத்தி இம் மண்ணுக்கும் மக்களுக்கும் விமோசனம் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. யான் கண்ட கனவு நனவாகிக் கொண்டிருக்கிறது. சிலர்கோயில் ஏன் என்பார்கள்? சிலர் நல்ல காரியம் என்பார்கள். எதுவுமே இறைசெயல் என்பது என் நம்பிக்கை. இத் திருக்கோயில் திருப்பணியை ஆரம்பித்த நாள் முதல் எனக்குப் பேருதவியாக விளங்கிய என் இனிய நண்பனும் உறவினனுமாகிய சுப்பையா பரமேஸ்வரலிங்கம் (உருத்திரன்) அவர்களின் திருத்தொண்டைப் போற்றுகின்றேன். பல வழிகளிலும் கனடாவிலும் இணுவிலிலும் உதவிய உறவுகள், நண்பர்கள் அனை வருக்கும் என் இதய பூர்வமான நன்றிகள் உரித்தாகுக. இந்தியாவிலிருந்து மிகப் பெரிய விக்கிரகங்களைச் செதுக்கி கப்பலில் அனுப்பி வைத்த சிற்பக் கலைஞர்களுக்கும், நவாலியூர் சிற்ப ஆச்சாரியார் தி.சந்திரகுமார் அவர்களுக்கும்,உள்ளூர் கலைஞர் பெருமக்களுக்கும், மகா கும்பாபிஷேகக் கிரியைகளை நிறைவேற்றும் சிவாச்சாரியப் பெருமக்களும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் இனிய பக்தர்களே! இப் புனித திருக்கோயிலை கண்ணை இமை காப்பது போல் காத்து உதவுங்கள். தினமும் வழிபாடு செய்யுங்கள். அன்னதானம், அறிவுத்தானம் அனைத்தும் எங்கள் தேவஸ்தானத்தில் நித்தமும் நிறைவாக நடக்கட்டும். அபயகரங்களோடு சங்கு சக்கர வேங்கடநாதன் அனைவரது கவலையைப் போக்குவான். அவன் திருநாமம் சொல்லி சீராய் வாழ்வோமாக.

**ச.கணேசலிங்கம், தலைவர்/அறங்காவலர்.**

## ஈழத்தின் பெருமை சேர்க்கும் இணுவில் திருப்பதி




இணுவில் திருப்பதி அருள் மிகு ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஆலயத்தின் உருவாக்கமும் அதன் மஹா கும்பாபிஷேகமும் காணுகின்ற வாய்ப்பு எமக்கெல்லாம் வாழ்வில் கிடைத்தற்கரிய வரப்பிரசாதமாகும். இந்துக்கள் எல்லோரும் இதுவரை இந்தியாவில் ஏழுமலையான் அருள் வேண்டி பல சிரமங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் நீண்ட பயணத்தை மேற்கொண்டு வெங்கடேஸ்வரப் பெருமானை தரிசிக்கச் செல்லும் நிலை இணுவில் திருப்பதியின் உருவாக்கத்தால் நீக்கப்பட்டிருப்பது கண்டு மனப் பூரிப்பும் மனமகிழ்ச்சியும் அடையும்பக்தர்களில் நானும் ஒருவன். திருப்பதியானுக்கு நேர்த்திக் கடன்களைச் செலுத்த எமக்கு அண்மையில் ஆலயம்கிடைத்திருப்பது கண்டு வேங்கடேஸ்வரப் பெருமானின் திருவருளை நினைத்துப் பார்க்க உள்ளம் புளகாங்கிதமடைகின்றது.

இணுவில் திருப்பதியானின் அழகுக் கோலம் பார்ப்பவர் மனதைக் கவரும் தன்மை கொண்டுள்ளது. வேங்கடேஸ்வரப் பெருமான் உட்பட எல்லாத் தெய்வங்களுக்குமே பிரமாண்டமான திருவுருவச் சிலைகள் உருவாக்கப்பட்டிருப்பது பக்தர்களை வியக்க வைப்பதாகவும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்துவதாகவும் அமைந்திருக்கின்றது. இத்தகைய பெருமை மிகு ஆலயத்தின் உருவாக்கத்திற்கு வித்திட்ட கணேசலிங்கத்திற்கும் அவர் குடும்பஉறுப்பினர்களுக்கும் பக்தர்களாகிய நாம் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளோம். இந்தியாவிலும் இலங்கையிலும் புகழ் பூத்த அந்தணர்கள் வரவழைக்கப்பட்டு ஆலயத்தின் கீர்த்தியை உயர்த்தியிருப்பதுடன் அவற்றைக் காணும் வாய்ப்பை எம் போன்ற பக்தர்களுக்கு ஏற்படுத்தித் தந்துள்ளது. பெருமானின் திருவருள் கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க இணுவில் திருப்பதியானின் பாதங்களைப் பணிந்து எனது வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பேராசிரியர் க.தேவராஜா,**

## ஈழத்து திருப்பதிக்கு வாரீர்



ஈழத்து திருப்பதியை தரிசிக் வாரீர்
இணுவிலில் எழுந்துள்ள திருக்கோயிலைப் பாரீர்
வாழ வழிகாட்ட வந்த வேங்கடனே கேளீர்
வடகிழக்கு மக்களது கோரிக்கையை ஏற்பீர்
நீள நினைக்க எமை ஆள வந்த நெடுமாலே கேளீர்
நிரந்தர தீர்வதை ஈழத்தமிழருக்கு தாரீர்
காலம் முழுதும் உனை தொழுதேற்ற எமையாள்வீர்
காத்தற் கடவுளாயெழுந்து எமையிங்கு காத்தருள்வீர்.

**மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்**

## இணுவில் திருப்பதி மகா சம்ப்ரோக்ஷண விழா சிறக்க வாழ்த்து

பனுவல் பல கண்ட பெருமாள் திருமால்
இணுவில் துகழ்போல் அண்ட பிரமாண்டமாய்
தனுவாய் கற்கோவில் தான் கண்ட அருள் வடிவாய்
இணுவில் திருப்பதியாய் இன்பம் நுகர்த்தாரே

இத் திருக்கோயிலில் இருமூன்று வகை கொண்ட கற்திரு மேனியாய் இடம் தந்த கணபதி ஸ்ரீபத்மாவதி,ஆண்டாள் நாச்சியார் உடனுறை அனந்த விஷ்வக்ஸேன கருட ஆஞ்சனேய சேவிதரான ஸ்ரீ வேங்கடேஸ்வரப் பெருமாள் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருப்பது நாம் செய்த பாக்கியம். இந்து மத தெய்வீக வழி பாட்டு முறைகளில் இரண்டு கண்களாக் விளங்கும். சைவமும் வைணவமும் சிறந்தோங்கும் நிலையில் இம்மை மறுமை மக்க ளுக்கு வழங்கவும் மதமாத்சர்யங்கள் நீங்கி ஒற்றுமையாய் வாழவும் நோயின்மை முதலான சகல செல்வங்களையும் பேறுகளாய்ப் பெற வகைசெய்கின்ற ஆற்றல் நிறைந்த செயலாய் இருப்பது இந்த இணுவில் திருப்பதி ஸ்ரீ வேங்கடேச சுவாமி திருக்கோயில். கும்பாபிஷேகமதில் அறவார்த்தை பிரதிஷ்டையாள பஞ்சசாஸ்திர ஆகம முறைப்படி நிகழும் இக்கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ளும் பக்தர்கள் அனைவரும் பாக்கியவான்களே என்று வாழ்த்துகிறோம்.

**சோ. பாலசுப்பிரமணிய சிவாச்சார்யார்,**
**சர்வசாதகாச்சாரியார்,இந்தியா.**

## ஆலய கட்டட நிர்மாணம் பற்றிய கண்ணோட்டம்.



திருப்பதி வெங்கடேசப் பெருமான் துணை கொண்டு இக் காரியம் நடைபெறுவதற்கு ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் திருவருளும் சிவஸ்ரீவை.சோமஸ்கந்தக் குருக்களின் ஆசியுடனும் உலகளந்த பெருமானின் பக்தன் உயர்திரு ச. கணேசலிங்கத்தின் ஆதரவுடன் தொடங்க பெற்ற இணுவையம்பதி வேங்கடேசப் பெருமான் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவின் போது

வைஷ்ணவம் வளர்த்த பெரியோர்களான **பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார்** இவர்களையும் நினைவு கூருகின்றேன்.

வேங்கடேசப் பெருமானின் கருவறை அர்த்த மண்டபச் சுற்றில் பன்னிரண்டு ஆழ்வார்கள், கருடன், ஆஞ்சநேயர், தசாவதாரம், புத்தர் போன்ற திரு உருவங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது. விமான தோற்றம் வைஷ்ணவ சமய கலாசாரமும் பல்லவர் காலத்தில் இருந்து அழியாத கலை நுட்பமும் கொண்டு மூலவரின் கருவறை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதில் கண்ணனின் குறும்புகளும் சீனிவாசனின் அற்புத தோற்றமும் நரசிம்மனின் கொடூர காட்சியும் திருவடியைப் பற்றினால் எல்லாம் பெற முடியும் என்பதனைக் காண்பிக்கின்றன. ஸ்ரீதேவி பூதேவி நாராயணனும் திருப்பதியில் இல்லாதவாறு தாயார் ஆண்டாள் சன்னிதானமும் எனக்கு நிகர் இல்லை என்பதை உணர்த்தும் வகையில் மையஸ்தானத்தில் அமைந்துள்ளன. மூலவரின் கருவறையிலே நீரில் இருந்து பஞ்லோகங்களையும் தொடர்புபடுத்தி அண்ட சராசரங்களையும் உள்ளடக்கி விண் ணைத்தொ டும் வண்ணம் இருக்கின்றன .

பெருமானின் எதிரில்கருடன் பலி பீடமும் ஈசானத்தில் ஆஞ்சனேயரும் அமையப் பெற்றுள்ளது சிறப்பம்சமாகும். கோயிலின் வாசலில் திரிதளவிமானத்துடன் கணநாதர் பேசர வடிவில் அமைக்கப்பட்டு திருக்குடமுழுக்கு காணும் போது இணுவில் வாழ் அடியவர்கள் மற்றும் சு.பரமேஸ்வரலிங்கம் அவர்களுக்கும் நன்றி கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின் றேன்.

**தி.சந்திரன்,(ஆலய சிற்பாச்சாரியார்)**

(C7101110)(5.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
தங்கராணி சங்கரப்பிள்ளை
திதி:- 27.06.2013

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும்
தங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலாது
ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ச. சசீந்திரன் (மகன்),
ர.முருகன் (நண்பன்).

சிறி ராம் மந்திரம்
கனகசபை வீதி, மானிப்பாய்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு
27.09.1942

உதிர்வு
29.05.2013

கடந்த 29.05.2013 புதன்கிழமை
சிவபதமடைந்த எமது சகோதரி
திருமதி
வைத்திலிங்கம் சிவபாய்க்கியம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (27.06.2013) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கீரிமலை புனித தீர்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (28.06.2013)வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் திருநெல்வேலி பழங்கிணற்றடி பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பழங்கிணற்றடி பிள்ளையார்
கோயில் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

சி. குமாரசாமி (சகோதரன்).
செல்வி கு. யசிந்தா (மருமகள்).

## கைத்தொழில் உற்பத்தி குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 27

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்திலுள்ள கைத்தொழில் உற்பத்திக் கிராம திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை அல்லாரை, வதிரி, நீர்வேலி ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடல் காலை 8.30 மணிக்கு அல்லாரை தும்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திலும், முற்பகல் 10 மணிக்கு வதிரி தோல்பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திலும், முற்பகல் 11 மணிக்கு நீர்வேலி காமாட்சி அம்பாள் கூட்டுறவுச் சங்கத்திலும் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்திச் சபையால் ஜேர்மன் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பகத்தின் நிதியுதவியுடன் கட்டப்பட்ட நீர்வேலி வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்க வாழைநார் பிரித்தெடுப்பு நிலையத்தால் நடத்தப்பட்ட வாழை நாரிலிருந்து கைவினைப் பொருள்கள் தயாரிப்பதற்கான தொழில்நுட்ப பயிற்சி பெற்ற பயனாளிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு முற்பகல் 11.45 மணிக்கு நடைபெறும்.

கைத்தொழில் கிராம நிகழ்ச்சித் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சங்கானை பிரதேச செயலர் பிரிவில் உள்ள அந்திரான் கிராமத்துக்கு தொல்பொருள்களுக்கான இயந்திர உபகரணங்கள், மூலப்பொருள்கள் , கையளிப்பு மேலதிக தோல்நுட்ப மாற்றுப் பயிற்சியின் ஆரம்ப நிகழ்வு நண்பகல் 12.30 மணிக்கு அந்திரான் கிராம சங்கத்திலும் நடைபெறவுள்ளது (வ-14)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 27

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி ரி. நவரட்ணம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரினும் சிறப்பு விருந்தினர்களாக ஐயாத்துரை சிறீ ரங்கேஸ்வரனும், பருத்தித்துறை பிரதேச சபை எதிரணித் தலைவரும் கலந்து கொள்வர். (வ)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

அமரர் செல்லப்பு
சிவலிங்கம்



அன்னை மடியில்
17.12.1934

ஆண்டவன் அடியில்
29.05.2013

அன்பும் ஆற்றலும் அறிவித்த ஆசானே
என்பும் பிறர்க்கென்ற கோமானே - துன்பமெனும்
ஆழியலைத் துரும்பாக எம்மனது தவித்திருக்க
வாழியரன் அடியிணையை அடைந்திரே!

அப்பனுக்கு அப்பனாய் அம்மைக்கு - அம்மையாய்
எப்போதும் எமக்காக வாழ்ந்தவரே - இப்பெரிய
பாரினிலே வாழும்வழி பயிற்றுவித்த உங்கள்
ஆருயிரும் அரனடியை அடைந்ததுவே

அன்னாரின் நினைவாக நாளைமறுதினம் (29.06.2013) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

சி. ஜசீதரன் (மகன்)
(38681) (45.6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
17.08.1934

மறைவு
28.05.2013

அமரர் வேலுப்பிள்ளை
கனகரத்தினம்

கடந்த (28.05.2013) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வேலுப்பிள்ளை கனகரத்தினம் அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (27.06.2013) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நரசிங்க வைரவர் கோயிலடி,
அச்செழு, நீர்வேலி.

(38675)
(6.11)

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

அமரர்
செல்லப்பா
இராஜேஸ்வரன்
(ராசன் எலற்ரீசியன்)



தோற்றம்
04.10.1943

மறைவு
28.05.2013

கடந்த (28.05.2013) சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் செல்லப்பா இராஜேஸ்வரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (25.06.2013) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.06.2013) வியாழக்கிழமை முற்பகல் 11.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும். தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும். கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் இறுதி வரை உதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலட்டி வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

மகன், தனுசன்
குடும்பத்தினர்

## 7ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
27 * 03 * 1922



உதிர்வு
15 * 07 * 2006

அமரர் வைத்தியலிங்கம் சிவஞானபூரணி
திதி-அபரபக்க பஞ்சமி

அன்பின் ஊற்றாய் விளங்கி ஆதரவு காட்டியே
இன்ப வாழ்வு நாம் வாழ உம்மையே அர்ப்பணித்தீர்!
துன்பச் சுவடே தெரியாமல் எமை வளர்த்து
கண்ணின் மணிபோல வாழ்ந்து விண்ணில் மறைந்தீர்!
மண்ணிலே நல்ல மாண்புடனே வாழ்ந்திருந்த உங்களை
எப்போது காண்போம் இனி... பெற்றிடுவீர் ஆத்மசாந்தி.

110, [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.


மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது கிழக்கு பயணத்தால் அரசியல்வாதிகளுக்கு பீதி

### அதனாலேயே கூட்டத்துக்கு அனுமதி மறுப்பு என்கிறார் அசாத் சாலி

கொழும்பு, ஜூன் 27
எனது கிழக்குக்கான பயணம் சில அரசியல்வாதிகளுக்கு பீதியை ஏற்படுத்தியுள்ளமை அதிர்ச்சி அளிக்கின்றது என்று தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலர் அசாத்சாலி தெரிவித்தார்.
காத்தான்குடியில், ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் சனிக்கிழமை அஸாத் சாலியால் நடத்தப்படவிருந்த மக்கள் சந்திப்புக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. அது குறித்து ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
நன்றிக் கடன் தீர்க்கவே நான் கிழக்குக்கு செல்கிறேன். எவ்வித அரசியல் செயற்பாடுகளுக்காகவும் அல்ல. எனது வருகை அரசியல்வாதிகளை ஏன் பயம் கொள்ளச் செய்கின்றது. அரசியல்வாதிகள் மக்களுக்கு சேவை செய்திருந்தால் ஏன் பயப்பட வேண்டும்?
எனது கூட்டத்துக்கான அனுமதியை ரத்துச் செய்ய காத்தான்குடி நகர சபை பிரதித் தலைவர் எம்.ஐ.எம்.ஜெஸீம் பாடுபட்டதாகக் கேள்வியுற்றேன்.
எனக்காக வாக்களித்த மக்களுக்கு நான் கடமை செய்ய வேண்டும்.
எனது கூட்டத்தை தடுத்து நிறுத்தினாலும் நான் சேவை செய்வதைத் தடுக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி)



சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த நடிகருக்கான விருதைப் பெற்ற சிங்கள நடிகர் ஜகத் சமில, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நிதி வழங்கி கௌரவிக்கப்பட்டார். அருகில் தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல காணப்படுகிறார்.

## பிக்குவை தாக்கிய மூவர் மாட்டினர்

கொழும்பு, ஜூன் 27
புத்தளம், நவகத்தேகம – ரம்பகனயாகமே பௌத்த மத்தியஸ்தானத்தின் தலைமை பௌத்த பிக்குவை தாக்கினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் செவ்வாய்க்கிழமை இரவு நவகத்தேகம பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
வீதியால் சென்ற பிக்குவிடம் பிரித் ஓதுமாறு குறித்த மூன்று சந்தேகநபர்களும் மதுபோதையில் தெரிவித்தனர். அதனையடுத்து வீதியில் பிரித் சொல்ல முடியாது என்று பௌத்த பிக்கு தெரிவித்தார். (ச)

## மாத்தளை புதைகுழி விடயத்தை திசைதிருப்பவே விசாரணைக்குழு

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

மாத்தளை, ஜூன் 27
மாத்தளை மனிதப் புதைகுழி தொடர்பில் சட்டத்தின் செயற்பாடுகளை திசை திருப்புவதற்காகவே ஜனாதிபதி விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.
மாத்தளை மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழு தொடர்பில் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி ஜே.வி.பி. விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ் வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
மாத்தளை மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் மாத்தளை நீதிவான் நீதிமன்றில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது,



ஜனாதிபதி அவசரமாக இது தொடர்பில் ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார். மாத்தளையில் மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டு பல நாள்கள் கடந்தபோதிலும், அது தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை.
எனினும், அது தொடர்பில் வழக்கு விசாரணைகள் ஆரம்பமான உடனேயே ஆணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமை, சட்டத்தின் நடவடிக்கைகளை முடக்குவதற்கான – திசை திருப்புவதற்கான செயற்பாடாகும் என்று எண்ணத் தோன்றுகின்றது.
ஆரம்ப காலத்தில் மாத்தளை மனிதப் புதைகுழி சம்பந்தமாக அரசு பலதரப்பட்ட கருத்துகளை வெளியிட்டுவந்தது. விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்படவில்லை. எனினும், அங்கிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் 1987 – 1989 காலப்பகுதியில் கொல்லப்பட்டவர்களுடையதாக இருக்கலாம் என மருத்துவ அறிக்கை மூலம் தகவல் வெளியாகியது. அதனையடுத்து, மாத்தளை வாழ் வாசிகள் நீதிமன்றில் மனுக்களை தாக்கல் செய்தனர்.
குறித்த மனுக்கள் மீதான வழக்கு விசாரணைகளின் போது நீதிமன்ற நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க நோக்கில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன் வந்தது.
இது மிக முக்கிய விடயமாகும். இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறும்வரை மௌனம் காத்துவந்த அரசு, தற்போது அவசரமாக விசாரணைக் குழுவொன்றை நியமித்துள்ளமை சந்தேகத்துக்குரிய விடயமாகும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தரமற்ற எரிபொருள் இறக்குமதி செய்தால் இனி கறுப்பு பட்டியலில்



கொழும்பு, ஜூன் 27
உரிய தரத்தைக் கொண்டிராத எரிபொருளை இறக்குமதி செய்யும் நிறுவனங்களை கறுப்புப் பட்டியலில் இணைக்க பெற்றோலிய வளத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.
தற்போது வேறு நிறுவனத்தின் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அனுரபிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.
இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் உரிய உள்ளடக்கங்களைக் கொண்டிராத காரணத்தினால் அண்மையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் நிராகரிக்கப்பட்டது.
கொழும்பு ஆய்வுக்கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் குறித்த எரிபொருள் உரிய உள்ளடக்கங்களைக் கொண்டிராமை கண்டறியப்பட்டமையால் அவை நிராகரிக்கப்பட்டது என்று அமைச்சர் கூறினார்.
தற்போது போதியளவு எரிபொருள் கையிருப்பு எம்மிடம் உள்ளது.
விரைவில் வேறு நிறுவனத்திடம் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார். (ச)

## பதினொரு நாய்களுடன் இரவைக் கழித்த பெண்


### மாத்தறையில் பரபரப்பு

கொழும்பு, ஜூன் 27
அதிநவீன சொகுசு வாகனமொன்றுக்குள் பதினொரு நாய்களை ஏற்றிக்கொண்ட பெண்ணொருவர், செவ்வாய்க்கிழமை முழுவதும் நாய்களுடன் பூட்டிய காருக்குள் இருந்துள்ள சம்பவம் மாத்தறை நகரில் நடைபெற்றது.




மாத்தறை நகரை அண்மித்த வெல்கம சந்தியில் செவ்வாய்க்கிழமை குறித்த பெண் நவீன சொகுசுக் காரில் நாய்களையும் ஏற்றிக் கொண்டுவந்து நிறுத்தியுள்ளார். அவரது நடை, உடை மற்றும் அவரது செயற்பாடுகளில் சந்தேகம் கொண்ட அந்தப் பிரதேச மக்கள் கார்ச் சக்கரங்களின் காற்றைத் திறந்து விட்டுள்ளனர்.
நாய்களுடன் இரவைக் கழித்த பெண்ணைக் காணும் ஆவலில் காரைச் சுற்றி ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் சூழ்ந்து கொண்டதால், அந்தப் பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.
பின்னர் அந்த இடத்துக்கு வந்த போக்குவரத்துப் பொலிஸார், காரின் சக்கரங்களுக்கு காற்றை நிரப்பி அந்தப் பெண் அங்கிருந்து புறப்பட்டுச் செல்ல உதவியுள்ளனர்.
இந்தச் சம்பவம் மாத்தறைப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (ச)

## திருக்கேதீஸ்வரத்தில் இந்து கலாசார மண்டபம்



மன்னார், ஜூன் 27
இலங்கை மற்றும் புலம்பெயர் தமிழர்களின் 72 லட்சம் ரூபா நிதியுதவியில் திருக்கேதீஸ்வரத்தில் ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகள் இந்து கலாசார மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.
சபையின் செயலர் தம்பு துரைராசாவினால் சைவ மக்களிடம் சேகரிக்கப்பட்ட நிதியுதவியில் அமைக்கப்பட்ட இந்த மண்டபத்தில் கலை, கலாசார நிகழ்வுகள் நடத்தக்கூடியதாக மேடையும், யாத்திரிகள் தங்கக்கூடியதான பொது மண்டபமும் அமைந்துள்ளதுடன் ஏனைய சுகாதார குடிதண்ணீர் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த மண்டபத்தில் 36 மகான்களினதும், நாயன்மார்களினதும் திருவுருவப் படங்களும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. (ச-14)

## இலங்கைக்கு இன்று வருகிறார் பாகிஸ்தான் இராணுவத் தளபதி



கொழும்பு, ஜூன் 27
இராணுவ ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில், பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் அஸ்பக் பர்வேஸ் கயானி இன்று வியாழக்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.
மூன்று நாள் இலங்கையில் தங்கியிருக்கும் அவர், நாட்டின் மூத்த படை அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளார்.
அவர் பாதுகாப்புச்செயலர் கோத்தபாயவுடன் நிபுணத்துவ நலன்கள் குறித்து பேச்சு நடத்துவார் என்று கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்துள்ளது.
நாளை வெள்ளிக்கிழமை தியத்தலாவவில் உள்ள இலங்கை இராணுவ அக்கடமியில் பயிற்சியை முடித்து வெளியேறும் படையினரின் அணிவகுப்பு நிகழ்வில் பாகிஸ்தான் இராணுவத் தளபதி பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.
ஜெனரல் பர்வேஸ் கயானி இலங்கைக்கு மேற்கொள்ளும் இரண்டாவது பயணம் இதுவாகும். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பக்கத் தொடர்ச்சி

# அதிகாரப் பகிர்வு தொடர்பில் சிங்கள மக்களுக்கு விளக்கம்

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அதிகாரப்பகிர்வு என்பது இறக்குமதி செய்யப்பட்ட மேற்குலக நாட்டுச் சிந்தனை என்று இனவாதிகள் கூச்சல் போடுகின்றனர். 1956, 1965 இல் இந்த நாட்டுச் சிங்களப் பிரதமர்கள், தமிழ்த் தலைவர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் மூலம் அதிகாரப் பரவலாக்கல் கொள்கையை மிகத் தெளிவாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதை நாம் நிரூபித்தால், இந்தியா தமிழர்களுக்கு சார்பாகச் செயற்படுவதாகத் தெரிவிக்கின்றனர். இந்தியா எங்கே தமிழர் சார்பாகச் செயற்படுகின்றது. போரை நடத்தியதே இந்தியாதான் என்றும் கடைசி நேரத்தில் சில மேற்குலக நாடுகள் செய்த சில முயற்சிகளையும் தடுத்து நிறுத்தி உதவி செய்ததும் இந்தியா தான் என்றும் ஏன் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை வலுவிழக்கச் செய்ததும் இந்தியா தான் என்று அரசதரப்பினரே தெரிவித்தனர். இதெல்லாம் தமிழர் சார்பான செயற்பாடுகளா? தமிழர் பெரும்பான்மையாக வாழும் வடக்கில் தமிழர்களின் கட்சியான கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதை இனவாதிகளால் சகிக்க முடியவில்லை.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வெளியே எந்த ஒரு கட்சியும் மாகாண சபையை கைப்பற்றி விடக்கூடாதென்ற காரணத்தினால் தான் இனவாதிகள் 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள் - என்றார். (த-5)

**விற்பனைக்கு** பவுடர் கோட் அலுமினிய பாட்டிஷம் & சோக்கேஸ் & (3' X 6') 3டோர் (3Door), இறாக்கை, 8 x 4 றெக்போட் (RACK Bord) 8 போட் Office Table விற்பனைக்கு உண்டு. வீடியோ, பான்ஸி, போன்சொப் போன்ற கடைகளுக்கு உகந்தது. T.P- 0772447090



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது பாடசாலை ஆசிரியர்
**திரு.கணேசலிங்கம் கஜேந்திரன்** அவர்கள்
இன்று (27.06.2013) வியாழக்கிழமை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெறுவதனை அகமகிழ்ந்து பாராட்டுவதோடு மென்மேலும் பல பட்டங்கள் பெற்று பாரினில் புகழ்பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

ஆசிரியர் கழகம்
யா/கீரிமலை நகுலேஸ்வர ம.வி

**அந்தியேட்டி அழைப்பு**

தோற்றம்
03
03
1943



மறைவு
01
06
2013

அமரர் **அரியகுட்டி சிவராசா** (செல்வராசா)

கடந்த 01.06.2013 சிவபதமடைந்த எமது தந்தையின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 27.06.2013 வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசிமூலமும் துண்டுப்பிரசுரங்கள் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

# ராஜீவ் காந்தி படுகொலை இந்திய – ரஷ்ய கூட்டுச் சதி

மொஸ்கோவிஸ்கிஜ் கொம்சோமொலெட்ஸ்' கடந்த ஞாயிற்றுக்கிழமை இது தொடர்பான கட்டுரையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவம் தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதுவித தொடர்புகளும் கிடையாது என்றும் அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ராஜீவ் காந்தி கொலையின் பின்னணியில் சில உத்தரவுகளை ரஷ்ய நாட்டு உளவுத்துறையான எஸ்.வி.ஆர் பிறப்பித்தது எனவும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தியாவில் உள்ள அரசியல் செல்வாக்கு மிக்க நபர் ஒருவர் ராஜீவ் காந்தி கொலையின் பின்னணியில் செயற்பட்டதாகவும், அவருக்கான உத்தரவுகள் சில ரஷ்யா உளவுத்துறையிடம் இருந்து அனுப்பப்பட்டதாகவும் பரபரப்பான தகவல்கள் அந்தக் கட்டுரையில் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறான பின்புலத்தில் இந்தியாவில் கிடைத்த வேற்று நாடுகள் சிலவற்றின் தொடர்புகள் மூலம் ராஜீவ் படுகொலை சம்பவம் நடைபெற்றதாகவும் அந்தப் பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

## கிழக்கு அரியாலையில் உல்லாசமான கடற்கரை

யில் 21 பரப்புக் காணியையும் ஆலயம் ஒன்றுக்குச் சொந்தமான 5 ஏக்கர் காணியையும் நீண்டகாலக் குத்தகைக்குப் பெறவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 'பீச்' அமைப்பதற்கான திட்டத் தயாரிப்புப் பணிகளில் நல்லூர் பிரதேச சபையினர் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிது.

இதன்படி கடற்கரையில் இருந்து சிறிது தூரத்தில் உள்ள சிறிய தீவைத் தெரிவு செய்து அதனை அழகுபடுத்தி உல்லாசப் பயணிகளுக்கான சிறிய குடில்களை அமைப்பது, போக்குவரத்தில் ஈடுபடச் சிறிய படகுகளைப் பயன்படுத்துவது, கடற்கரைப்பகுதியில் சிறிய குடில்கள் மற்றும் விடுதி வசதிகளை ஏற்படுத்துவது போன்ற திட்டங்களை நல்லூர் பிரதேச சபையினர் தயாரித்து வருவதாகத் தெரிவித்தனர். (ஐ-7)

**பாஷாண உத்வாஷன சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவில்லும்**



தோற்றம்
20.08.1955
மறைவு
17.06.2013

அமரர் சிவஸ்ரீ தம்பையா ஐயர் பாலசுப்பிரமணிய ஐயர்

அவர்களின் பாஷாண உத்வாஷன (கல்லெடுப்பு) நிகழ்வு நாளை (28.06.2013) வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைகின்றோம்.

எமது குடும்பத்தலைவரின் மரணச்செய்தி கேட்டதும் நேரில் வந்தும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் சகல விதமான உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனப் பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இலட்சுமணன் தோட்டம், தும்பளை. குடும்பத்தினர்.

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலை ஆசிரியை திருமதி மதிவதனி முரளிகரன் அவர்களின் மாமியார்
**மங்கையற்கரசி குலசேகரம்பிள்ளை**
அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு அவரது ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

ஆசிரியர் நலன் புரிச்சங்கம்
யா/ கோக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்- இலங்கை**
**முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்**

1ஆம் 2ஆம் 3ஆம் 4ஆம் வருடம் வணிகமாணி/தொழில் நிர்வாகமாணி
இரண்டாம் அரையாண்டு மீள்பரீட்சைகள் 2011

மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பித்த மீள்பரீட்சார்த்திகள் தங்களது அனுமதி அட்டையினை முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இப்பரீட்சைகள் (01.07.2013) இல் இருந்து ஆரம்பிக்கப்படும். பரீட்சை நேர அட்டவணையினை முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பார்வையிடலாம்.

பதிவாளர்.


**Vacancy for Journalist**

A well established news paper institution is looking for an experienced journalist capable of translating English matters into Tamil and vis-a-vis. Apply in own handwriting giving details of experience with copies of testimonials mentioning two names of non related referees with contact numbers. Preference will be given to persons living within the Jaffna town limits and suburbs. Salary and other matters negotiable.

Applications should reach the address before 30.06.2013.

Box No: 2013, New Uthayan Publications Ltd,
361, Kasthuriyar Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருநகர் மீனவர்கள் 31 பேரின் 27 ஆவது வருட நினைவாக குருநகர் சூசையப்பர் விளையாட்டுக் கழகம், குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்திய ''தூயஒளி'' சுற்றுக் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணிக்கு, பாடும்மீன் விளையாட்டுக்கழக அணித் தலைவர் அ.யேசுதாசன் கிண்ணத்தை வழங்குகின்றார். (ற-51)

# இறுதியாட்டங்கள் இன்று



இராமநாதன் மகளிர் கல்லூரி



வேம்படி மகளிர் (கறுப்பு)

யாழ்ப்பாணம், ஜூன் 27
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, 175 ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் கூடைப்பந்தாட்ட, வலைப்பந்தாட்டச் சுற்றுத் தொடர்களின் இறுதியாட்டங்கள் இன்று பி.ப. 2 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர் (கறுப்பு) அணி மோதவுள்ளது.

வலைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்.துக் கல்லூரி அணி மோதவுள்ளது.

இன்றைய நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.டபிள்யூ.விமலராஜா கலந்து கொள்ளவுள்ளார். (ற-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 27
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவறெஸ்ற் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப.3.30 மணி
டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம்.
பி.ப.4.30 மணி
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் பொமர்ஸ் விளையாட்டுக் கழகம். (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 27
மற்றிஸ்கோம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 3.30 மணி
கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 27
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 3.30 மணி
வல்வை விளையாட்டுக் கழகம் எதிர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம்.
பி.ப. 4.30 மணி
சிறிஅம்பாள் விளையாட்டுக் கழகம் எதிர் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம். (ற-23)

# அதிகரித்தது ஜடேஜாவின் மதிப்பு

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் அசத்திய பின்னர் ரவிந்திர ஜடேஜாவின் மதிப்பு பல மடங்கு அதிகரித்து விட்டது.

இந்திய அணித்தலைவர் டோனியின் செல்லப்பிள்ளையான ரவிந்திர ஜடேஜா சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் சகலதுறை வீரராக (80 ஓட்டங்கள், 12 இலக்குகள்) அசத்தி கிண்ணம் வெல்ல கைகொடுத்தார்.


இத்தொடரில் அதிக இலக்குகளை வீழ்த்தியமைக்காக தங்க பந்து விருது வென்ற இவரை, ஒப்பந்தம் செய்ய விளம்பர நிறுவனங்கள் தற்போது வரிசை கட்டி நிற்கின்றன.

இது குறித்து ஜடேஜா இணைந்துள்ள ரிதி ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் முகாமையாளர் அருண் பாண்டே கூறுகையில்.

இந்தளவுக்கு முன்னேற்றம் அடைய ஜடேஜா கடுமையாக உழைத்துள்ளார்.


வித்தியாசமான தலை அலங்காரம், முறுக்கிய மீசை, டாட்டூ என்று தனக்கென ஒரு இமேஜை உருவாக்கியுள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ண வெற்றிக்குப் பின்னர், இவரை ஒப்பந்தம் செய்ய பலர் முன்வந்துள்ளனர். இன்னும் பல புதிய வணிக நிறுவனங்களும் விரைவில் வரவுள்ளன'' என்று தெரிவித்துள்ளார்.(ற)



# நெல்லியடி சென்றலை வீழ்த்தியது பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 27
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் பிரிவு III க்கான 15 வயதுப் பிரிவு ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 7 இலக்குகளால் வெற்றி பெற்றது.



நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி 25.5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 79 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

அபிலாஷ் 16 ஓட்டங்களையும், அன்பரசன் 12 ஓட்டங்களையும், தர்சிகன் 10 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றதுடன் உதிரிகளாக 19 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்.பற்றிக்ஸ் சார்பாகப் பந்துவீசிய பியற்றிக் 5 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், சாம் 1.5 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி ஓர் ஓட்டத்தைக் கொடுத்து 2 இலக்குகளையும், சரோன் 7 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், டானியல் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், மிதுன் 7 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

80 ஓட்டங்கள் என்ற எளிதான இலக்கை நோக்கி களமிறங்கிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 11.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அனோஜன் 24 ஓட்டங்களையும், வசந்தரூபன், சுலோசன் ஆகியோர் தலா 11 ஓட்டங்களையும், டானியல் 10 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றதுடன் 19 ஓட்டங்கள் உதிரிகளாகப் பெறப்பட்டன.

நெல்லியடி மத்திய மகா வித்தியால அணி சார்பில் பந்துவீசிய, லக்சன், டிக்ஷன், டிலக்ஷன் ஆகியோர் முறையே 7, 31, 33 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். (ற-86)

# வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கபடிப் போட்டி சம்பியனாகத் தெரிவாகிய அணிகளின் விவரம்

யாழ்ப்பாணம், ஜூன் 27
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட கபடிப் போட்டித் தொடரில் 15 வயது ஆடவர் பிரிவில் கலட்டி ஆர்.சி.ரி.எம். பாடசாலை அணியும், மகளிர் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தப் பாடசாலையும் சம்பியனாகத் தெரிவாகின. 19 வயது ஆடவர் பிரிவில் வவுனியா பரக்கும்பா மகா வித்தியாலய அணியும், மகளிர் பிரிவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியும் வெற்றிபெற்றுச் சம்பியனாகின.

இந்த இறுதியாட்டங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவு ஆடவருக்கான இறுதியாட்டத்தில் கலட்டி ஆர்.சி.ரி.எம். பாடசாலை அணியை எதிர்த்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி களமிறங்கியது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் கலட்டி ஆர்.சி.ரி.எம். பாடசாலை அணி 22:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது.

அதேபிரிவில் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் வவுனியா பரக்கும்பா மகா வித்தியாலய அணியை எதிர்த்து மன்னார் பற்றிமா மகா வித்தியாலய அணி மோதியது. அதில் வவுனியா பரக்கும்பா மகா வித்தியாலய அணி 18:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

19 வயதுப் பிரிவு ஆடவருக்கான இறுதியாட்டத்தில் வவுனியா [illegible]ம்பா மகா வித் [illegible] பாடசாலை அணி மோதி



யது.

அதில் பரக்கும்பா மகா வித்தியாலய அணி 37:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.

அதேபிரிவில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில், புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய அணி மோதியது.

அதில் பருத்தித்துறை இள [illegible] ஹென்றியரசர் கல்லூரி அணி 52:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

அடுத்து இடம்பெற்ற 15 வயதுப் பிரிவு மகளிருக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், கிளிநொச்சி சிவநகர் அ.த.க.பாடசாலை அணியும் மோதிக் கொண்டன.

அதில் பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 28:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.

அதேபிரிவில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் வவுனியா பரக்கும்பா மகா வித்தியாலய அணியை எதிர்த்து மன்னார் கருகண்டல் அ.த.க.பாடசாலை அணி மோதியது. அதில் கருகண்டல் அ.த.க.பாடசாலை அணி 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலை அணி மோதியது. அதில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி 28:12 என்ற புள்ளிதள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

அதேபிரிவில் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் வவுனியா மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து வவுனியா பூவரசன்குளம் அரசினர் அ.த.க.பாடசாலை அணி மோதியது. அதில் வவுனியா மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 33:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ற-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துடிப்பான களத்தடுப்பே வெற்றிக்கு வழிகாட்டியது

## டிராவிட் கூறுகின்றார்

இந்திய வீரர்களின் துடிப்பான களத்தடுப்பு மற்றும் சிறப்பான ஆட்டம் சம்பியன்ஸ் கிண்ணத்தை வெல்லக் கைகொடுத்தது என்று முன்னாள் அணித்தலைவர் டிராவிட் பாராட்டினார்.

சம்பியன்ஸ் கிண்ணத் (மினி உலகக் கிண்ணம்) தொடரின் இறுதிச்சுற்றில் இந்திய அணி, இங்கிலாந்தை வீழ்த்தி கிண்ணத்தை கைப்பற்றியது.

இது குறித்து டிராவிட் கூறுகையில்,

''ஒருநாள் போட்டிகளில் இந்தியா எப்போதும் சிறந்த அணி. குறிப்பாக சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்கேற்ற இளம் வீரர்கள் இக்கட்டான சூழ்நிலைகளை எளிதாக சமாளித்தனர்.

இங்கிலாந்துக்கெதிரான இறுதிச்சுற்றில் துடுப்பாட்டத்தில் இலக்குகள் சரிந்த போதும் கோஹ்லி மனம் தளராமல் செயற்பட்டார். துடுப்பாட்டம், பந்துவீச்சு என்று இரண்டிலும் சமபலத்தில் இருந்ததால் எளிதில் சாதிக்க முடிந்தது.

இங்கிலாந்து ஆடுகளத்தின் தன்மைக்கு ஏற்ப வழக்கமான 6 துடுப்பாட்ட வீரர்களை தவிர்த்து ஜடேஜா 7ஆவது வீரராக அசத்தினார்.

பந்துவீச்சில் மிரட்டிய இவர், சகலதுறை வீரராக ஜொலித்தார். களத்தடுப்பில் இந்திய அணி துடிப்புடன் செயற்பட்டதை காண முடிந்தது. சிறந்த அணியை தெரிவு செய்த தெரிவுக்குழுவினரையும் பாராட்ட வேண்டும்.


2011ஆம் ஆண்டில் உலகக் கிண்ணம் (50 ஓவர்) வென்ற இந்திய அணியில் இடம்பெற்ற வீரர்களில் தற்போது மூன்று வீரர்கள் மட்டுமே அணியில் உள்ளனர். 2015ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்தில் நடக்கவுள்ள அடுத்த உலகக் கிண்ணத் தொடருக்குள் இந்த நிலை மாற வேண்டும். பெரிய தொடர்களுக்கு மூத்த வீரர்களின் அனுபவம் மிகவும் முக்கியமானது. முன்னாள் வீரர்களான கபில் தேவ், மனோஜ் பிரபாகர் ஆகியோருக்கு பின் துடுப்பாட்டத்தில் கைதேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் கிடைக்கவில்லை.

தற்போது சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்கேற்ற அணியில் இடம் பிடித்த இர்பான் பதானை 2015 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னர் தயார் செய்தால், வேகப்பந்து வீச்சில் அசத்தும் அவர் சகலதுறை வீரராக கைகொடுக்க வாய்ப்பு உள்ளது.

முதல்தர அணியான தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சாதிக்க இந்திய அணிக்கு 4 பந்து வீச்சாளர்கள் தேவை. இந்திய அணி துடுப்பாட்டத்தில் பலமான அணியாக இருந்தாலும் ஸ்டைன், மோர்கல், பிலாண்டர் போன்ற முன்னணி வீரர்கள் உள்ளதால் எந்த நேரத்திலும் சிக்கல் ஏற்படும்.

நீண்ட நாள்கள் உள்ளதால் வேகப்பந்து வீச்சாளர்களான இஷாந்த் சர்மா, புவனேஷ்வர் குமார், உமேஷ் யாதவ் ஆகியோருக்கு காயம் ஏற்படாமல் இருப்பது அவசியம்.

இவர்களுடன், அனுபவ வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் விரைவில் உடற்தகுதி பெறும் பட்சத்தில் இந்திய அணி சாதிக்க அதிக வாய்ப்பு உள்ளது'' என்று தெரிவித்தார்.(ற)



# மன்னிக்கவும் மரியா

ரஷ்ய ரென்னிஸ் வீராங்கனை ஷரபோவாவின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து விமர்சித்ததற்காக ரென்னிஸ் வீராங்கனை செரினா வில்லியம்ஸ் மன்னிப்பு கேட்டுள்ளார்.

விம்பிள்டன் போட்டிகள் தொடங்கியுள்ள நிலையில் இந்த இரு வீராங்கனைகளுக்கும் இடையே மூண்ட வாய்ச் சண்டையால் ரசிகர்கள் பரபரப்படைந்துள்ளனர்.

மரியா ஷரபோவாவின் காதலர் குறித்து செரினா எதையோ சொல்ல, கடுப்பான மரியா முதலில் தன் முதுகைப் பார்க்கட்டும் செரினா. பின்பு மற்றவர்களை விமர்சிக்கலாம் என்று காட்டமாக பேசியிருந்தார்.

இதையடுத்து மரியாவிடம் மன்னிப்பு கேட்டுள்ளார் செரினா. ''நான் மரியா குறித்துப் பேசியதற்காக மன்னிப்பு கேட்க விரும்புகிறேன். இதை வளர்க்க விரும்பவில்லை.

மரியாவைப் போலவே நானும் வருத்தப்படுகிறேன் என்றும் அவரது பெயரை நான் இழுத்திருக்கக் கூடாது என்பதை உணர்கிறேன்'' எனவும் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், ''நானே முதலில் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். அதற்கு நான் தயங்கவில்லை. என்னால் ஒருவரின் மனம் புண்படுகிறது என்றால் அதற்காக நான் வருந்துகிறேன். தவறான பேச்சுக்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். தனிப்பட்ட முறையில் நான் மரியாவுடன் பேசினேன். தனிப்பட்ட முறையிலும் அவரிடம் நேரடியாக நான் மன்னிப்பு கேட்டுக் கொண்டேன்.

திறந்த மனதுடன் அவருடன் பேசினேன். மிகவும் வருத்தப்படுவதாகவும், அவரிடம் கூறி மன்னிப்பும் கேட்டுக் கொண்டேன் விம்பிள்டனுக்கு அனைவரும் ரென்னிஸ் விளையாடத்தான் வந்துள்ளோம். நிச்சயம் அவரது கருத்தை நான் ஏற்பேன். அடுத்த 2 வாரங்களுக்கு எனது கவனம் முழுவதும் ரென்னிஸ் மீது மட்டுமே இருக்கும்'' என்று தெரிவித்துள்ளார் அவர்.(ற)

# அசத் ரௌப் நீக்கம்



சர்வதேசக் கிரிக்கெட் சபையின் எலைற் நடுவர் குழுவிலிருந்து நடுவர்களான அசத் ரௌப், பில்லி பௌடன் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

இருவருக்கும் பதிலாக இங்கிலாந்தைச் சேர்ந்த றிச்சர்ட் இலிங்வேர்த், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த போல் றெய்ஃபல் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

2013-2014 பருவகாலத்திற்கான 12 பேர் கொண்ட எலைற் நடுவர் குழுவிலேயே இந்த மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் நடுவராக அறிவிக்கப்பட்ட அசத் ரௌப், அதன் பின்னர் ஐ.பி.எல் இல் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்று குற்றச்சாட்டுக்கள் அவர் மீது எழுப்பப்பட்டதையடுத்து அந்தத் தொடரிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.

ஆனால், அந்தக் குற்றச்சாட்டுகளுக்கும், அசத் ரௌப் இந்தக் குழுவிலிருந்து நீக்கப்பட்டதற்குமிடையில் சம்பந்தங்கள் கிடையாது எனத் தெரிவித்துள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபை, கடந்த வருடத்தின் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

நடுவர்கள் கடந்த 12 மாதங்களில் வெளிப்படுத்திய திறமை வெளிப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த சர்வதேசக் கிரிக்கெட் சபை, புதிய நடுவர்களை வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளது.

எலைற் பனல் நடுவர்கள்: அலீம் தார், குமார் தர்மசேன, ஸ்டீவ் டேவிஸ், மராயஸ் எரஸ்மஸ், இயன் கூல்ட், ரொனி ஹில், றிச்சர்ட் கெற்றல்புரோ, நைஜல் லோங், புரூஸ் ஒக்ஸென்போர்ட், ரொட் ரக்கர், றிச்சர்ட் இலிங்வேர்த், போல் றெய்பெல்.(ற)

# ஆஸியின் பயிற்சியாளராக டேரன் லீமன் நியமிப்பு



ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் புதிய பிரதம பயிற்றுவிப்பாளராக அவ்வணியின் முன்னாள் வீரர் டெரன் லீமன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அணியின் பயிற்றுவிப்பாளராக இருந்த மிக்கி ஆதரை திடீரென அப்பதவியிலிருந்து நீக்கிய ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை புதிய பயிற்றுவிப்பாளராக லீமனை நியமித்துள்ளது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி அண்மைக்காலமாக சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தத் தவறி வருவதுடன் ஒழுக்கப்பிரச்சினைகளுக்கும் உள்ளாகி வருகின்றது.

இந்நிலையிலேயே மிக்கி ஆதர் நீக்கப்பட்டு புதிய பயிற்றுவிப்பாளராக டெரன் லீமன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் உள்ளூர்ப் போட்டிகளிலும், பிறிஸ்பேர்ண் ஹீற் அணியிலும், அவுஸ்திரேலிய 'ஏ' அணியிலும் பயிற்றுவிப்பாளராக டெரன் லீமன் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்தார்.

அதனையடுத்து லீமனுக்கு ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை இந்த வாய்ப்பை அளித்துள்ளது.

இதனிடையே அணியின் தேர்வாளர்கள் குழுவிலிருந்து அணித்தலைவர் மைக்கல் கிளார்க் விலகியுள்ளார். இந்திய அணியுடனான தொடருக்குப் பின்னர் தன்னை தேர்வுக்குழுவிலிருந்து நீக்குமாறு கிளார்க் கோரியிருந்தார். (ற)

# டில்ஷானின் உபாதை இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கும்

இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திலகரட்ண டில்ஷானின் உபாதை இளைய வீரர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கும் என இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார். எனினும் டில்ஷான் இத்தொடரில் பங்குபெற முடியாமை இலங்கை அணிக்கு இழப்பானது என்பதையும் அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை இங்கிலாந்தில் முடித்துக் கொண்டு இலங்கை அணி இந்திய, மேற்கிந்தியத் தீவு [illegible] பங்குகொள்ளும் முக்கோணத் தொடருக்காக மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்றுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டியில் காயமடைந்த திலகரட்ண டில்ஷான் இத்தொடரில் பங்கு கொள்ள முடியாத போன நிலையில், அவருக் குப் பதிலாக உபுல் தரங்க இத்தொடரில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், டில்ஷானின் இழப்பு இலங்கைக்குப் பாதிப்பானது எனத் தெரிவித்த அஞ்சலோ மத்தியூஸ், ஆனால் அந்த உபாதை காரணமாக இளைய வீரர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறும் என்றும் தெரிவித்தார்.



சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இலங்கை அணி சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியதாகத் தெரிவித்த அஞ்சலோ மத்தியூஸ், இங்கிலாந்து, ஆஸ்திரேலிய அணிகளை வெற்றி கொண்டு அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றமை மிகச்சிறப்பானது எனவும், அதன் காரணமாக இலங்கை வீரர்கள் சிறந்த தன்னம்பிக்கையுடன் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘13’ அடிப்படையில் தீர்வு என உறுதி அளித்தது அரசு தான்

## சாடுகிறது ஐ.தே.க.

கொழும்பு,ஜூன் 27

சர்வதேசத்திடம் வழங்கிய உறுதிமொழிகளை மீறி, சர்வதேச அளவில் இலங்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்தியது அரசுதான் என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

போர் நிறைவடைந்ததன் பின்னர், இலங்கைக்கு எதிரான யோசனை ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை கொண்டு வந்தது. எனினும் இலங்கையின் பிரதிநிதிகள், 13ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் தீர்வை வழங்குவதாக உறுதி வழங்கி இருந்தனர்.

அதேபோன்று அரசும் ஐக்கிய நாடுகள் சபையும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையிலும் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான தீர்வு குறித்தும், உள்ளக விசாரணை தொடர்பிலும் இலங்கை உறுதியளித்தது.

எனினும் இவற்றில் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனாலேயே இலங்கைக்குச் சர்வதேச அளவில் அவப்பெயர் ஏற்பட்டுள்ளது- என்றார்.

(த)

# நவிப்பிள்ளையை மகஸின் சிறைக்கு அழைக்கும் முயற்சி தோற்கடிப்பாம்

கொழும்பு,ஜூன் 27

இலங்கை வரவுள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையுடன் சந்திப்பு ஒன்றை ஒழுங்கு செய்ய முயன்ற, புதிய மகஸின் சிறைச்சாலையில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேக நபர்களின் முயற்சியைத் தாம் முறியடித்து விட்டதாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்தச் சந்திப்புக்கான ஏற்பாடுகளைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மேற்கொண்டு வருவது குறித்த தகவல்களை, அந்தக் குழுவில் உள்ள சிலர் சிறைச்சாலை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியதை அடுத்தே, இந்த இரகசியத் திட்டத்தை தாம் தோற்கடித்ததாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்தத் தகவலை அடுத்து சிறைச்சாலை அதிகாரிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை திடீர்த் தேடுதல்களை நடத்தி, புலம்பெயர் விடுதலைப் புலி உறுப்பினர்களுடன் தொடர்புகளை வைத்துக்கொள்ள சிறைக் கைதிகள் பயன்படுத்திய 18 செய்மதித் தொலைபேசிகளைக் கைப்பற்றியுள்ளனர்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இலங்கை வரவுள்ளார்.

அப்போது, மகஸின் சிறைக்கு வந்து தம்மைப் பார்வையிடுமாறு அவரைக் கோருவதுடன், அதனைப் பயன்படுத்தித் தம்மை விடுவித்துக் கொள்ளவும் விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் திட்டமிட்டிருந்ததாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



கைப்பற்றப்பட்ட அனைத்து செய்மதித் தொலைபேசிகளும், தீவிரவாதப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு எவ்வாறு செய்மதித் தொலைபேசிகள் கிடைத்தன என்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

புதிய மகஸின் சிறைச்சாலையில் விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேக நபர்கள் 300 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.(த)

# சடலம் கரையொதுங்கியது

யாழ்ப்பாணம், ஜூன் 26

புதுக்குடியிருப்பு சாலை கடற்கரைப் பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை கரையொதுங்கியுள்ளது.

மீனவர்கள் வழங்கிய தகவலையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்றதோடு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி நேரில் சென்று விசாரணை மேற்கொண்டார்.

பின்னர் சடலம் மீட்கப்பட்டு மாஞ் சோலை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. இதுவரை சடலம் இனங்காணப்படவில்லை.

(ஐ-435)

# இளங் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 27

நிதி நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்திருந்த குடும்பஸ்தர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டார். கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளியைச் சேர்ந்த யோகராசா ஸ்ரீகாந் (வயது-32) என்பவரே அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டவராவார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் விசாரணைகளின் பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

நிதி நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்த அவர் ஒரு வருடத்துக்கு முன்னர் பணியிலிருந்து விலகியிருந்தார் என்றும் கடன் தொல்லை நீண்ட காலமாக இருந்தது என்றும் விசாரணையில் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணையை மேற்கொண்டார்.

(ஐ-4)

# தெரிவுக் குழுவில் ஜே.வி.பி. ஒருபோதும் பங்குபற்றாது

## ரில்வின் சில்வா அறிவிப்பு

கொழும்பு,ஜூன் 27

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஆராய அமைக்கப்பட்டுள்ள விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெறப் போவதில்லை என ஜே.வி.பி அறிவித்துள்ளது.

மூன்று முக்கிய காரணங்களை முன்வைத்து இந்தத் தெரிவுக்குழுவில் இடம்பெறுவதில்லை என்ற முடிவைத் தமது கட்சி எடுத்துள்ளதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். 13ஆவது திருத்தச் சட்டம் குறித்த அரசின் நிலைப்பாட்டில் தெளிவில்லை,அரசு உண்மையை மறைக்க முயற்சிக்கிறது.அரசின் உள்ளகப் பிரச்சினையில் தலையிட ஜே.வி.பி தயாரில்லை ஆகிய காரணங்களை முன்வைத்தே இந்தத் தெரிவுக் குழுவில் கலந்து கொள்ள்வதில்லை எனத் தீர்மானித்துள்ளதாக ரில்வின் சில்வா மேலும் கூறியுள்ளார்.

SPOKEN ENGLISH

யாருக்காக?

- அரச, தனியார் அலுவலர்கள்
- பல்கலை, உயர்கல்வி மாணவர்கள்
- இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர்
- ஆசிரியர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள்
- தொழில் தேடுவோர்.

சனி, ஞாயிறு பிரிவுகள் - 3 மாதங்கள்

பிரிவு 01 : காலை 8.00 - 10.00 பிரிவு 02 : மு.ப 10.00 - 12.00
பிரிவு 03 : பி.ப 1.00 - 03.00 பிரிவு 04 : மாலை 3.00 - 5.00

பயிற்சி நெறி முடிவில் ஆங்கிலத்தில் சரளமாக பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

இடநெருக்கடியை தவிர்க்க 30.06.2013 இற்கு முன் பதிவு செய்க.

SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்
தொ.பே : 077 621 4567

சிறு நீரகம் தேவை

B⁺ குருதிப்பிரிவுடைய 25-38 வயதிற்கு உட்பட்ட ஆண்கள் சிறுநீரகம் தந்துதவ விரும்பினால் எம்மைத் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
077 5904031

38683

தேவை

யாழ்நகரில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு Clerk தேவை. A/L சித்தி, 40 வயதுக்கு உட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மே/பா உதயன்,
விளம்பர இலக்கம் :- 4460,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாபெரும் பௌதிகவியல் கருத்தரங்கு 2013

2013ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் கணித, உயிரியல் பிரிவு மாணவர்களிற்கான பௌதிகவியல் வழிகாட்டல் கருத்தரங்கு
BY-Prof:S.R.D.ROSA

இடம்- குமாரசாமி மண்டபம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
காலம்- 29.06.2013 (சனிக்கிழமை)
நேரம்- மு.ப 9.00 மணிமுதல்

நுழைவுச் சீட்டுக்களை கருத்தரங்கு மண்டபத்திலும் பெற்றுக்கொள்ளலாம்
தொடர்பு-0771871078

வரப்பிரசாதமான அபூர்வ நிகழ்வு

ஐரோப்பிய நாடான சைப்பிரசில் படிக்க, உழைக்க
"உடனடி அனுமதியும் நேர்முகத் தேர்வும்"
(14 பேருக்கு மட்டும் இவ் அரிய வாய்ப்பு)

சைப்பிர்ஸ் விசா ஆலோசனைத்துறையில் தனித்துவமான விசா விற்பன்னர்கள் கலந்து சிறப்பிக்கும் யாழ். நகரில் முக்கிய நிகழ்வு.

சைப்பிரஸில் படிக்க, உழைக்க (40 வயதிற்குட்பட்டோர்) O/Lம் தேவையில்லை.
- உணவு இலவசம்
- ஒரு இலட்சம் சம்பாத்தியம்
- இருப்பிடம் இலவசம்
- 4 வருட விசா

(50% கட்டணச் சலுகை)

இடம்:- திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் கேட்போர் கூடம்
காலம்:- 30/06/ 2013 ஞாயிறு
நேரம்:- தொலைபேசி மூலம் முற்பதிவின் போது தெரிவிக்கப்படும்.
குறிப்பு:-
மேற்படி நிகழ்வின் மூலம் குறிப்பிட்ட கல்லூரிகளுக்கான அனுமதியையோ அன்றேல் பொருத்தமான தொழிலிற்கான அனுமதியையோ மட்டுமே பெற முடியும். ஆனாலும் குறிப்பிட்ட நாட்டிற்கான விசா மேற்படி நாட்டின் தூதுவராலயத்தில் (Embassy) மட்டுமே பெறமுடியும். இதனை எம் இளைய சமூகம் வேறுபிரித்து அறிந்து கொள்ளல் வேண்டும். இவ்வடிக்குறிப்பு கௌரவ இயக்குநர்சபைக் கட்டளைப்படி இங்கே பிரசுரமாகின்றது.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 0215689090
(38679)



BRITISH COLLEGE OF HIGHER STUDIES
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

Spoken English With Grammar - Quick Learning Course (1 ½ Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிறபகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

Diploma In English (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

IELTS Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 ½ Months

BI Exam-Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

Young Learners for English (YLE) [வயதெல்லை : 7 - 12]
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

Batch - 1 29-06-2013 | Batch - 2 01-07-2013 | Batch - 3 06-07-2013 | Batch - 4 08-07-2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org